YARL OSAI
# யாழ் ஓசை
வார இதழ்
மார்ச் 18 - 24
ஓசை : 01 நாதம் : 20 வெள்ளிக்கிழமை 18.03.2011 வார இதழ் விலை ரூபா: 15.00

# மாணவன் கபில்நாத் கொலை வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்திற்கு மாற்றம்



யாழ். நகரப்பகுதியிலுள்ள விக்டோரியா வீதி 15 வருடங்களுக்குப் பின்னர் பொது மக்களின் பாவனைக்கு நேற்றுத் திறந்து விடப்பட்டது. இதன்போது யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் , யாழ். மாநகர மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் வீதியைத் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். (படம்- அலுவலக நிருபர்)

## சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் உத்தரவு

கொடிகாமம்,

கடந்த வருடம் மார்ச் மாதம் 14 ஆம் திகதி சாவகச்சேரி பகுதியில் கடத்திக்கொலை செய்யப்பட்ட திருச்செல்வம் கபில்நாத் படுகொலையுடன் தொடர்புடைய வழக்கு நேற்று யாழ். மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. கபில்நாத் படுகொலையுடன் தொடர்புடைய முதலாம் எதிரியான ஜீவன் தலைமறைவாகியதையடுத்து சாவகச்சேரி நீதிமன்றத்தால் ஏற்கனவே பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. ஏனைய மூன்று சந்தேக நபர்களைக் கைதுசெய்த பொலிஸார் சாவகச்சேரி (6ஆம் பக்கம் பார்க்க)

## சுபாஷ் ஹோட்டல் படையினரால் கையளிப்பு; விக்டோரியா வீதியும் திறப்பு

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த யாழ். போதனா வைத்தியசாலையின் பின் வீதியான விக்ரோறியா வீதி மக்கள் பாவனைக்காக நேற்றுக் காலை முதல் திறந்துவிடப்பட்டது.

நேற்றைய தினம் யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க மற்றும் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகஸ்வரி பற்குணராசா, பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் இணைந்து சம்பிரதாயபூர்வமாக இவ் வீதியை மக்கள் பாவனைக்காகத் (6ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானின் வெளிநாட்டு உதவி மறுபரிசீலனை செய்யப்படும்?

### இலங்கைக்கே அதிக பாதிப்பு

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாரிய பூமியதிர்ச்சி சுனாமி மற்றும் அணுக் கதிர்வீச்சு காரணமாக பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள ஜப்பான் தனது வெளிநாட்டு உதவித்திட்டத்தை மறு பரிசீலனை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக ஜப்பானிய உதவியை பெரிதும் எதிர்பார்த்துள்ள இலங்கை போன்ற நாடுகள் பாரிய தாக்கத்தை எதிர்நோக்க நேரிடும் என ராஜிய (6ஆம் பக்கம் பார்க்க)

## புலி ஆதரவாளர் மும்பையில் கைது

மும்பை,

இலங்கையை சேர்ந்தவரும், மும்பையில் கடந்த 4 ஆண்டுகளாக இருந்தவருமான ராஜன் சிலிதுரியா என்ற கார்த்திக் நவி மும்பையில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். அவருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் தொடர்பு இருந்தது என்று அவரை கைது செய்த (6ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் தமிழர் மகா சங்கத் தலைவர் மீது தாக்குதல்

அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கத்தின் தலைவர் கல்யாண சுந்தரத்தின் மீது நேற்று வியாழக்கிழமை மாகாண அமைச்சர் ஒருவரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வியாழக்கிழமை பிற்பகல் 11.30 மணியளவில் அக்கரைப்பற்றில் இருந்து அளிக்கம்பைக்கு சென்று கொண்டிருந்தபோது கண்ணகிபுரத்தில் வழிமறிக்கப்பட்டு இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தாக்குதலுக்குள்ளான சங்கத்தின் தலைவர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் (6ஆம் பக்கம் பார்க்க)



# புலிகளுடனான இறுதி யுத்தத்துக்கு இந்தியா ஆதரவளிக்க நாராயணன் பிரதான காரணம்

## - வீக்கிலீக்ஸ் தகவல்

விடுதலைப் புலிகளுடனான இறுதி யுத்தத்துக்கு இந்தியா ஆதரவளிக்க அன்றைய இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனே பிரதான காரணம் என்பதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை மேற்கோள்காட்டி விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள தகவல் குறிப்பில் நாராயணனை பிரதமர் அலுவலகத்தில் இருக்கும் ஒரு கேரள மாபியா என்று வர்ணித்திருப்பதுடன், காங்கிரஸ் கட்சியின் பாரம்பரிய புள்ளியாகவும் சித்திரித்துள்ளது.

சோனியா காந்தி குடும்பத்தின் நீண்ட கால நம்பிக்கைக்குரிய விசுவாசியான அவர்தான் இலங்கையில் நடந்த இரத்தக் களரியைத் தடுப்பதில் இந்தியாவைத் தலையிடவிடாமல் தடுத்ததாக இந்தியாவிலுள்ள அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் மீதான அவரது தீவிர எதிர்ப்புணர்வே அதற்கான பிரதான காரணம் என்றும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை மேற்கொள்காட்டி விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

# பொலநறுவையில் வாக்கு சாவடிமீது குண்டுத்தாக்குதல்

பொலநறுவையில் வாக்குச் சாவடியொன்றின் மீது நேற்றுக் காலை குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

பொலநறுவையின் அரலங்கவில பிரதேசத்தில் அமைந்துள்ள மகுல்தமண வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடி மீதே நேற்று அதிகாலை மூன்ற மணியளவில் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவம் காரணமாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

ஆயினும் குண்டுத்தாக்குதல் காரணமாக வாக்களிப்பு நிலையத்தின் பணிகளில் தடங்கல் ஏற்படவில்லை என்றும் வழமை போன்று காலை ஏழு மணி தொடக்கம் வாக்களிப்பு ஆரம்பமானதாகவும் பொலநறுவை மாவட்டதேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி அறிவித்துள்ளார்.

அத்துடன் தற்போது வாக்களிப்பு நிலையத்திற்கு இராணுவத்தினரின் மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# வெளி மாவட்ட ஆசிரியைகளுக்கு விடுதி வசதிகள் வழங்குவதற்கு ஏற்பாடு

அச்சுவேலி,

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இந்தவருடம் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள வெளிமாவட்ட ஆசிரியைகளுக்கு விடுதி வசதி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

கலாசாலை விடுதியில் தங்கியிருந்து பயிற்சியைத் தொடரவிரும்பும் ஆசிரியைகளின் விபரங்கள் திரட்டப்பட்டுகின்றன.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியைப் பெறுவதற்கு கடந்த 14 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பதிவின் போது 250 வரையிலான ஆசிரியர்கள் தம்மைப் பதிவுசெய்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் ஆவர்.

அண்மைக்காலத்தில் கலாசாலைச் சூழலில் வீடுகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு மற்றும் வாடகை அதிகரிப்பு மற்றும் பாதுகாப்புப் பிரச்சினையை கருத்தில் கொண்டு ஆசிரியைகள் வெளியில் தங்குவதற்கு விரும்பாமல் விடுதியில் தங்கியிருந்து பயிற்சியைத் தொடர்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

காலச்சூழலைக் கருத்தில் கொண்டு கலாசாலை விடுதியில் ஏற்புடைய அளவுக்கு ஆசிரியர்களை தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை ஆசிரிய கலாசாலை நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பாக கோப்பாய் ஆசரியர் கலசாலை அதிபர் கே. கணபதிப்பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில், கலாசாலை விடுதியில் இயல்புநிலையில் 150 ஆசிரியர்கள் வரையில் தங்கியிருந்து பயிற்சி பெறமுடியும். ஆனால், நலன்புரி நிலையமாக விடுதி பயன்படுத்தப்பட்ட பின்னர் பொருத்தமான முறையில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாலும் மற்றும் ஆசிரியைகளுக்கான கட்டில், மெத்தை வசதிகள் பொருத்தமான அளவு இல்லாமலும் காணப்படுகின்றது.

வெளிமாவட்ட ஆசிரியைகளின் நலனை கருத்திற்கொண்டு விடுதியில் அவர்களை தங்கவைப்பதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என் தெரிவித்தார்.

# வாள் வெட்டில் நபர் உயிரிழப்பு

## கட்சிக்குள்ளேயே மோதல்

கேகாலை புளத்கோபிட்டியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்கள் மத்தியில் இடம்பெற்ற இந்த மோதல் சம்பவத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் வாள் வெட்டுக்கு இலக்கான நிலையில் கேகாலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அங்கு அவரது உயிர் பிரிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் கேகாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# முயல் பொறியை பார்க்க சென்றவரை காணவில்லை என மனைவி முறைப்பாடு

முயலுக்கு வைத்த பொறியை எடுப்பதற்காக காட்டுக்குச் சென்ற முன்னாள் போராளியான குடும்பஸ்தர் ஒருவர் மல்லாவி பிரதேச கல்லுவான் பகுதியில் காணாமல் போயுள்ளதாக மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வடமராட்சியைச் சேர்ந்த புஸ்பராசா விஜயபாபு (வயது 25) என்பவர் போராளியாக இருந்த காலத்தில் மல்லாவி பிரதேசத்தில் வாழ்ந்து வந்துள்ளார்.

யுத்தத்தின்போது இராணுவத்தினரால் பிடிக்கப்பட்ட இவர் அண்மையில் தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார். மேலும் இவர் தடுப்பு முகாமில் இருந்த காலத்தில் படையினரால் திருமணம் செய்து வைக்கப்பட்டு தற்போது மனைவி கர்ப்பவதியாகவும் உள்ளாராம்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை காலை 8 மணிக்கு முயலுக்கு வைத்த பொறியை பார்ப்பதற்கென காட்டுப் பகுதியை நோக்கிச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என இவரது மனைவி மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கொடுத்துள்ளார்.

இதனையடுத்து தற்போது இராணுவத்தினரும் பொலிஸாரும் காட்டுப் பகுதியில் தேடுதல் நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# சைப்பிரஸில் படுகொலை செய்யப்பட்ட இலங்கை பெண் கழிவு நீரோடையிலிருந்து மீட்பு

சைப்பிரஸ்ஸில் காணாமல்போன இலங்கைப் பெண்ணொருவர் கழிவு நீரோடை ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 37 வயது நிரம்பிய குறித்த பெண் தாக்கப்பட்டு கொங்ரீட் கல் ஒன்றுடன் பிணைத்து கட்டப்பட்ட நிலையில் கழிவு நீர் ஓடையில் வீசப்பட்டிருந்தார்.

இவர் சைப்பிரஸின் மொனாகுருளி என்ற இடத்தில் அமைந்துள்ள பன்றி பண்ணையில் கடந்த ஒன்றரை வருடகாலமாக பணிபுரிந்து வந்த நிலையில் கடந்த மூன்றாம் திகதி முதல் காணாமல் போனதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து சைப்பிரஸ் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் அவருடன் பணியாற்றிய தொழிலாளர்கள் அங்குள்ள கழிவு நீர் ஓடையில் கை ஒன்று வெளியில் நீட்டிக்கொண்டிருப்பதாக காண்பித்ததையடுத்து அங்கு தேடுதல்களை மேற்கொண்ட பொலிஸார் சடலத்தை மீட்டதுடன் அது காணா[illegible] போன மேற்படி 37 வயது நிரம்பிய பெண்ணுடையது என அடையாளம் கண்டனர்.

சடலத்துக்குரிய பெண்ணின் கால்கள் கட்டப்பட்ட நிலையில் அவரது இடுப்பு பகுதியில் கொங்ரீட் கல் ஒன்று கட்டப்பட்டு இருந்ததுடன் அவரது முகத்தில் சிராய்ப்பு காயங்களும் காணப்பட்டுள்ளன. அத்துடன் அவரது கையும் அடித்து முறிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை அவர் 10 நாட்களுக்கு முன்னரே படுகொலை செய்யப்பட்டு வீசப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். குறிப்பாக அவர் காணாமல் போன சமயமே படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப் படுகின்றது. இது தொடர்பான விசாரணைகளை சைப்பிரஸ் பொலிஸார் முடுக்கிவிட்டுள்ளனர்.

# பிரதி வெளிவிவகார அமைச்சர் மன்னார் ஆயரை சந்தித்து பேச்சு

## அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்து ஆராய்வு

(நமது நிருபர்)

மன்னார் பிரதேசத்துக்கு அண்மையில் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்த பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்பு ஆண்டைகையை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், உட்கட்டமைப்பு மேம்படுத்தல் செயற்திட்டங்கள், பொருளாதார நிலைமைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பு தொடர்பில் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா கருத்து வெளியிடுகையில் :-

மன்னார் பிரதேசத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட நான் மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடினேன். இதன்போது பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

முக்கியமாக மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், உட்கட்டமைப்பு மேம்படுத்தல் திட்டங்கள், பொருளாதார நிலைமைகள் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்தி தருமாறு இராயப்பு ஜோசப்பு ஆண்டகை என்னிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில் இதற்கான ஏற்பாடுகளை செய்துகொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஆண்டகையிடம் தெரிவித்தேன்.

ஜனாதிபதியை சந்தித்து பேச்சு நடத்துவதற்கு மன்னார் ஆயருக்கு சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன் என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமுதாய மாற்றங்கள் விழிப்புணர்வுடன் கூடியனவாக இருத்தல் வேண்டும்

**- வை. இராசரத்தினம்**

சமுதாய மாற்றங்கள் விழிப்புணர்வுடன் கூடியனவாக இருத்தல் வேண்டும். பாரதியார் உலகுக்கு மீண்டும் வந்தால் தான் கண்ட புதுமைப் பெண் இவர்களா என்று பேதலிப்பான். பெண்கள் பெண்களை நிந்திக்கும் காரியங்களில் இருந்து விடுபட்டு அவர்களுக்கு வழிகாட்டிகளாக மாறவேண்டும். தமக்கேற்படும் இடர்பாடுகளை மனவலிமையுடன் எதிர்கொள்ளக் கூடிய துணிவைப் பெறவேண்டும் என்று ஓய்வுபெற்ற கிராமசேவகர் வை. இராசரத்தினம் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் மார்ச் 8 ஆம் திகதி கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சங்கத் தலைவி திருமதி. லோ. நவரட்ணம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், யாழ்ப்பாணச் சமூகம் தனக்கென தனியான கலாசார விழுமியங்களைக் கொண்டது. அதைப் பாதுகாக்க வேண்டியது எம் ஒவ்வொருவரது கடமையாகும்.

பிள்ளைகளைத் தண்டிக்கவேண்டிய இடத்தில் தண்டித்து அரவணைக்க வேண்டிய இடத்தில் அரவணைக்க வேண்டும். சுதந்திரம், பாசம் என்று கூறி பிள்ளைகளைக் கண்டிக்காது விடுமிடத்து அதன் பின் விளைவுகள் பெரும் துயரைத் தரலாம். அவர்கள் நன்மை - தீமையைப் பிரித்துணர முடியாதவர்கள். அனுபவம்உள்ள பெரியோர்தான் அவர்களை நல்ல வழிகாட்டி மேன்மையான பிள்ளைகளாக உருவாக்கவேண்டும்.

பெரியவர்கள் காட்டும் நல்வழியில் நடந்து, பல சவால்களை வென்று சமூகத்தின் முன்மாதிரியான பிரஜைகளாக தம்மை உருவாக்கிக் கொண்டு சமூகத்தின் உயர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும் என்றார்.

நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர், உதவித்திட்டப் பணிப்பாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், வாழ்வாதார கடன் வழங்கும் திட்ட அதிகாரி உட்பட பலர் பங்குபற்றினர். சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு சங்கம் நடத்திய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# மாற்றுவலுவுள்ளோரின் தேவை மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட்டுவரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

கைதடி,

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் வெளிக்கள அலுவலர்களால் யாழ். மாவட்டத்திலுள்ள மாற்றுவலுவுள்ளோருக்குரிய தேவை மதிப்பீட்டுப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இம் மதிப்பீடு நடைபெற்றது. ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளுக்குரிய தேவை பற்றிய மதிப்பீடுகள் மிக விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன. மாற்றுவலுவுள்ளோரைச் சந்தித்து அவர்களுக்கு எந்தெந்த வகையான உதவிகளை வழங்கமுடியுமென ஆராயப்பட்டு தகவல்கள் பெறப்படுகின்றன.

# 'செந்நெறியோர்' விருது அறிமுகம்

தெல்லிப்பழை,

அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தினரால் 'செந்நெறியோர்' எனும் உயர்விருது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அளவெட்டிக் கிராமத்தின் கலை, பண்பாடு, ஆன்மிகம் மற்றும் சமூகசேவையில் தாம் சார்ந்தும் குடும்பம் சார்ந்தும் ஒருவர் ஆற்றிய பங்களிப்பை அவர் மறைந்தபின்னர் நன்றியுணர்வோடு நினைவுகூரும் முகமாக அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தின் மிக உயர்ந்த விருதாக செந்நெறியோர் விருது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டு முதல் வருடந்தோறும் வழங்கப்படவுள்ள வருடாந்த சாதனையாளர் கௌரவிப்பு- 2010 நிகழ்வில் அமரர்களான பண்டிதர் க. நாகலிங்கம், செ. வேலாயுதபிள்ளை, ஞா. பத்திநாதர், சி. செந்தில்நாதன் ஆகியோருக்கு இவ்விருது வழங்கப்பட்டது. இவ்விருதினை இவர்களுடைய குடும்ப அங்கத்தினர் பெற்றுக்கொண்டனர்.

# கோட்டப்போட்டியில் முதலிடம்

தெல்லிப்பழை,

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி 225 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

நீர்வேலி அதியார் இந்துக் கல்லூரி இரண்டாமிடத்தையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றன.

கோப்பாய் கல்விக்கோட்டத்துக்குட்பட்ட 37 பாடசாலைகள் இப்போட்டியில் கலந்துகொண்டன.

# குப்பை கொட்டியோருக்கு அபராதம் விதிப்பு

சாவகச்சேரி,

பொது இடத்தில் குப்பை கொட்டிய 3 நபர்களுக்கு எதிராக கொடிகாமம் பொலிஸாரால் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சம்பந்தப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து தலா 300 ரூபா வீதம் அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.



கிழக்கு பல்கலைக்கழகங்களில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட உதவிகளற்ற மாணவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் சேகரிக்கப்பட்ட நிதியை ஊழிய சங்கத் தலைவர் எஸ்.தங்கராஜா, கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் கே.பிரேம்குமாரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

# சமுர்த்தி வங்கி, மகா சங்கங்களுக்கு புதிதாக பயிலுனர்களை தெரிய அனுமதி

## யாழ். மாவட்ட செயலகம் நடவடிக்கை

மானிப்பாய்,

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் கீழ் இயங்கும் சமுர்த்தி வங்கிகள், சமுர்த்தி மகா சங்கங்களுக்கு பயிலுனர்களை நியமிப்பதற்கான அனுமதியினை யாழ். மாவட்ட செயலகம் பிரதேச செயலகங்களுக்கு வழங்கியுள்ளது.

சமுர்த்தி வங்கிச் சங்கங்கள், சமுர்த்தி மகா சங்கங்கள் என்பன ஆளணிப் பற்றாக்குறை காரணமாக நீண்டகாலமாக பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வந்தன . அத்துடன், சுமார் 10 வருடங்கள் கடந்த நிலையிலும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எவரும் புதிதாக அரசினால் நியமிக்கப்படவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே மேற்படி வங்கி, மகா சங்கங்களின் செயற்பாடுகளை துரிதப்படுத்தும் முகமாகவும் ஆளணிப் பற்றாக்குறையினை நிவர்த்திசெய்யு முகமாகவும் சமுர்த்தி உதவி ஆணையாளரினால் பிரதேச செயலர்களுக்கு பயிற்சியாளர்களை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி நெறியானது ஒவ்வொரு 6 மாத காலத்துடனும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், 6 மாதம் முடிவடைய புதிய பயிற்சியாளர்களை தெரிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும எனவும் இப் பயிற்சிநெறியினைப் பெறவிரும்புபவர்கள் அரச அல்லது அரச நிர்வாகத்தில் உள்ள நிறுவனம் ஒன்றில் பயிற்சியினை நிறைவுசெய்துள்ளவராக இருத்தல் வேண்டும். இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 150 ரூபா வீதம் உதவு தொகை வழங்கப்படும்.

# சட்டவிரோதமாக மாட்டிறைச்சி எடுத்துச்சென்றவருக்கு அபராதம்

சாவகச்சேரி,

சட்டவிரோதமாக மோட்டார் சைக்கிளில் மாட்டிறைச்சி 28 கிலோ கொண்டு சென்ற ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் கைதுசெய்து 14 ஆம் திகதி திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

சம்பந்தப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறின் ஒரு மாதகால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும், சான்றுப்பொருளான கைப்பற்றப்பட்ட மாட்டிறைச்சியை புதைத்து அழிக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

# திருமணத்திற்கான சமுர்த்தி உதவித் தொகை அதிகரிப்பு

மானிப்பாய்,

சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நிதியத்தினூடாக வழங்கப்பட்டு வரும் திருமணத்திற்கான கொடுப்பனவுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி முத்திரையின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுவரும் நிதியின் மூலம் வழங்கப்பட்டுவரும் திருமணத்திற்கான கொடுப்பனவானது 3 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சமூகப்பாதுகாப்பு நிதியத்தினூடாக மகப்பேறு, மரணம், திருமணம் என்பனவற்றிற்கு கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும் திருமணத்திற்கான கொடுப்பனவாக ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வந்ததுடன், வருடம் ஒரு திருமணத்திற்கு மட்டும் என வரையறுக்கப்பட்டுள்ள இக் கொடுப்பனவு தற்பொழுது கால அடிப்படையின்றி ஒரு குடும்பம் இரண்டு திருமணத்திற்கான கொடுப்பனவைப் பெறலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yarl Osai
# யாழ் ஓசை
2011 மார்ச் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# யாழில் கைத்தொழில் துறை ஊக்குவிக்கப்படவேண்டும்

வெளிநாட்டு ஏற்றுமதியை மையமாகக்கொண்டு கைத்தொழில் துறைகளை மேம்படுத்தவேண்டியது அவசியம். இதனால் வேலைவாய்ப்புக்களும் முதலீடுகளும் அதிகரிக்கும் என யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். வடமாகாண அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவின் மகளிர் அபிவிருத்தி நிலையம் அண்மையில் நடத்திய தையல் மனையியல் கண்காட்சி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தென்னிலங்கையுடன் ஒப்பிடுகையில் குடாநாட்டின் கைத்தொழில் உற்பத்தி கலைப்பொருட்களின் உற்பத்தி குறைவானதாகவே காணப்படுவதாகவும் இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படவேண்டும் எனவும் யாழ். அரச அதிபர் கூறியுள்ளார்.

வடக்கை பொறுத்தமட்டில் கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக கைத்தொழில் பொருள் உற்பத்தி கைவினைப் பொருள் உற்பத்தி மற்றும் ஏனைய சுயதொழில் கட்டமைப்புக்கள் பாதிக்கப்பட்டன. இதனால் நாட்டின் தேசிய பொருளாதார வளர்ச்சியிலான வடக்கு மாகாணத்தின் பங்களிப்பு வீதம் பாரியளவில் வீழ்ச்சியடைந்தது. அத்துடன் சுயதொழில் வாய்ப்பு திட்டங்கள் பாதிக்கப்பட்டதுடன் வேலைவாய்ப்புக்ளிலும் வீழ்ச்சிகள் ஏற்பட்டன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின்போது சுயதொழில் முயற்சிகளுக்கும் கைத்தொழில் உற்பத்தி திட்டங்களுக்கும் உள்ளூர் தொழிலாளர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். அப்போதுதான் பாதிக்கப்பட்ட மக்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைவதற்கு சிறந்த வழிகள் ஏற்படும். அந்த வகையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெளிநாட்டு ஏற்றுமதியை அடிப்படையாகக்கொண்ட கைத்தொழில் உற்பத்திகளை மேம்படுத்தவும் கைவினைப் பொருள் மற்றும் கலைப்பொருள் உற்பத்திகளில் கவனம் செலுத்துவும் நடவடிக்கைகள் அவசியமாகும்.

தொழில் வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகள் இவ்வாறான சுயதொழில் மற்றும் கைத்தொழில் உற்பத்தி திட்டங்களில் ஈடுபடும்போது அவர்கள் மேலதிக வருமானங்களை பெற்றுக்கொள்ள வழியேற்படுவதுடன் நாட்டின் தேசிய உற்பத்தி அதிகரிப்புக்கு சிறந்த பங்களிப்பை வழங்க முடியும். மேலும் யுத்தம் காரணமாக கணவனை இழந்துள்ள பெண்களும் இவ்வாறான கைத்தொழில் உற்பத்தி துறையில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கப்படுவது அவசியமாகும்.

இவ்வாறான வேலைத்திட்டங்களின் மூலம் வறிய குடும்பங்கள் வருமானங்களை பெற்றுக்கொள்ள வழியேற்படும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் தொழில் வாய்ப்புக்கள் இன்றி இருக்கும் குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரங்களை கொண்டுநடத்துவதற்கு இவ்வாறான கைவினைப் பொருள் மற்றும் கைத்தொழில் உற்பத்தி சுயதொழில் முயற்சிகள் சிறந்த தீர்வாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

யாழ்ப்பாணத்தில் ஒருகாலத்தில் கற்பகதருவான பனையிலான பயன்தரும் பொருட்கள் அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டன. இதன்மூலம் மக்கள் சிறந்த வருமானங்களை பெற்றனர். ஆனால் யுத்தம் காரணமாக இவ்வாறான தொழில் முயற்சிகளிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டன. அவற்றை பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவது இன்றியமையாததாகும்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு தங்கள் வாழ்வாதாரங்களை கொண்டுநடத்துவதற்கு இவ்வாறான சுயதொழில் திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும். அதற்கான தொழில் பயிற்சிகள் ஆர்வமுள்ளவர்களுக்கு வழங்கப்படுவது அவசியமாகும்.

வட பகுதி மக்களை பொறுத்தமட்டில் ஜப்பான் மக்களை போன்று சாம்பர் மேட்டிலிருந்தும் துரிதமாக எழக்கூடிய கடின உழைப்பாளிகளாவர்.

அந்த வகையில் எந்தவொரு தொழிலையும் ஏற்றுச் செய்யக்கூடிய திறமை உள்ளதால் அவர்களுக்கு உரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க சகல தரப்பினரும் முன்வரவேண்டும். அதன்மூலம் அவர்களின் பொருளாதாரம் மாத்திரமின்றி நாட்டின் பொருளாதாரமும் முன்னேற்றமடையும் என்பது திண்ணம்.

# தமிழ் மக்களின் அரசியல் ஸ்திரத்தை குலைக்கும் ஏகத்தலைமைப் பிடிவாதம்

நம்மில் பலர் சிறுவயதில் அம்புலிமாமாக்கதைகளைப் படித்திருக்கலாம். அம்புலிமாமாக் கதையில் வரும் வேதாளம், விக்கிரமாதித்திய மன்னனின் கதையில் அதிருப்தியடைந்து மீண்டும் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுவதாகச் சிறுவயதில் படித்தது நம்மில் பலருக்கும் நினைவிருக்கும்.

பொதுவாக ஒரு விடயம் எரிச்சலூட்டும் வகையில் மீண்டும் மீண்டும் நிகழும்போது வேதாளம் முருங்கைமரத்தில் ஏறிவிட்டதென்று நாம் சொல்லிக்கொள்வதுமுண்டு. இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா அல்லது தமிழரசுக் கட்சியா என்ற விவாதம் இந்த வேதாளக் கதையையே நமக்கு நினைவுபடுத்துகிறது.

ஈழத் தமிழர்களின் தலைவிதியை தீர்மானிக்கக் கூடியது என்று நம்பப்படும் அரசியல் அமைப்பொன்றை அம்புலிமாமாக் கதையுடன் ஒப்பிடவேண்டிய நிலைக்கு நமது அரசியல் தரம் தாழ்ந்திருப்பது மிகவும் துரதிஸ்டவசமானதே!

அரசியல் ரீதியில் நமது உரையாடல்கள் எந்தவித முன்னேற்றமுமற்று ஓரிடத்திலேயே சுழன்று கொண்டிருக்கிறது. இதனை ஆங்கிலத்தில் Re-inventing the wheel என்று சொல்லுவார்கள். நமது மொழியிலும் 'சுற்றிச் சுற்றி சுப்பற்ற கொல்லைக்குள்' என்றும் பழமொழியுண்டு.

தமிழரசுக்கட்சி கடந்த 27-2-2011 அன்று யாழ்ப்பாணத்தில் நடாத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதில் தமக்கு எந்தவிதமான ஆர்வமும் இல்லையென்று தெரிவித்ததையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலம் குறித்துக் கேள்வி எழுந்துள்ளது.

இதில் கருத்துத் தெரிவித்திருந்த தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்களான சி.வி. கே.சிவஞானம் மற்றும் குலநாயகம் - தமிழ்க் கட்சிகள் கூட்டணியாக இருந்தபோதும் கூட்டமைப்பாக இருந்தபோதும் தலைமை தமிழரசுக் கட்சியிடமே இருந்தது. இப்போதும் எப்போதும் அப்படியேதான் இருக்கும் என்றும் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தக் கருத்தானது கூட்டமைப்பை பதிவு செய்வது தொடர்பான பிரச்சினைகளுக்கும் கொள்கைசார் முரண்பாடுகளுக்கும் எந்தவொரு தொடர்புமில்லை என்பதை துலாம்பரமாக்கியுள்ளது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தலைமை எங்களிடம் மட்டுமேதான் இருக்கவேண்டும் என்னும் ஏகத்தலைமை வாதத்தினால் ஏற்பட்ட பிரச்சினையே இது.

முன்னர் புலிகளிடம் இருந்த ஏகத்தலைமைவாத நிலைப்பாட்டை புலிகளற்றசூழலில் தமிழரசுக்கட்சி தன்வசப்படுத்த முயல்வதிலிருந்தே அனைத்து பிரச்சினைகளும் முளைவிடுகின்றன. அவ்வாறானதொரு ஏகத் தலைமை வாதம் சரியானதுதானா? புலிகளின் ஏகத்தலைமைத்துவ வாதம் ஈழத் தமிழ் மக்களை எங்கு கொண்டுவந்துவிட்டிருக்கிறது? எனவே கடந்தகால அனுபவங்களில் இருந்து எந்தவொரு படிப்பினைகளையும் உள்வாங்கிக் கொள்ள முடியாதளவிற்கு தம்மைத் தாமே தலைமைகள் எனக் கூறுவோர் அடி முட்டாள்களாக இருக்கின்றனரா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதற்கு, ஒவ்வொருவரும் பலவாறான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். ஆனால், பலரும் அறிந்த விடயம் விடுதலைப் புலிகள் வலுவாக இருந்த காலத்தில் தாங்கள் ஜனநாயகத்திற்கு எதிரானவர்கள் அல்லர் என்பதை வெளியுலகிற்குகாட்டும் வகையிலேயே இவ்வாறானதொரு கூட்டை அவர்கள் ஊக்குவித்தனர்.

பொதுவாகவே புலிகள் தமக்கு வெளியில் எந்தவொரு மாற்று அமைப்புக்களையும் அங்கிகரித்ததில்லை . இது ஒன்றும் இரகசியமானதுமல்ல. ஆயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அவர்கள் ஊக்குவித்தனர். த.தே.கூட்டமைப்பிற்கு பின்னால் புலிகள் இருந்ததன் காரணத்தினால்தான் கூட்டமைப்பால் 22 ஆசனங்களைப் பெறமுடிந்தது.

புலிகள் சொன்னார்கள் என்ற காரணத்தினால்தான் துரைரட்ணசிங்கம், தங்கேஸ்வரி, பத்மினி சிதம்பரநாதன் போன்ற அரசியல் பின்புலம் இல்லாதவர்கள் பலர் பாராளுமன்றம் செல்லவும் முடிந்தது. ஆனால், இப்போது கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கு தமிழரசுக்கட்சி உரிமை கோருவதாக செய்தி வெளியாகியிருப்பது ஆச்சரியமான ஒன்றாகும்.

தமிழரசுக் கட்சியால் எதனையும் எக்கலத்திலும் நிறைவேற்ற முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிரதான கட்சியாக இருப்பது தமிழரசுக் கட்சியாகும். நாடாளுமன்றத்தில் எட்டு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. எனவே தமிழரசுக்கட்சி பிரதானம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இது ஒன்றும் புதுமை இல்லை . தெற்கிலும் இதுபோன்ற நிலைமைதான் உள்ளது. 'ஐ.தே.க. , சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு கூட்டமைப்பை எந்தக் கட்சி உருவாக்கியதோ அதே அந்தக் கூட்டமைப்பின் தலைமையாகவும் இருக்கிறது.

**நந்தன் அரியரட்ணம்**

அதுபோலத்தான் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கிய தமிழரசுக் கட்சிதான் இந்தக் கூட்டமைப்பின் தலைமையாகும்' (28-2-2011 பத்திரிகைச் செய்தி)

இங்கு கருத்துத் தெரிவித்திருக்கும், தமிழரசுக் கட்சியின் துணைச் செயலர் சீ.வி.கே.சிவஞானம், 'அண்மைக் காலமாகக் கூட்டமைப்பை பதிவு செய்யாமைக்கான காரணம் என்ன? என்பது தொடர்பில் காரசாரமான விவாதங்கள் எழுந்துள்ளன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயகாந்த் தலைமையில் மூன்றாவது அணி? தமிழக அரசியலில் பெரும் பரபரப்பு



**சென்னை,**

தே.மு.தி.க. தலைமையில் மூன்றாவது அணியை ஏற்படுத்தி தேர்தலை சந்திக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி திட்டமிட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அ.தி.மு.க., கூட்டணியில் தே.மு.தி.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், புதிய தமிழகம் உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன. இந்நிலையில், சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. போட்டியிடும் 160 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. அதில், அ.தி.மு.க. அதிக வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகளை தன்வசமாக்கி கொண்டதாக கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் அதிருப்தியடைந்துள்ளனர்.

இதையடுத்து தே.மு.தி.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், புதிய தமிழகம், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் தனித்தனியே ஆலோசனை மேற்கொள்கின்றனர். இதில் அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறுவது குறித்து விவாதித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அ.தி.மு.க.வில் இருந்து வெளியேறும் கட்சிகளை தே.மு.தி.க. தலைமையில் ஒருங்கிணைக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி திட்டமிட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே பேச்சுவார்த்தைக்கு அழைக்காமல் காலதாமதம் செய்து வந்ததால் அ.தி.மு.க. மீது இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் அதிருப்தியில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

கேட்ட தொகுதிகளை கொடுக்காமலும், பேச்சுவார்த்தைக்கு அழைக்காமலும் இருந்த அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து விலகுவதாக அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சியின் தலைவர் நடிகர் கார்த்திக் அறிவித்திருந்தார். மேலும் அ.தி.மு.க.கூட்டணியில் இருந்து ம.தி.மு.க. விலகும் பட்சத்தில், ம.தி.மு.க.வுடன் சேர்ந்து தேர்தலை சந்திக்க தயார் என்றும், அதேபோல் அ.தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறும் அனைத்துக் கட்சிகளுடன் சேர்ந்து தேர்தலை சந்திக்க தயார் என்றும் கார்த்திக் கூறியிருந்தார்.

அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள பெரும்பாலான கட்சிகள் அதிருப்தி அடைந்துள்ளதால், தமிழகத்தில் மூன்றாவது அணி அமையுமா என்று அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## சிவாஜி பற்றி அவதூறுபேசியதாக நடிகர் சத்தியராஜுக்கு சந்திரசேகரன் கண்டனம்

**சென்னை,**

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பற்றி குறை கூறுவதற்கு சத்தியராஜ் போன்றோருக்கு அருகதை இல்லை என்று சிவாஜி சமூக நலப் பேரவை தலைவர் கே.சந்திரசேகரன் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நடிகர் விஜய் அரசியலுக்கு வரும் விஷயம் குறித்து கருத்துத் தெரிவித்த போது அரசியலில் சிவாஜி தோற்றவர், எனவே அவரை முன்னுதாரணமாகக் கொண்டு அரசியலுக்கு வரக் கூடாது என்று நடிகர் திலகம் சிவாஜி பற்றி அவதூறாகப் பேசியுள்ளனர்.

இது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். மேடையில் உள்ளவர்களைப் புகழ வேண்டும் என்று நினைத்தால் எது வேண்டுமானாலும் புகழ்ந்து கொள்ளட்டும். ஆனால், மறைந்த நடிகர் திலகம் போன்றோரை வீணாக வம்புக்கு இழுத்தால் இலட்சோப லட்சம் சிவாஜி ரசிகர்கள் கொதித்தெழுவார்கள்.

பெரியார், அண்ணா, காமராஜர் காலத்திலிருந்து அரசியலில் ஈடுபட்டு பலரை ஆளாக்கியவர், உருவாக்கியவர் சிவாஜி. அவர் ஒரு தேர்தலில் தான் தோல் வியடைந்தாரே தவிர அரசியலில் தோற்கவில்லை. அப்படி அவர் அரசியல் தோற்றவராக இருந்தால், தேர்தல் தோல்விக்குப் பிறகு, இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த ஒரு கட்சியின் மாநிலத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்க மாட்டார்

திரையுலகிலும் சரி, அரசியல் உலகிலும் சரி, இவரால் பயனடைந்தவர்கள் பலர். யாரையும் அழிப்பது, கவிழ்ப்பது போன்ற சூது வாது தெரியாதவர் அவர். திரையில் நடிகர் திலகமாக ஜொலித்த சிவாஜிக்கு அரசியல் மேடையில் நடிக்கத் தெரியாது.

தான் சம்பாதித்த பணத்தில் கட்சி நடத்திய அவரை முன்னுதாரணமாகக் கொண்டு அரசியலுக்கு வந்தாலே அரசியல் ஒரு சாக்கடை என்ற அவப் பெயர் நீங்கும். ஆனால், வெற்று விளம்பரங்களையும், வாய்ச் சவடால் பேச்சுக்களையும் நம்பும் சத்யராஜ், போன்றவர்களுக்கு வேண்டுமானால் இது தவறாகத் தோன்றலாம்.


ஆனால், எங்களைப் போன்ற சிவாஜி ரசிகர்களுக்கும், அரசியலைக் கூர்ந்து நோக்கும் நடுநிலையாளர்களுக்கும் இந்த உண்மை தெள்ளத் தெளிவாகத் தெரியும்.

மேலும் மேடையில் வீராவேசமாகப் பேசிவிட்டு, வீட்டுக்குள் பதுங்கிக் கொள்ளும் நடிகர் சத்யராஜ் போன்றோருக்கு, நடிகர் திலகம் பற்றி குறை கூறுவதற்கு எந்த அருகதையும் கிடையாது என்று தெரிவித்துள்ளார்.

## எந்த அரசியல் கட்சியையும் ஆதரித்து குரல் கொடுக்கும் திட்டமில்லை: ரஜனி

**சென்னை**

இந்தத் தேர்தலில் எந்த அரசியல் கட்சியையோ, தலைவர்களையோ ஆதரித்து குரல் கொடுக்கும் திட்டமில்லை. அதே நேரம் இவர்கள் யாருடைய ஆட்சி குறித்தும் திருப்தியான அபிப்பிராயமும் இல்லை என்று பிரபல நடிகர் ரஜனி காந்த் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.





சில தினங்களுக்கு முன் திடீரென்று ரஜனியை அவரது இல்லத்தில் சந்தித்தார் அரசியல் விமர்சகரும் ஜெயலலிதாவின் இப்போதைய ஆலோசகர் என்று வர்ணிக்கப்படுபவருமான சோ. சுமார் 1 மணி நேரத்திலான இந்த சந்திப்பின் போது இன்றைய அரசியல் நிலைவரங்கள் குறித்து இவர்கள் இருவரும் பேசியதாகவும் அதன்பின் வேறு ஒரு இரகசிய இடத்தில் சில மணி நேரங்கள் அரசியல் பேசியதாகத் தெரிகிறது. இதன் போது மூன்றாவது நபர் ஒருவர் அவர்களுடன் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து, இந்த திடீர் சந்திப்புக்கு ரஜனி, தி.மு.க. கூட்டணியை ஆதரித்து பேசுவார் என வெளியான செய்தியே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. இதனை சோ, ரஜனியை சந்தித்த போது குறிப்பிட்டதாகவும், 'எக்காரணம் கொண்டும் தி.மு.க.வை மட்டும் ஆதரிக்காதீர்கள். அதைவிட நீங்கள் மௌனமாக இருப்பதே சிறந்தது' என்று ஆலோசனையுடனான கோரிக்கையை முன் வைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், ரஜனியோ, இப்போதைய சூழலில் எந்த கூட்டணியையும் ஆதரிக்கும் யோசனையே இல்லை. இரு கூட்டணியின் ஆட்சிகள் குறித்தும் எனக்கு திருப்தியான அபிப்பிராயமும் இல்லை என சோவிடம் தீர்மானமாகக் கூறிவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், 'தி.மு.க.வை ஆதரிக்ிறேனா இல்லையா என்பது இருக்கட்டும். அ.தி.மு.க.வை எதற்காக ஆதரிக்க வேண்டும்? என்ற கேள்விக்கு உங்களிடம் பதில் இருக்கிறதா' என்று ரஜனி கேட்டதாகவும், அதற்கு சோ நீண்ட விளக்கம் அளித்ததாகவும் கூறப்படுகிறது.

## 'ஸ்பெக்ட்ரம் விவகாரத்தாலேயே உயிரிழந்தார்' சாதிக்பாட்சா மனைவி பரபரப்பு வாக்குமூலம்

'ஸ்பெக்ட்ரம்' வழக்கு விசாரணையால் ஏற்பட்ட மனஉளைச்சலால் தான், எனது கணவர் உயிரைவிட்டார் என்று சாதிக்பாட்சாவின் மனைவி, பொலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

முன்னாள் தொலைத் தொடர்பு அமைச்சரும் ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தில் கைதானவருமான ஆ.ராஜாவின் நெருங்கிய நண்பரான சாதிக்பாட்சா நேற்று முன்தினம் திடீரென தற்கொலை செய்துகொண்டார்.

இந்நிலையில் அவர் மனைவி ரேகா னாபானு பொலிஸாரிடம் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

அதில், "சாதிக்பாட்சாவுக்கும், எனக்கும் திருமணமாகி 6 ஆண்டுகள் ஆகிறது. அவர் செய்து வந்த 'ரியல் எஸ்டேட்' தொழில் நன்றாக போனதால் எங்கள் வாழ்க்கையும் அமைதியாகவே சென்று கொண்டிருந்தது.

இந்த நிலையில், சி.பி.ஐ. பொலிஸார் ஸ்பெக்ட்ரம் வழக்கு தொடர்பாக எங்கள் வீட்டை சோதனையிட்டதுடன், எனது கணவரையும் அடிக்கடி விசாரித்து வந்தனர். இதனால் அவர் பற்றிய அவதூறு செய்திகள் ஊடகங்கள் வாயிலாகப் பரவ ஆரம்பித்தது. இது அவருக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தியதைத் தொடர்ந்தே அவர் தற்கொலை செய்து கொள்ளும் முடிவுக்கு சென்றுள்ளார்" என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



15 வருடங்களின் பின் சுபாஷ் ஹோட்டல் உரிமையாளரிடம் கையளித்தபோது மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க உரிமையாளரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்- அலுவலக நிருபர்)

# வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் வன்னியில் புனரமைப்பு வேலைகள்

கைதடி,

வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் வன்னிப் பிரதேசத்தில் பல புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி - அறிவியல் நகரின் பிரதான உள் வீதிகளும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் அடங்கும் தட்டு வன்கொட்டிக் குளம், ஊரியான் குளம் என்பனவும் புனரமைக்கப்படவுள்ளன.

மன்னாரில் முள்ளிக்குளம், மடுப் பிரதேசத்தில் உள்ள உள்ளக வீதிகள், வவுனியா மாவட்டத்தில் கல்மடுக்குளம், இரைப் பொத்தானைக்குளம் என்பன புனரமைப் புச்செய்யப்படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கோட்டைகட்டியகுளம் அம்பலப்பெருமாள் குளம் என்பன புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

# இந்திய நிபுணர்கள் இருவரும் யாழில் ஒரு மாதம் தங்கியிருப்பர்

## வாழைமர நார்களில் பயன்பெறுவது குறித்து பயிற்சியளிப்பார்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழை மர நார்களில் இருந்து பயன்தரும் கைவினைப் பொருட்களை தயாரிக்கும் பயிற்சிகளை வழங்கும் பொருட்டு இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள விஞ்ஞான நிபுணர்கள் இருவரும் யாழ்ப்பாணம் சென்று ஒரு மாதம் தங்கியிருந்து பயிற்சியளிப்பார்கள் என்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் குடும்பங்கள் மேலதிக வருமானத்தை பெற்றுக்கொள்ளவும் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் நோக்கிலும் வாழை மர நார்களில் இருந்து கைவினைப் பொருட்களை தயாரிக்கும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் இந்த கைவினைப் பொருட்களை தயாரிப்பது தொடர்பான பயிற்சிகளை வழங்க இந்தியாவிலிருந்து இரண்டு நிபுணர்கள் வருகை தந்துள்ளனர். அவர்கள் முதற்கட்டமாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து பயிற்சிகளை வழங்குவார்கள். அந்த வகையில் குறித்த நிபுணர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தில் ஒரு மாதம் தங்கியிருந்து பயிற்சிகளை வழங்குவார்கள்.

இயற்கையை பாதுகாப்பதன் மூலம் மேலதிக வருமானத்தை பெற்றுக்கொள்ளும் வகையிலான சுய தொழில் வேலைத்திட்டங்களுக்கு நாம் செல்ல வேண்டியுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான எமது அரசாங்கம் இது தொடர்பான வேலைத்திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் சூழலை பாதுகாக்கும் வகையிலும் மக்கள் மேலதிக வருமானத்தை பெற்றுக்கொள்ளும் ரீதியிலும் வாழை மர நார்களில் இருந்து பயன்தரும் உற்பத்திகளை மேற்கொள்வதற்காக வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம் என்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் கூறியுள்ளார்.

### புலி... (தொடர்ச்சி)

பொலிஸார் தெரிவித்தனர். சென்னையில் சில வழக்குகள் தொடர்பாகவும் இவர் தேடப்பட்டு வருகிறார். எனவே ராஜன் விரைவில் சென்னை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார் என்றும் அவர் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் தேடப்பட்டு வந்தார் என்றும் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

### மாணவன்... (தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் ஆஜர்செய்தனர். அவர்களை பிணையில் விடுவித்த நீதிவான் நீதிமன்ற வழக்கு விசாரணையின்போது ஆஜராகுமாறும் கடுமையாக உத்தரவிட்டது.

இந்நிலையில், நேற்றைய தினம்இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது சாவகச்சேரி நீதிவான் மா. கணேசராசா வழக்கை யாழ். மேல்நீதிமன்றில் பாரப்படுத்துமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டார்.

### சுபாஷ்... (தொடர்ச்சி)

திறந்து வைத்தனர்.

இதனைத் திறந்துவைத்து கருத்துத் தெரித்த மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, இராணுவம் யாழ். குடாநாட்டு மக்களின் இயல்புவாழ்க்கையைத் தோற்றுவிக்க படிப்படியாக நடவடிக்கை எடுத்துவருகிறது. அந்த வகையில், மக்கள் போக்குவரத்தை இலகுவாக மேற்கொள்வதற்காக இந்த விக்ரோறியா வீதி திறந்துவைக்கப்பட்டது. சுமார் 15 வருடங்களுக்கும் மேலாக இராணுவத்தினரின் பாவனையிலிருந்த இவ்வீதி பொது மக்களின் போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டிருந்தது.

இவ்வீதியிலுள்ள சுபாஷ் ஹோட்டலில் இராணுவத்தினர் தங்கியிருந்தனர். தற்போது யுத்தம் நீங்கி சமாதானச் சூழல் தோற்றுவிக்கப்பட்டதையடுத்து, சுபாஷ் ஹோட்டலை அதன் உரிமையாளரிடம் இன்று கையளித்துள்ளோம்.

அத்துடன், விக்ரோறியா வீதியையும் மக்களின் பாவனைக்காகத் திறந்துவிடுகிறோம் - என்றார்.

# அச்சுறுத்தல் காரணமாக வாக்களிப்பு விகிதம் குறைவு

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

(நமது நிருபர்)

உள்ளூராட்சிமன்ற தேர்தலின் வாக்களிப்பு தினத்தில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு பல வழிகளிலும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. அச்சுறுத்தல்கள் காரணமாக மக்களின் வாக்களிப்பு வீதமும் குறைவடைந்தே காணப்பட்டது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நேற்று நாடளாவிய ரீதியில் நடைபெற்ற உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வாக்களிப்பு தொடர்பில் தகவல் வெளியிடுகையிலேயே திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

உள்ளூராட்சிமன்ற தேர்தலின் வாக்களிப்பு தினத்தில் பொது மக்கள் மிகவும் குறைவான வகையிலேயே வாக்களித்துள்ளனர். அச்சுறுத்தல்கள் காரணமாக மக்களின் வாக்களிப்பு வீதம் மிகவும் குறைவடைந்த நிலையிலேயே காணப்பட்டது. வாக்களிப்பு விடயத்தில் வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை குழப்பும் வகையிலும் நீதியான தேர்தலுக்கு தடையேற்படுத்தும் ரீதியிலும் பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

களனி, பேருவளை, தம்புள்ளை, நிக்கவெரட்டிய, புத்தளம் போன்ற பகுதிகளில் பல வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அந்த வகையில் பார்க்கும்போது சுதந்திரமான தேர்தலுக்கு பல வழிகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் அரச சொத்துக்களை தவறாக பயன்படுத்துதல் மற்றும் தேர்தல் சட்டங்களை மீறியமை போன்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. சில பிரதேசங்களில் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன

எமக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் 40 க்கும் 45 க்கும் இடைப்பட்ட வீதமே. வாக்குப்பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

### ஜப்பானின்... (தொடர்ச்சி)

வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஜப்பான் நீண்டகால உதவிகளை வழங்கி வரும் அதேவேளை திருப்பிச் செலுத்த தேவையற்ற கடன் தொகைகளையும் வழங்கிவருகின்றது. அந்த வகையில் ஜப்பான் தனது வெளிநாட்டு உதவித் திட்டத்தை மறு பரிசீலனை செய்ய நேரிடின் அது பெரும்பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த வருடத்திலிருந்து சீனாவே அதிக நிதியுதவியுடன் கூடிய பாரிய திட்டங்களை இலங்கையில் மேற்கொண்டுவருகின்றது.

ஜப்பானை பொறுத்தமட்டில் கடந்த வருடம் ஜனவரிக்கும் செப்டெம்பருக்கும் இடையில் அதிகளவிலான கடன் உதவிகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அம்பாறையில்... (தொடர்ச்சி)

அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆலையடிவேம்பு பிரதேச சபை தேர்தலில் அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை ஆதரித்தது தொடர்பில் ஆத்திரமுற்றே இந்த தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஆளும் கட்சி அமைச்சர் ஒருவர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவது தொடர்பில் தமது கட்சி கடும் கண்டனம் தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். எனினும் குறித்த அமைச்சர், தாக்குதல் சம்பவத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை என தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்றைத் திங்கள்

கலைகளை வளர்த்தெடுப்பதில் திருமறைக்கலா மன்றத்துக்கு தனிச்சிறப்பு இருக்கின்றது. அந்த வகையில் திருமறைக் கலாமன்றத்தினால் தயாரித்து அரங்கேற்றப்பட்ட 'அற்றைத்திங்கள்' என்னும் கூத்துருவ நாடகம் பற்றிய ஒருபார்வையை இங்கே நோக்கலாம்.

'அற்றைத்திங்கள்' என்னும் கூத்துருவ நாடகம் 22.08.2010 ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 மணியளவில் திருமறைக்கலா மன்ற அரங்கில் யோ. யோண்சன் அவர்களின் எழுத்துருவாக்கம்,நெறியாள்கையில் ஆற்றுகை செய்யப்பட்டது. முல்லைக்குத் தேர் ஈந்த வள்ளல் பாரி மன்னனின் வீர வரலாற்றினை ஈழத்தின் பல்வேறு கூத்து மரபுகளின் ஒன்றிணைப்பினூடாக வெளிப்படுத்தும் அரங்கப் படைப்பாக 'அற்றைத்திங்கள்' அமைந்திருந்தது.

பாண்டிய நாட்டின் சிற்றரசுகளில் ஒன்றாகத் திகழ்ந்த பறம்பு தேசத்தை அறநெறி குன்றாது மக்களுக்கு எவ்வித குறைகளும் இல்லாமல், இல்லை என்று வருவபர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து பாரி மன்னன் நல்லாட்சி செய்து வந்தான். பாண்டிய நாட்டிலே ஒரு நாள் தை நீராட்டு விழா நடந்த சமயம் அங்கு வீற்றிருந்த சேர,சோழ, பாண்டியர் எனும் மூவேந்தரை வாழ்த்திப் பாடிய புலவர் பெருமக்கள் இறுதியில் பாரி மன்னனையும் வாழ்த்திப் பாடியதால் பாண்டிய நாட்டில் சிற்றரசாக விளங்கும் பறம்புதேச பாரி மன்னனுக்கு இவ்வளவு புகழ்ச்சியா எனப் பொறாமை கொண்ட மூவேந்தரும் அவன் திறைசெலுத்த மறுத்ததால் தனியரசு அமைக்க முற்படுகின்றானா என அச்சம் கொண்டு அவனை முற்றுகையிட்டும் வெல்லமுடியாத மூவேந்தர்கள் இறுதியில் சூழ்ச்சி செய்து பாரி மன்னனைக் கொன்றொழித்தனர்.

மூவேந்தர் வெற்றிப் பெருமிதத்தில் மூழ்கி இருந்தனர். ஆனால் பறம்பு தேசமோ சோகத்தில் மிதந்திருந்தது. இறுதியில் பாரி மன்னனின் புதல்விகள் இருவர் தந்தை இழந்து, தேசமிழந்து அகதிகளாக வெளியேறுகின்றமையே இந் நாடகத்தின் கதைச் சுருக்கமாக அமைந்திருந்தது.

பாரி மன்னன், பாண்டிய மன்னன், சேர மன்னன், சோழ மன்னன், கட்டிக்யகாரன், புலவர் கபிலர், பாரி-மந்திரி, பாரி-தளபதி, பாண்டியன்-மந்திரி,பாண்டியன்-தளபதி, அங்கவை, சங்கவை, பாடுனர் குழு, படைவீரர்கள், தோழிகள் ஆகியோர் நாடகக் கதை மாந்தர்களாக காணப்பட்டனர்.

இந்த நாடகத்தில் நடித்த நடிகர்கள் சிறப்பாக நடித்திருந்தாலும் பாரி மன்னன், பாண்டிய மன்னன் பாத்திரம் ஏற்று நடித்தவர்களின் நடிப்பாற்றல் பார்வையாளரை வெகுவாகக் கவர்ந்திருந்தது. பாண்டியன் மந்திரியாக நடித்தவரின் நடிப்பு சிறப்பாக இருந்தாலும், அவரது ஆட்டம், உடல்வாகு காரணமாக சொற்ப அளவு நகைப்பை இடையிடையே ஏற்படுத்தியிருந்தது என்பதோடு அரங்கில் நின்று மைக்கை (FM Mic) கழற்றி அடுத்து வர இருக்கின்ற நடிகருக்கு அதனைக் கொடுக்க இருந்தமை வெளிப்படையாகத் தென்பட்டால் சில நொடிப் பொழுதுகள் நாடகப் பார்வையை அவர் கண் ஏற்படுத்தியிருந்தது. மற்றும் கபிலராகப் பாத்திரம் ஏற்று நடித்தவருடைய ஆட்டம் அவ்வளவு லயமாக அமையாவிடினும் அவரது வசனம் பேசும் பாங்கும், பாடும் பாங்கும் இனிமையாக இருந்தது.

யாழ்ப்பாணத்து தென்மோடிக் கூத்து, மட்டக்களப்பு வடமோடிக்கூத்து, முல்லைத்தீவு கோவலன் கூத்து, மன்னார் தென்பாங்கு, மலையக காமன் கூத்து, சிந்து நடைக்கூத்து என ஈழத்தின் பல்வேறு கூத்து மரபுகளின் வடிவங்களை ஒன்றிணைத்து வெளிப்படுத்தப்பட்ட ஓர் அரங்கப் படைப்பாக 'அற்றைத் திங்கள்' கூத்துருவ நாடகம் அமைந்திருந்தது.

அற்றைத்திங்கள் என்னும் கலைப்படைப்பு கூத்துருவ நாடகமாக அமைந்திருந்ததனால் கூத்துக்குரிய அமைப்பு மரபுகளை மாற்றாது கூத்துக்களுக்குரிய முறையில் வேட உடை, ஒப்பனைகள் மேற்கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும்.

சில விளைவுகளை ஏற்படுத்துவதற்காக 'ட்ரம்', 'டோலக்' ஆகிய இசைக்கருவிகளை இடையிடையே பாவித்திருந்தாலும் கூத்துக்களின் அடிநாதமாக விளங்கும் பாரம்பரிய இசைக்கருவியான ஹார்மோனியத்தை பிரதான இசைக்

கருவியாகப் பாவித்திருந்தமை சிறப்பிற்குரியது.

மேடையின் பின்புறத்தில் முல்லைக் கொடிகளுடன் தேர் ஓவியமாக வரைந்திருந்தமை பாரி மன்னனின் வரலாறே ஆற்றுகை செய்யப்படுகின்றது என்பதைக் குறியாக நினைவுபடுத்திக் கொண்டிருந்தது. ஒரு காட்சியில் நடிகரது உடலைப் பாவித்து பாரி மன்னன் தேரில் உலாவருவது போல பாவனை செய்தது ரசிக்கக் கூடியதாக இருந்தது. இதைவிட தேர் ஒன்று செய்து அதனை நாடக ஓட்டதிற்கு தகுந்தாற் போலப் பாவித்திருந்ததை அதாவது பாரி மன்னன் தேரில் செல்வது போலக் காட்சியிருந்தமை பார்வையாளரை ஈர்த்திருந்தது.

ஒளியமைப்பு மிகைப்படுத்தப்பட்டதாக இடையிடையே தென்பட்டது. அதாவது வேட உடை, ஒப்பனையின் வர்ண அளவை இடையிடையே அது மிகைப்படுத்திக் காட்டியது. மேலும் போரின் போது செய்யப்பட்ட ஒளி நுட்பம் அழகியலைத் தந்தாலும் இடையிடையே அதனுடைய வேகம் கூடியதனால் கண்ணால் பார்ப்பதற்கு தடையாக அமைந்திருந்தது. அக்காட்சியின் போது ஒளியின் வேகத்தை மட்டுப்படுத்தி ஒளியமைப்புச் செய்திருந்தால் இன்னும் சிறப்பாக நாடக மருட்கையை ஏற்படுத்தி இருக்கும்.

அரங்கில் சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தரின் வருகையைக் காட்டிய விதம் அழகியலை ஏற்படுத்தி இருந்தது. அதாவது மேடயின் பிற்பகுதியால் பாண்டியன் வருகையினையும் மேடையின் நடுப் பகுதியினால் இடது புறத்திலிருந்து வலது புறமாக சோழனின் வருகையினையும் மேடையின் முன்பகுதியினால் வலது புறத்திருந்து இடது புறமாகச் சேரனின் வருகையினையும் தனித்தனியாகக் காட்டி இறுதியாக மூவேந்தர் வருகையினை ஒரே புறத்திலிருந்து வருவதாகக் காட்டியிருந்தமை அழகியலை ஏற்படுத்தி இருந்தது.

நாடகம் வளர்த்தெடுக்கப்பட பயன்படுத்திய உத்தி ஓர் வித்தியாசமான முறையில் அமைந்திருந்தது. நாடகத்தினுடைய கதை நிகழ்காலத்தில் ஆரம்பித்து இறந்த காலத்துக்குள் பிரவேசித்து மீண்டும் நிகழ்காலத்துக்குள் தாவி நாடகம் முடிவதாக ஒழுங்கமைத்த முறைமை ஒரு நாடக உத்தியாக அமைந்திருந்தது.

அதாவது பாரி மன்னனின் இரு மகள்மார்களான அங்கவை, சங்கவை அகதிகளாக துன்பத்துடன் தோன்றுவதும் பின் அதற்கான காரணங்களைக் காட்டுவதும் மீண்டும் அவர்கள் அகதிகளாகத் துன்பத்துடன் தோன்றி நாடகம் முடிவடைவதுமாக அமைகின்றது. மற்றும் பாடுனர் குழுவை மேடையின் இடது புறத்தில் பார்வையாளர் கண்ணுக்குப் புலப்படும் படி ஒழுங்கமைத்து அக்குழுவில் இருந்து இடையிடையே கட்டியக்காரன் பிரிந்து சென்று அவனுக்கூடாக கதை வளர்த்தெடுக்கப் பட முறைமை சிறப்பிற்குரியது.

நாடகத்தை ரசிப்பதற்கு பார்வையாளரது மனநிலையும் செல்வாக்குச் செலுத்தும். அப்படிப்பட்ட மனநிலையை நாடகம் நடைபெறும் சூழலும் வழங்கும். அந்த வகையில் இந் நாடகம் இதமான காற்று வீசுகின்ற இரவு வேளையில் திறந்தவெளி அரங்கில் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தமை பார்வையாளர் மனதைக் கவர்ந்திருந்தது. பாடல்கள் மனதிற்கு இனிமை சேர்த்தன. குறிப்பாக,

*"அற்றைத்திங்கள் அந்த வெண்நிலவில்*
*தந்தையோடு சொந்தமண்ணில் இருந்தோம்*
*இற்றைத் திங்கள் இந்த வெண்நிலவில்*
*தந்தை இல்லை சொந்த மண்ணும் இல்லை"*

எனும் பாடல் பாடப்பட்ட ராகம் பார்வையாளர் மத்தியில் வரவேற்பைப் பெற்றது.

வரலாறுகள் சில காலத்துள் வாழ்வதோடு மட்டும் நின்றுவிடாது காலத்தை வென்று வாழும் தன்மையும் கொண்டவை. அந்த வகையில், பாரி மன்னனின் வீர வரலாறு 'அற்றைத் திங்கள்' என்னும் கூத்துருவ நாடகம் மூலம் காலத்தை வென்று வாழ்ந்தது.

இவ்வாறு ஒரு வரலாற்றுக் கதையை ஈழத்தின் பல்வேறு கூத்துக்களின் வடிவங்களை இணைத்து நாடகமாகப் படைத்த யோ. யோண்சன் ராஜ்குமார் அவர்களின் பரீட்சார்த்த முயற்சி பாராட்டப்பட வேண்டியது. மேலும், இவ்வரங்கப் படைப்பில் பங்குபற்றிய நடிகர்களின் அர்ப்பணமும் பாராட்டப்பட வேண்டியது. தொடர்ந்தும் இவ்வாறான கலைப்படைப்புக்களை திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கவேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

● நி.ஹரன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

# ஒரு சின்ன மாற்றம்



மூத்தாண்டபுரம் என்ற நாட்டை மன்னன் வஜ்ஜிரவன் என்பவன் ஆண்டுவந்தான். ஒரு நாள் தர்பாரில் "மன்னவா! நான் ஒரு விவசாயி. என்னுடைய நிலத்தில் பயிர்கள் விளைந்திருந்தன. அவற்றையெல்லாம் பாஸ்கர் என்பவனது ஆடுகள் மேய்ந்துவிட்டன. இனி என் பிழைப்புக்கு வழியில்லை. பாஸ்கரனிடமிருந்து தாங்கள் தான் எனக்கு நஷ்டஈடு பெற்றுத் தரவேண்டும்" என்றார் விவசாயி.

மன்னன், ஆட்டுக்கார பாஸ்கரனை வரவழைத்து விசாரித்தார். மன்னனின் விசாரிப்பு என்றதுமே பாஸ்கர் பயந்து தன்னுடைய ஆடுகள் தான் அவரது பயிர்களை மேய்ந்துவிட்டன என்ற உண்மையை ஒத்துக்கொண்டான்.

அதற்கு மன்னன், 'விவசாயிக்கு உனது ஆடுகளால் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விட்டது. அதற்கு ஈடாக உனது ஆடுகளை அவருக்குக் கொடுத்து விடுமாறு தீர்ப்பளிக்கிறேன்' என்று கூறிவிட்டார் ராஜா.

அதைக் கேட்ட பாஸ்கர் கலங்கிநின்றான். அந்த வழக்கை அதுவரை கவனித்துவந்த இளவரசன், தன் தந்தையான ராஜாவை நோக்கி "தங்களின் தீர்ப்பைக் கொஞ்சம் மாற்ற எண்ணுகிறேன். தங்கள் அனுமதி தேவை" என்று கேட்டான்.

"என்ன சொல்!" என்றார் ராஜா.

"ஆட்டுக்காரருடைய ஆடுகள் அனைத்தையும் ஒரு வருடத்திற்கு விவசாயியிடம் ஒப்படைக்கலாம். அந்த ஒரு வருட காலத்திற்குள் அந்த ஆடுகள் போடும் குட்டிகள், சாணம், பால் ஆகியவற்றை விவசாயி எடுத்துக்கொள்ளட்டும். ஒரு வருடதத்திற்குப் பின்னர் விவசாயி பாஸ்கரனிடமிருந்து பெற்ற ஆடுகளை மட்டும் திருப்பி அவருக்குக் கொடுத்துவிட வேண்டும். இதனால் யாருக்கும் நஷ்டமும் இல்லை. மன வருத்தமும் இல்லை. இதுதான் எனது தீர்ப்பு. தங்கள் அபிப்பிராயம் என்ன? என்றான் இளவரசன்.

ராஜா பெரிதும் மகிழ்ந்தார். "பிரமாதம் மகனே! உனது தீர்ப்பையே இந்த அரசாங்கத்தின் தீர்ப்பாக வழங்குகிறேன்." என்றார் ராஜா.

விவசாயி மகிழ்ந்தார்.

ஏதோ இந்த மட்டும் தனது ஆடுகள் தப்பியதே என மகிழ்ந்து இளவரசனை வாழ்த்தியபடி சென்றான் பாஸ்கரன்.

## கடல் கழுகு



உலகம் முழுவதும் எட்டு வகையான கடல் கழுகுகள் உள்ளன. இவை ஒரே மாதிரியான வாழ்க்கை முறையைக்கொண்டுள்ளன. இவற்றில் மூன்று வகையான கழுகுகள் ஆர்ட்டிக் பிரதேசத்தில் வாழ்கின்றன. சாம்பல் நிற கழுகு யுரேசியாவிலும், வழுக்கைத் தலை கழுகுகள் வட அமெரிக்காவிலும், ஸ்டெல்லர்ஸ் கழுகுகள் கிழக்கு சைபீரியா மற்றும் வடக்கு ஜப்பானில் காணப்படுகின்றன.

ஸ்டெல்லர்ஸ் கழுகு மிகப் பயங்கரமான தோற்றம் உடையது. கழுத்து, நெற்றி, வால் இவை வெள்ளை நிறமாகவும், மீதி உடல் முழுவதும் கறுப்பு நிறமாகவும் இருக்கும். சில பெண் கழுகுகள் 18 கிலோ வரை இருக்கும்.

யுரேசியன் கடல் கழுகுகள் 7.5 கிலோவுக்கு மேல் இருக்காது. வழுக்கைத் தலைக் கழுகுகள் இதைவிட சிறியதாக இருக்கும். இவை எல்லாம் பெண் கழுகுகளின் எடையே. ஆண் கழுகுகள் இதை விட ஒரு மடங்கு அதிகமாக இருக்கும். இந்த கடல் கழுகுகளில் அலகு பொருத்தமில்லாமல் மிகப்பெரியதாக இருக்கும். அதே சமயத்தில் குறைந்த அளவு உணவே உண்ணும். உணவாக கடல் பறவைகள், முயல்கள், கொட்மீன், பூனை மீன் இவற்றை உண்ணும். மேலும், நீரில் மிதக்கும் இறந்த திமிலங்கத்தையும் உண்ணும். இவை சிறிய ஆடுகளைக் கூட வேட்டையாடும் திறன் கொண்டவை.

**டைட்டேனியம்** மிகப் பழைமையான உலோகம். இருப்பினும் இது சமீப காலமாகத் தான் பிரபலமாகி வருகிறது. காரணம், இதன் வியத்தகு உபயோகமே ஆகும்.

பூமியில் அதிக அளவில் கிடைக்கும் கனிமங்களில் இது ஒன்பதாவது இடத்தைப் பிடிக்கிறது. அதிக அளவில் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இந்தியா, பிரேஸில் போன்ற நாடுகளில் கிடைக்கின்றது.

நம் நாட்டில் கேரள கடற்கரையில் அதிகமாகக் கிடைக்கிறது. ஆழ்கடல் ஆராய்ச்சிக்குப் பின்னர் டைட்டேனியம் பூமியின் நிலப்பரப்பை விட கடலின் தரை மட்டத்தில் அதிக அளவு காணப்படுகிறது என்று கண்டுபிடித்திருக்கின்றனர்.

இது மின்சாரத்தை கடத்துவது இல்லை. எடைக் குறைவு அதே சமயம் அலுமினியத்தை விட 12 மடங்கு உறுதி அதிகம். அலுமினியத்தைப் போன்று வெப்பத்தைக் கடத்தாது.




சைவ பரிபாலன சபையினால் நடாத்தப்பட்ட புண்ணிய நாச்சியார் தினம் பண்ணிசைப் போட்டியில் மத்திய பிரிவில் முதலாமிடத்தைப் பெற்ற செல்வன் விஜயகுமார் வத்சாங்கித சர்மாவுக்கு யாழ்.பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரம் தங்கப்பதக்கத்தை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்



சைவ பரிபாலன சபையினால் நடாத்தப்பட்ட புண்ணிய நாச்சியார் தினம் பண்ணிசைப் போட்டியில் திருக்குறள் மனனப் போட்டியில் மேற்பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்ற செல்வி தேவசேனா விஜயகுமாருக்கு யாழ்.பிரதேசசெயலர் சுகுணரதி தெய்வேந்திரம் வெள்ளிப பதக்கம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



இ.தரணிகா தரம் 1 B
யா/சாவகச்சேரி ஆரம்பப்பாடசாலை



சி.அபிராமி தரம் 7B
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

சிறுவர்களே உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரத்தில் இருந்து மீள ஒருவருக்கு ஒருவர் உதவ வேண்டுகோள்



ஜப்பானில் பயங்கர பூகம்பம், அதைத் தொடர்ந்து சுனாமி தாக்குதல், இதன் பின்னர் அணுஉலை விபத்து என அடுக்கடுக்காக பெரும் பாதிப்பை ஜப்பான் மக்கள் சந்தித்து வருகின்றனர். மக்கள் படும் துயரைக் கண்டு பெரிதும் கவலைப்படுவதாக அந்நாட்டின் மன்னர் அகிஹிட்டோ தெரிவித்தார். 77 வயதான மன்னர் அகிஹிட்டோ அரசு டிவியில் நேற்று முன்தினம் உருக்கமாக பேசினார்.

அப்போது கூறுகையில், எனது நாட்டு மக்கள் நலனுக்காக பிரார்த்திக்கிறேன். இதுபோன்ற ஒரு இயற்கை பேரழிவை என் வாழ்நாளில் கண்டதில்லை. இந்த துயரமான, சிக்கலான நேரத்தில் இருந்து நாடும் மக்களும் மீள ஜப்பானியர்கள் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் உதவ வேண்டும் என்று உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார். டி.வி.யில் அவர் உருக்கமாக பேசும்போது, கண்களில் கண்ணீர் நிரம்பியது. பேசமுடியாமல் நா தழுதழுத்தது.

அவருடைய வேண்டுகோள் தொலைக்காட்சியில் பார்த்த வெளிநாடு க ளில் வசிக்கும் மக்களின் மனதை உருக்குவதாக இருந்தது.

# 11 வருடங்களாக 4 குழந்தைகளுடன் உலகம் சுற்றும் குடும்பம்



வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்பது பலரின் விருப்பம். ஆனால் இந்த ஜோடி வாழ்க்கையையே சாதனையாக்கிவிட்டனர்.

ஹேர்மன் மற்றும் கண்டலரியா சாப் ஆகியோர்தான் இந்த சாதனைத் தம்பதி. இவர்களுடைய இந்தக் கார் 83 வருடங்கள் பழமையானது.

இந்தப் பழைய நீளமான கார் தான் இவர்களின் வாகனம் வீடு எல்லாமே.

கடந்த 11 வருடங்களாக தமது நான்கு பிள்ளைகள் சகிதம் உலகம் முழுவதையும் இந்த வாகனத்தில் சுற்றி வந்த வண்ணம் உள்ளனர்.

இன்னமும் இவர்களின் பயணம் தொடருகின்றது. இதுவரை நான்கு கண்டங்களைக் கடந்துள்ள இவர்களின் பயணம் ஒரு ஆயுள் காலப் பயணமாக நீடிக்கின்றது.

இவர்களது பிள்ளைகள் நால்வரும் இந்த உலகப் பயணத்தின் போதே பிறந்துள்ளனர். மூத்த பிள்ளைக்கு எட்டு வயது. கடைசிப் பிள்ளைக்கு ஒரு வயது. இதுவரை இவர்கள் பயணம் செய்துள்ள தூரம் 142000 மைல்கள்.

இவர்களின் கார் 1928 ஆம் ஆண்டுக்குரியது. மணிக்கு 40 மைல் வேகத்தில் மட்டும் தான் ஓடக்கூடியது. இந்தக் காரைப் படகில் ஏற்றிக் கொண்டு அமேசன் நதி யையும் அவர்கள் கடந்துள்ளனர்.

வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, அவுஸ்திரேலியா நியுஸிலாந்து தற்போது ஆசியா என இவர்களிக் பயணம் தொடருகின்றது. ஹேர்மன் சென் பிரான்ஸிஸ்கோவில் பிறந்து ஆர்ஜன்டீனாவில் தனது பாட்டனின் பண்ணையில் வேலை செய்வதற்காக சிறு வயதிலேயே அங்கு குடியேறியவர்.

10 வயதில் அவர் கண்டலரியாவைச் சந்தித்தார். அப்போது அவருக்கு வயது 8. கண்டவுடனேயே காதல். அது மட்டுமல்ல அப்போது முதலே இருவரும் சேர்ந்து வாழவும் ஆரம்பித்தும் விட்டனர். 1996 இல் இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

பயணத்தைத் தொடங்க விரும்பிய போது பாட்டனார் கொடுத்த பரிசு தான் இந்தக் கார். ஆரம்ப கட்டத்திலேயே கையிலிருந்த காசு தீர்ந்து விட்டது. அதன் பிறகு பலரும் வழங்கும் பெற்றோல் மற்றும் உணவு தங்குமிட வசதி ஆகியவற்றின் உதவியோடு இன்னமும் இந்தப் பயணம் நான்கு பிள்ளைகளுடன் தொடருகின்றது.

# ஜப்பான் நிலநடுக்கத்தால் பூமியின் சுற்றும் வேகம் அதிகரிப்பு





'ஜப்பானில் சமீபத்தில் நிகழ்ந்த பயங்கர நிலநடுக்கம், பூமி சுற்றும் வேகத்தை அதிகரித்துள்ளது. அதனால், ஒரு நாளின் நேரத்தில் குறைவு ஏற்படும்' என்று, நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானில் கடந்த 11 ஆம் திகதி நிகழ் ந்த பயங்கர நிலநடுக்முகத்தையடுத்து, சுனாமி ஏற்பட்டது. அந்நாட்டின் மூன்று மாகாணங்கள் பெரும் பாதிப்புக் குள்ளாயின. மேலும், இரண்டு மாகாணங்கள் ஓரளவு பாதிக் கப்பட்டன. ஜப்பான் பல தீவுக் கூட்ட ங்களால் ஆன நாடு. எனினும், ஹொக் கைடோ, ஹோன்ஷூ, ஷிகோக்கு, கியூஷூ என்ற நான்கு பெரிய தீவுகள் தான் முக்கியமானவை. இவற்றிலும், ஹோன்ஷூ தான் மிகப் பெரியது. இதில்தான், தலைநகர் டோக்கியோ உள்ளது. சமீபத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால், ஹோன்ஷூ தீவு, 8 அடி நகர்ந்துள்ளதாகவும், பூமியின் அச்சு 17 செ.மீ., நகர்ந்துள்ளதாகவும் அமெரிக்க நிலவியல் நிபுணர் கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்த ஆய்வில் ஈடுபட்டுள்ள நிபுணர்கள் மேலும் கூறியதாவது: தற் போது ஏற்பட்டுள்ள நிலநடுக்கத்தால் பூமியின் எடையில் சிறிது மாற்றம் நிகழ்ந்துள்ளது. அது சுற்றும் வேகம் சிறிது அதிகரித்துள்ளது. இதனால், ஒரு நாளில் மொத்த வினாடிகளில் 1.8 மைக்ரோ வினாடிகள் குறையும். ஒரு நாள் என்பது 86,400 வினாடிகள் கொண்டது.

இந்த மாற்றத்தால், பாதிப்பு எதுவும் ஏற்படாது.

இதுபோன்ற அச்சு மாற்றங்கள் பூமியின் வரலாற்றில் சகஜம் தான். கடந்த 2010 ல் சிலியில் ஏற்பட்ட 8.8 ரிக்டர் நிலநடுக்கத்தால், ஒரு நாளில் 1.26 மைக்ரோ வினாடிகளும், 2004ல் சுமத்ரா வில் நிகழ்ந்த 9.1 ரிக்டர் நிலநடுக்கத்தால் 6.8 மைக்ரோ வினாடிகளும் குறைந்துள்ளன. இவ்வாறு நிபுணர்கள் தெரிவித்தனர்.

# அமெரிக்க தூதரக அதிகாரியை விடுவித்தது பாகிஸ்தான்!

பாகிஸ்தானியர்கள் 2 பேரை சுட்டுக் கொன்ற வழக்கில் கைது செய்யப்பட்ட அமெரிக்க தூதரக அதிகாரி டேவிஸ்ரேமண்டை நஷ்ட ஈடு பெற்றுக் கொண்டு பாகிஸ்தான் விடுவித்துள்ளது. டேவிசை விடுவிக்க வேண்டும் என்று அமெரிக்கா பலமுறை வலியுறுத்தியும் அவரை விடுவிக்க பாகிஸ்தான் மறுத்து வந்தது.

மேலும் டேவிஸ் தூதரக அதிகாரி அல்ல என்றும், அவர் ஒரு சிஐஏ உளவாளி என்றும் கூறி அமெரிக்கா கோரிக்கையை ஏற்க மறுத்தது பாகிஸ்தான். அத்துடன் இந்த வழக்கை விசாரித்த லாகூர் நீதிமன்றமும் கடுமையாக நடந்துகொண்டது.

இந்நிலையில் டேவிஸால் கொல்லப்பட்ட 2 பாகிஸ்தானியர் குடும்பத்தினருக்கும் பெரும் தொகையை நஷ்ட ஈடாக வழங்க அமெரிக்கா ஒப்புக்கொண்டது. இதனையடுத்து இவ்வழக்கை விசாரித்த லாகூர் நீதிமன்றம் டேவிஸை விடுவித்து உத்தரவிட்டது.



ரஷ்யாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள துருக்கி பிரதமர் ரீசெப்எர்டோ கான் (வலது) தலைநகர் மாஸ்கோவில் உள்ள ஜனாதிபதி மாளிகையான கிரெம்ப்ளினில் ஜனாதிபதி டிமிட்ரி மெட்வதேவை சந்தித்து பேசுவதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலூர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் விற்பனை செய்யக் கோரிக்கை

ஏழாலை,

ஊர்காவற்றுறையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் விற்பனை செய்யப்படவேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஊர்காவற்றுறையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகவராகவுள்ள ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே பெற்றோல் விற்பனை செய்யப்படுவதில்லை.

இதனால், ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள பெற்றோல் பாவனையாளர்கள் தங்களுக்குத் தேவையான பெற்றோலைப் பெறுவதற்கு வேலணை - வங்களாவடிச் சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கோ அல்லது யாழ்ப்பாண நகருக்கோ செல்லவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோலை அவசர தேவைகளுக்குப் பெறுவதற்கு ஊர்காவற்றுறையிலிருந்து வேலணைக்குச் செல்வதாயின் 8 கிலோமீற்றர் தூரமும், யாழ்ப்பாணத்திற்குச் செல்வதாயின் 18 கிலோமீற்றரும் செல்ல வேண்டியிருப்பதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஊர்காவற்றுறை பிரதேச மக்கள் பெற்றோல் பெறுவதிலுள்ள கஷ்டங்களைக் கருத்திற்கொண்டு, உரிய தரப்பினர் ஊர்காவற்றுறை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

# நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இலவச அடிப்படை ஆங்கில வகுப்புக்கள்

(காவலூர்)

யாழ். நல்லூர் சுற்றாடலில் வாழ்ந்துவருகின்ற 4 ஆம், 5 ஆம் தரத்தில் கற்றுவருகின்ற மாணவர்களின் ஆங்கில மொழி அறிவை மேம்படுத்தும் நோக்குடன் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இலவசமாக அடிப்படை ஆங்கிலக் கல்வியைப் போதிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த இலவசமான அடிப்படை ஆங்கிலக் கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான வேதனத்தை நல்லூர் சுற்றாடலைச் சேர்ந்த கனடா வாழ் மக்கள் வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.

இந்த இலவச அடிப்படை ஆங்கிலக் கல்வியினை படிப்பிப்பதற்காக யாழ். கல்வியில் கல்லூரியில் ஆங்கிலக் கல்வியில் அதிசிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசிரியை ஒருவரே நியமிக்கப்படவுள்ளார்.

நல்லூர் சூழலில் உள்ள எந்தப் பாடசாலையிலாயினும் கல்வியினைக் கற்றுவருகின்ற அனைத்து மாணவர்களும் இந்த அடிப்படை ஆங்கில மொழிக் கல்வியைக் கற்றுப் பயனடையலாம் என மங்கையர்க்கரசி வித்தியாலய அதிபர் ம.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

# கலை, பண்பாட்டு விழாவும் கலைஞர்கள் கௌரவிப்பும்

வேலணை,

கோப்பாய் கலை, பண்பாட்டு மன்றம் நடத்தும் கலை, பண்பாட்டு விழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிறு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிறப்பு நிகழ்ச்சியாக அமரத்துவமடைந்த கலைஞர்கள் மற்றும் மூத்த கலைஞர்கள் இளம் கலைஞர்கள் இவ் விழாவின் போது கௌரவிக்கப்படவுள்ளனர்.

கோப்பாய் வடக்கு, மத்தி, தெற்கு கிராமசேவகர் பிரிவிலுள்ள பாரம்பரியக் கலைகளையும் கலாசார விழுமியங்களையும் பாதுகாக்கும் நோக்கமாக இந்த மன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சேவா லங்கா நிறுவனத்தால் வலி. வடக்கில் கிணறுகள் புனரமைப்பு

தெல்லிப்பழை,

வலி. வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலர் பிரிவில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் சேவா லங்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் 350 கிணறுகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

வலி. வடக்கில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக இடளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய பகுதிகளில் மக்கள் மீளகுடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளிலே கிணறுகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் மின்சாரத்தினைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. மக்களை மீள்குடியமர்வுக்குத் தயார்படுத்தி வருகின்ற நிலையில் பற்றைகள் துப்புரவு செய்யப்பட்டு போக்குவரத்துச் செய்வதற்கு ஏற்ற வகையில் பாதைகள் செப்பனிடப்பட்டு வருகின்றன. இந்தப் பகுதியில் சேவா லங்கா நிறுவனத்தினரால் கிணறுகள் சிறந்த முறையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், மக்கள் மீள்குடியமரும் வகையில் அரை நிரந்தர வீட்டுத்திட்டங்களும், மலசல கூடங்களும் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெல்லிப்பழை பிரதேச செயலகம் தெரிவிக்கின்றது. அத்தோடு, மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட மக்களது ஜீவனோபாய, வாழ்வாதார நடவடிக்கைகளை [illegible] நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




# சைவப்பிரகாச மகளிர் வித்தியாலயத்தில் மாடிக் கட்டடங்கள் அமைப்பு

## ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

கைதடி,

வவுனியா மாவட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் அறிவு சார் சமூகத்திற்கான கல்வித் திட்டத்தின் கீழ் வவுனியா சைவப் பிரகாச மகளிர் மகா வித்தியாலயத்தில் மூன்று மாடிக் கட்டடங்கள் இரண்டு அமைக்கப்படவுள்ளன.

இக்கட்டடங்களில் நடனம், சித்திரம், சங்கீதம், தொழில் வழிகாட்டல், உளவளத்துணை, விவசாய செயற்பாட்டு அறைகள் அயைப்பெறவுள்ளன. வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன் இதற்கான கேள்விப் பத்திரங்களை இம்மாதம் 29 ஆம் திகதிவரை சமர்ப்பிக்கலாமெனவும் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களை, கேள்வி ஆவணங்களை பரிசீலிப்பதற்கு வவுனியா வலயக் கல்விப் பணிமனையுடன் 024 - 2223623 என்னும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலர் பரீட்சையில் யாழில் 15 பேர் சித்தி

தெல்லிப்பழை,

இலங்கை மெய்வன்மைச் சங்கம் நடத்திய இலங்கை மென்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான போட்டிப் பரீட்சை தரம்- 4 இல் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 15 பேர் சித்தியடைந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்திலிருந்து 55 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றியபோதிலும் 15 பேர் மட்டுமே 65இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இப்பரீட்சையில் ஆ. நித்திலநாயகம், த. செல்வக்குமரன், டி. பயிதா, எஸ். நிஷாந்தன், ஆர். டினேஸ்குமார், கே. துளசிதரன், என். ரவீந்திரன், கே. கீர்த்தனா, எஸ். வசந்த [illegible] திவாகர், எஸ். இந்திரகுமார், எஸ். [illegible]னுஜா, ஆர். இராஜகாந்தன், ஏ.எஸ். திவாகர், கே. கஜேந்திரன் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

## சாரதிக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி,

கைதடியில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற கென்டர் வாகனம் - மோட்டார் சைக்கிள் விபத்துச்சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் சாரதியை 15 ஆம் திகதி கைதுசெய்த சாவகச்சேரி பொலிஸார், சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

சந்தேக நபரை எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகளுடன் ஆசிரியர் சங்கம் சந்திப்பு

நெடுங்கேணி,

வட மாகாண கல்விச் செயற்பாட்டில் ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் 16 ஆம் திகதி புதன் கிழமை வடமாகாண கல்விப் பணிமனையில் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆசிரியர் சங்கத்தின் தலைவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்.

இச்சந்திப்பில் அதிபர், ஆசிரியர் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் நியனம் தொடர்பில் சட்டத்திற்கமைவாக நியமனம் வழங்கப்படவேண்டும்; ஆசிரியர்களுக்கு உரிய வேளையில் சம்பள நிலுவைகள் வழங்கப்படவேண்டும் என்ற பல கோரிக்கைகள் ஆசிரிய சங்கங்களினால் முன் வைக்கப்பட்டன.



யாழ். இந்துக்கல்லூரியின் தமிழ்த் தின விழாவில் ஆற்றுகை செய்த வாழ்வும் இசையும் நாட்டி அணியினரை படத்தில் காணலாம். (படம்: - தெல்லிப்பழை நிருபர்)

# மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலய பழைய மாணவர் கூட்டம்

மானிப்பாய்,

மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க புனரமைப்புக் கூட்டமானது இன்று 18 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பாடசாலையின் கடந்த கால செயற்பாடுகள், முன்னேற்ற நடவடிக்கைகள் என்பன ஆராயப்பட்டு எதிர்காலத்தில் பாடசாலைக்கான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவும் மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பல்வேறு புதிய அணுகுமுறைகளையும் உட்புகுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. எனவே, இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரும் இக் கூட்டத்திற்குத் தவறாது சமுகமளிக்கு மாறு கேட்கப்பட்டுள்ளது.

# 'இந்துக்களின் போர்' இன்று

தெல்லிப்பழை,

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையிலான 'இந்துக்களின் போர்' எனும் மாபெரும் துடுப்பாட்டப் போட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று 18 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இப்போட்டியானது 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இதுவரை மூன்று போட்டிகள் நடைபெற்றுள்ளன. நான்காவது போட்டியாக இம்முறை இப்போட்டி நடைபெறவுள்ளது. 2008, 2009, 2010 ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிகள் வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்ததனால் இவ்வருட போட்டி எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றம் கொண்ட சபாலிங்கம் வெற்றிக்கிண்ணத்துக்கான ஒருநாள் துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர் கலாசாலைகளில் 21 இல் விரிவுரைகள் ஆரம்பம்

அச்சுவேலி,

இரண்டாம் வருட பயிற்சிநெறிக்காக ஆசிரியர் கலாசாலைகளில் இணைத்துக் கொள்ளப்படும் ஆசிரியர்களுக்கான விரிவுரைகள் 21 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

முதல் ஒரு வருட பயிற்சியை தொலைக்கல்வி நிலையங்களில் நிறைவுசெய்த பின்னர் இரண்டாம் வருட ஆசிரியர் பயிற்சியை ஆசிரியர் கலாசாலைகளில் தொடரவிருக்கும் ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சிகள் தொடர்பான விரிவுரைகள் 21 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் உள்ள சகல ஆசிரியர் கலாசாலைகளிலும் ஆரம்பமாகின்றன.

'பட்டதாரிகள் அல்லாத சகல ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் பயிற்சி' வேலைத்திட்டத்தின் மூலம் ஒருவருடம் தொலைக்கல்வி நிலையங்கள் ஊடான பயிற்சி, அடுத்த ஒரு வருடம் ஆசிரியர் கலாசாலைகளில் அனுமதிக்கப்பட்டு விசேட பாடத்துறை ரீதியிலான பயிற்சி என்ற வகையில் பயிற்சியளிக்கும் வேலைத்திட்டத்தை கல்வி அமைச்சு முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் முதலாம் வருட பயிற்சி என்றவகையில் தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

இந்த வகையில் நாடளாவிய ரீதியில் பட்டதாரிகள் தவிர்ந்த 9 ஆயிரம் ஆசிரியர்கள் வரையில் - ஆசிரியர் உதவியாளர்கள் உட்பட தொலைக்கல்வி நிலையங்களில் பொதுப் பயிற்சி வழங்கப்பட்டது. ஒரு வருட பொதுப் பயிற்சியை நிறைவுசெய்த அவர்களுக்கு இந்த வருடம் நியமனம் பெற்ற பாட ரீதியான பாடத்துறைப் பயிற்சி, ஆசிரியர் கலாசாலைகளில் இணைப்புச்செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளது.

பதிவுகளை மேற்கொண்ட ஆசிரியர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

# விவாத அரங்கு போட்டி முடிவுகள்

(அலுவலக நிருபர்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தால் அப்பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட விவாத அரங்குப் போட்டியில் 1 ஆம் இடத்தை யாழ். மத்திய கல்லூரியும், 2 ஆம் இடத்தை யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியும், 3 ஆம் இடத்தை யாழ். வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையும் பெற்றுள்ளன.

சமூகத்தில் பெண்களின் நிலை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக யாழ். பிரதேச செயலகத்தின்-பெண்கள் அபிவிருத்திப் பிரிவினரால் இப்போட்டிகள் ஒழுங்குசெய்யப்பட்டு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இறுவட்டு வெளியீடு

தெல்லிப்பழை,

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களினால் கல்லூரியின் துடுப்பாட்ட வீரர்களை உற்சாகப்படுத்தும் இசைப்பாடல் இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர்களான கோபாலகிருஷ்ணன் சத்தியன், அருணா கேதீஸ் ஆகியோருடைய அனுசரணையில் கல்லூரியினுடைய வழிகாட்டல் சேவை ஆலோசனைப் பிரிவின் வெளியீடாக இவ் இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இவ் இறுவெட்டுக்கான இசையமைப்பினை கல்லூரியின் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்விபயிலும் தனபாலசிங்கம் மதீஸன் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சைக்கிளில் சமாந்தரமாக சென்ற 8 பேர் கைது

சாவகச்சேரி,

சாவகச்சேரி பிரதேசத்தில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சமாந்தரமாக சைக்கிளில் பயணம் செய்த 8 பேரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் 14 ஆம் திகதி திங்கட்கிழமை வழக்குத் தாக்கல் செய்து ஆஜர்படுத்தினர்.

8 பேரும் தனித்தனி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து பதில் நீதிபதி செ. கணபதிப்பிள்ளை தலா 500 வீதம் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

# அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

யாழ். நாயன்மார்கட்டு அருள்மிகு ஸ்ரீ பிச்சாடன மூர்த்தி ஆலயத்தில் நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை பங்குனி உத்தரத் திருநாளில் காலை 8.00 மணிக்கு அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதனை நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகம் ஒழுங்குசெய்துள்ளது என கழக செயலாளர் ப. மகேந்திரதாசன் தெரிவித்துள்ளார்.

# ஊர்காவற்றுறை பிரதேச சபையில் நடைபெற்ற வாசிப்பு தின நிகழ்வு

(அலுவலக நிருபர்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2010 க்கான தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இவ்வாண்டுக்கான தேசிய வாசிப்பு தின நிகழ்வும் கடந்த செவ்வாய்க் கிழமை ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் ச. சுதர்ஜன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். பாஸ்கரன் கலந்துகொண்டார்.

ஊர்காவற்றுறை பிரதேச பொது நூலக மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 2010 ஆம் ஆண்டு தீவக வலயப் பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இறுதியில் முன்பள்ளி மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர்கள் பிழையான வழிக்கு செல்ல கூடாது என்பதே எமது தாபனத்தின் நோக்கம்

## கண்டி மனித அபிவிருத்தி தாபனத் தலைவர்

மஸ்கெலியா,

எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்னர் சில தொழிலாளர்கள் சரியான வழியைத் தெரிவு செய்து தொழிலாளர் ஒத்துழைப்பு கூட்டத்தில் இணைந்துள்ளமை வரவேற்கத்தக்கது. அவர்கள் மீண்டும் பிழையான வழிக்குச் சென்று விடக் கூடாது என்பதே மேற்படி சங்கத்தினதும் கண்டி மனித அபிவிருத்தித் தாபனத்தினதும் எதிர்பார்ப்பாகும் என தலைவர் பி.பி.சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

தமிழ்நாடு, கர்னாடகா, பாண்டிச்சேரி மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டின் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் தொழிற்சங்க அமைப்புகளினதும் பிரதிநிதிகள் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை, தொழில் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக வருகை தந்திருந்த போது சாமிமலை பிரதேசத்துக்கு அவர்களை அழைத்து வந்து தொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்தி சாமிமலை தினேஷ் கலாசார மண்டபத்தில் கலந்துரையாடலை நடத்திய போதே இவ்வாறு தெரிவித்தார்.

சாமிமலை பிரதேச இணைப்பாளர்களான என்.ஜெயபால், எஸ்.மோகன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில்,

ஆசிய நாடுகளில் தொழிலாளர்களின் உரிமைகள், சம்பளம், வீட்டுப் பிரச்சினைகள் போன்றவற்றை ஆராய்வதற்காக வந்துள்ள பிரதிநிதிகளை மலையகத்துக்கும் கூட்டி வந்துள்ளோம். அவர்களோடு மனம் விட்டுக் கதைத்து அவர்கள் பணிபுரியும் நாடுகளில் தொழிலாளர்களின் நிலைமை, வசதி அல்லது வசதியின்மை, எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவற்றை நாமும் அறிந்து கொள்ள வேண்டும்.

மலையக மக்களைப் பற்றி தமிழ் நாட்டவர்களுக்கே சரியாக எதுவும் தெரியாத, புரியாத நேரத்தில் வேறு மாநிலங்களிலிருந்து வருகை தந்துள்ளவர்கள் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டுவது வரவேற்கத்தக்கது. எமது நாட்டில் போலவே, அவர்கள் நாட்டிலும் தொழிற்சங்கத்தில் அங்கம் வகிக்காதவர்கள் இருக்கின்றார்கள். எனினும் அவர்கள் அமைப்பு ரீதியாக ஒன்றுபட்டு தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கிறார்கள். அந்த முறையை நாமும் பின்பற்றலாம்.

அதே நேரத்தில் நாம் மந்தைக் கூட்டமாக இருந்து விடக் கூடாது. வழிதவறிச் செல்பவர்களை நாம் தான் விட்டுக் கொடுத்து சரியான வழியைக் காட்டித் திருத்த வேண்டும்.

அதேநேரம், நாம் எமது பலத்தையும் பலவீனத்தையும் எண்ணிப் பார்த்தே எதையும் செய்வதற்கு களத்தில் இறங்க வேண்டும். மேலும் இடம், பொருள், ஏவல் என்பதைப் பார்த்தே தீர்மானிக்க வேண்டும். எனவேதான் எமது அமைப்பு உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்கவில்லை. எதிர்காலத்தில் சரியான தீர்மானத்தை நிச்சயம் எடுப்போம் என்றார்.

# மண் பெறுவதற்கு விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாட்டினால் புனரமைப்பு வேலைகள் பாதிப்பு

## - நீர்ப்பாசன பணிப்பாளர் எஸ். மோகனராஜா

மண்டூர்,

வெள்ளத்தினால் ஏற்பட்ட அழிவுகளை புனரமைப்பதற்கு தேவையான மண்ணை பெறுவதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு காரணமாக புனரமைப்பு வேலைகளை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளர் எஸ். மோகனராஜா தெரிவித்தார். இது விடயமாக அவர் தகவல் தருகையில் மேலும் கூறியதாவது,

பெரு வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர்ப்பாசன வாய்க்கால்களுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் அவை புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். இல்லையேல் சிறுபோக நெற் செய்கையை மேற்கொள்ள முடியாத அவலம் ஏற்படும்.

இதனை கவனத்தில் கொண்டு சேதமடைந்த வாய்க்கால்களை புனரமைக்கும் பணிகளை நாம் விரைவாக மேற்கொண்டுள்ளோம். இருப்பினும் புனரமைப்பு வேலைகளுக்கு தேவையான மண்ணை பெறுவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளில் பிரச்சினை எவையும் ஏற்படாத போதிலும் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் மண் அகழ்வதற்கு அனுமதி பெற வேண்டும் என்று கிராம உத்தியோகத்தர்களால் வற்புறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இல்லையேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

பெரும்போக நெற்செய்கையை ஆரம்பிப்பதற்கு ஏதுவாகவே நாம் விரைவாக புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டுள்ளோம். இந்த நிலையில் அனுமதி பெற வேண்டும் என்று அரச திணைக்களத்தை நிர்ப்பந்திப்பது கவலையளிக்கிறது. இந்த நிர்ப்பந்தம் காரணமாக புனரமைப்பு வேலைகளை திணைக்களம் கைவிட வேண்டியுள்ளது. இதற்குப் பதிலாக ஒப்பந்தகாரர்களுக்கு வேலைகளை கையளிப்பதனால் ஏற்படும் காலதாமதத்துக்கு நீர்ப்பாசன திணைக்களத்தை குற்றம் சுமத்த முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# தங்கச் சங்கிலியை அபகரித்த நபர் பொலிஸாரால் கைது

பதுளை,

ஆசிரியை ஒருவரின் கழுத்தில் அணியப்பட்டிருந்த தங்கச் சங்கிலியை பறித்துச் சென்றவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எல்ல பகுதியின் தொடம் கொல்லை என்ற இடத்தில் நேற்று முன்தினம் மாலை ஆசிரியை வீட்டை நோக்கி சென்று கொண்டிருக்கையிலேயே தங்கச் சங்கிலி பறிப்பு இடம் பெற்றுள்ளது.

இதையடுத்து அவ் ஆசிரியை எல்ல பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட புகாரின் பேரில் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் இரவு அவரை கைது செய்துள்ளனர்.

பறிக்கப்பட்ட தங்கச் சங்கிலியின் பெறுமதி 32 ஆயிரம் ரூபா என்று குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதனைப் பறித்தவர் தொடர்பாகவும் அவ் ஆசிரியை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட புகாரில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக எல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி. எம். பி. பண்டார மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

# தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களுக்கென்று வேறுபட்ட கல்வி முறைகள் இங்கு கிடையாது

## மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க

கம்பளை,

தமிழ்,சிங்கள, முஸ்லிம் மாணவர்களுக்கென்று இந்நாட்டில் வேறுபட்ட கல்வி முறைமைகள் கிடையாது. அனைத்து மாணவர்களுக்கும் ஒரே விதமான கல்வி முறைமைதான் உள்ளது என்று மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க கூறினார்.

கம்பளை வெலம்பொட முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் அதிபர் சயித் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில்,

இந்நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களுக்கென்று வேறுபட்ட கல்வி முறைகள் கிடையாது. எமது நாட்டு ஜனாதிபதியின் ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற கொள்கைக்கு அமைய அனைத்து மாணவர்களுக்கும் ஒரேவிதமான கல்வி முறை தான் இருக்கின்றது. முன்பு ஒரு சில பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டும் தான் பல்கலைக்கழகம் செல்லக் கூடிய வாய்ப்பு இருந்தது. இப்பொழுது எமது ஜனாதிபதியின் ஆயிரம் பாடசாலை திட்டத்தின் கீழ் கூடுதலான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லக் கூடிய வாய்ப்பை பெறுகின்றனர்.

மத்திய மாகாணத்திலும் ஆயிரம் பாடசாலை திட்டத்திற்கு பல பாடசாலைகள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. இப்பாடசாலைகள் ஒவ்வொன்றிற்கும் 3 கோடி ரூபாவிற்கு மேல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் எமது மாகாணத்திலும் சிறந்த கல்வி சார் சமூகமொன்றினை உருவாக்கக் கூடிய வாய்ப்பு கிட்டியுள்ளது.

'கற்பவனாக இரு, கற்பிப்பவனாக இரு அல்லது கற்பவனுக்கு உதவி புரிபவனாக இரு, நான்காமவனாக இராதே' என்ற நபிகளின் பொன்மொழிக்கமைய நான் மாணவனாக இருந்து அதன் பின் ஆசிரியராக கல்வியமைச்சராக மாணவர் சமூகத்துக்கு சேவை செய்பவனாக இருக்க கிடைத்த தற்கமைய நான் பெரும் பாக்கியசாலியாக கருதுகிறேன் என்றார்.

# திருமலையில் 166 வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப்பதிவு

(திருகோணமலை மேலதிக நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில 166 வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப்பதிவுகள் நேற்று இடம்பெற்றன.

காலை 7 மணிக்கு ஆரம்பமான வாக்களிப்புகளில் மக்கள் ஆர்வமுடன் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

கிண்ணியா நகர சபையில் 21 வாக்களிப்பு நிலையங்களும், கிண்ணியா பிரதேச சபையில் 15 வாக்களிப்பு நிலையங்களும், மூதூர் பிரதேச சபையில் 45 வாக்களிப்பு நிலையங்களும், திருகோணமலை நகர சபையில் 36 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டு வாக்குப்பதிவுகள் இடம்பெற்றன.

திருகோணமலை நகர சபையில் 12 பேரைத் தெரிவு செய்வதற்காக 4 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளும், 4 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன.

மூதூர் பிரதேச சபையில் 11 பேரைத் தெரிவு செய்வதற்காக 4 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளும் 3 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன. கிண்ணியா நகர சபையில் 5 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளும் 8 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன. 7 பேரைத் தெரிவு செய்வதற்காக சுமார் 21 ஆயிரத்து 69 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். வாக்களிப்பு நிலையங்களில் இதுவரை எவ்வித அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு பகுதிக்கு குழாய்நீர் எப்போது கிடைக்கும்?

யுத்த அனர்த்தங்களால் மண்டைதீவு உவர்நீர் தடுப்பு அணைக்கட்டுக்கள் உடைந்துள்ளன. இதனால் கடல்நீர் மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்து அங்குள்ள ஒரு சில நன்னீர்க் கிணறுகளையும் உவர்த் தன்மையடைய வைத்துள்ளது.

தற்போது நிலவிவரும் கடும் வரட்சியால் மக்கள் குடிநீர்த் தட்டுப்பாட்டால் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். குறிப்பாக, கரையோரப்பகுதி மக்கள் குடிநீர்த் தட்டுப்பாட்டால் பெரிதும் பாதிக்கப் பட்டு வருகின்றார்கள்.

> **தங்கள் சொந்த இடங்களில் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படாத பட்சத்திலும் தங்கள் சொந்தவூரில் வாழ்கின்றோம் என்ற திருப்தியில் பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் அன்றாட வாழ்வை நகர்த்தி வருகின்றனர்.**

வேலணை பிரதேச சபை, குடிநீர் வழங்கும் சபை என்பன மூலம் மக்களுக்கு பவுஸர் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வந்தபோதும் இப்பகுதி மக்களுக்கு அது திருப்தியாகக் கிடைப்பது இல்லை என பிரதேசவாசி ஒருவர் தெரிவிக்கின்றார். மக்கள் குடிநீர் தேடி கொள்கலன்களோடு அலைந்துதிரிவதை காணக் கூடியதாகவுள்ளது.

இதேவேளை, மண்டைதீவுப் பகுதிக்கு அல்லைப்பிட்டி செட்டிகாட்டிலிருந்து குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்தை துரித கதியில் அமுல்படுத்தி மண்டைதீவு மக்களின் நீண்ட நாள் பிரச்சினையான குடிநீர்ப் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இடம் பெயர்ந்து வன்னியிலும் நலன் புரி நிலையங்களிலும் தங்கியிருந்த மக்கள் தற்போது தங்கள் சொந்த இடமான மண்டைதீவுக்கு குடும்ப சகிதமாகத் திரும்பிய வண்ணம் உள்ளனர்.

இவர்கள் தங்கள் சொந்த இடங்களில் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாத பட்சத்திலும், தங்கள் சொந்த மண்ணில் வாழ்கின்றோம் என்ற திருப்தியில் பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் அன்றாட வாழ்வை நகர்த்திவருகின்றனர்.

அல்லைப்பிட்டி - செட்டிகாட்டுப் பகுதியில் இருந்து குழாய் மூலம் மண்டைதீவுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தை இனியும் தாமதியாது உடன் நடைமுறைப் படுத்த முன்வருமாறு சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு இப்பகுதி மக்கள் உருக்கமான வேண்டுகோள் விடுத்துவருகின்றனர்.

அல்லைப்பிட்டி - செட்டிகாட்டுப் பகுதியிலில் இருந்து 12 மைல் தொலைவில் உள்ள ஊர்காவற்றுறைப் பகுதிக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்கமுடியுமானால், 3 1/2 மைல் தொலைவில் உள்ள மண்டைதீவுக்கு ஏன் குழாய் மூலம் வழங்கமுடியாது? என மக்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

ஆகவே, இனியும் தாமதிக்காது மண்டைதீவு பகுதிக்கு உடன் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்தை தாமதியாது நிறைவேற் இப்பகுதி மக்களின் குடி நீர் பிரச்சினைக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

மீளக்குடியேறிய மக்கள் பலதரப்பட்ட வாழ்வாதாரப் பிரச்சினைகளுடன் வாழவேண்டிய நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதைவிட மின்சாரப் பிரச்சினை வேறு, யுத்த அனர்த்தங்களால் துண்டிக்கப்பட்ட மின்சாரம் இதுவரை நிரந்தரமாக பொருத்தப்படவில்லை. தொலைபேசி இணைப்பு இதுவரை மண்டைதீவுக்கு வழங்கப்படவில்லை. மக்கள் தங்கள் தொலைபேசித் தேவையை நிறைவுசெய்ய யாழ். நகர் செல்கின்றார்கள்.

இதனால், மக்கள் பல அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றார்கள். மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரமாக தீர்வு கிடைக்கப் பெற்று மக்கள் இயல்புவாழ்க்கைக்குத் திரும்ப சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழிவகுத்துக் கொடுக்கவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

●வேல[illegible]

# SPOKEN ENGLISH

*It is a Sunday Morning Rohan is on the way to Market. He meet his friend Theepan on his way. The dialogue is on follows.*

*ஞாயிற்றுக்கிழமை காலை ரொஹான் சந்தைக்கு போய்கொண்டிருக்கும் வழியில் அவனது நண்பன் வசந்தனை சந்திக்கிறான்.இவர்கள் இருவருக்கிடையிலான உரையாடல் கீழே ...*

*Rohan: Good morning Theepan.*

*ரொஹான்: காலை வணக்கம் தீபன்*

*Theepan: Good morning Rohan. It is long since we met. Is n't it? Where to early in the morning?*

*தீபன்: காலை வணக்கம் ரொஹான். நாங்கள் நீண்ட காலத்திற்குப்பிறகு சந்திக்கறமல்லவா? காலையிலல் எங்கே போகிறாய்?*

*Rohan: I am on the way to Thirunelveli Market. By the way where are you going?*

*ரொஹான் நான் திருநெல்வேலி சந்தைக்குச் செல்கிறேன். நீ எங்கே செல்கிறாய்?*

*Theepan: I am on the way English tuition class?*

*தீபன்: நான் ஆங்கில வகுப்புக்குச் செல்கின்றேன்.*

*Rohan: Are you preparing for an Exam or just you want to improve your English Knowledge?*

*ரொஹான்: நான் பரீட்சைக்கு தயார் செய்யவா? அல்லது ஆங்கில அறிவை விருத்தி செய்யவா?*

*Theepan: mm…mm…. actually speaking for both reasons.*

*தீபன்: ம்ம்ம்...... உண்மையில் இரண்டுக்குமாகத்தான்.*

*Rohan: That means have you got an idea of going abroad?*

*ரொஹான் அது வந்து வெளிநாட்டுக்கு செல்வதற்கான திட்டம் ஏதும் இருக்கின்றதா?*

*Theepan: Yes, please. In another two month times.I will be siting for my IELTS Examination. conducted by British Council.*

*தீபன்: ஆம். அடுத்த இரண்டு மாத இறுதியில் நான் ஐஉ௸கூகு பரீட்சைக்கு தோற்ற இருக்கின்றேன்.*

*Rohan: So you are very serious is preparing for your exam studying English.*

*ரொஹான்: ஆகவே, நீ மிகவும் கடுமையாக ஆங்கிலத்தை பரீட்சைக்காக படித்துக் கொண்டிருக்கிறாய்.*

*Theepan: Of course. How about you?*

*தீபன்: நிச்சயமாக. நீ எப்படி இருக்கின்றாய்.*

*Rohan: I have faced a job interview is a private bank. I have faced well in the interview and they are satisfied with my qualification. hope fully I will get the appointment soon.*

*ரொஹான்: நான் ஒரு வேலைக்காக தனியார் வங்கியொன்றின் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியிருக்கின்றேன். நான் நல்லபடியாக நேர்முகத் தேர்வை எதிர் கொண்டேன். அவர்களும் என்னுடைய கல்வித் தகமை பற்றி திருப்தி அடைந்துள்ளார்கள். நிச்சயமாக நான் விரைவில் பணி நியமனத்தை பெற்றுவிடுவேன்.*

*Theepan: Is that so, my congratulation. By the way are you staying at the same place still.*

*தீபன்: அப்படியானால் எனது வாழ்த்துக்கள். அத்துடன் நீ இப்பவும் முன்னர் வசித்த இடத்திலேயா இருக்கின்றாய்?*

*Rohan: Oh, yes. You could visit me when you are free.*

*ரொஹான்: ஆம். நீ ஓய்வாக இருக்கும் போது என்னை வந்து சந்திக்க முடியும்.*

*Theepan: OK. when time permits I will visit you. Rohan it is time for me to take leave of you…*

*தீபன்: எந்த நேரத்தில் நான் உன்னை வந்து சந்திப்பது? ரொஹான், நீ புறப்படும் நேரம் வந்துவிட்டது....*

*Rohan: Now it is 8.05 am, when in your class.*

*ரொஹான் இப்பொழுது நேரம் 8.05. என்ன நேரம் உனக்கு வகுப்பு?*

*Theepan: It is at 8.30 am.*

*தீபன்: காலை 8.30 மணிக்கு.*

*Rohan: Ok. then you carry on. I am very happy, I met you. good bye.*

*ரொஹான்: சரி. உன்னை சந்தித்ததில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். போய்வருகிறேன்.*

*Theepan: I too very happy. we will meet again. Good bye.*

*தீபன்: எனக்கும் மிக்க மகிழ்ச்சி.நாங்கள் மீண்டும் சந்திப்போம். போய்வருகிறேன்.*

**எஸ். சிவசுப்பிரமணியம்**
முன்னாள் வருகை தரு விரிவுரையாளர்
யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகள்



பொதுவாக குழந்தைகளுக்கு 15 ஆவது வயது வரை இந்த சதை காணப்படுகிறது. மேலும் குழந்தைகளுக்கு ஜலதோஷம் காரணமாக தொல்லை ஏற்படும் போது தொண்டைப் பகுதி பாதிக்கப்படுகிறது. சிலருக்கு குளிர்ந்த பானங்கள் மற்றும் ஐஸ்கிரீம் உட்கொண்ட பின்னர் தொண்டை கட்டுகிறது. இதனால் உணவு உட்கொள்ள தடை ஏற்படுகிறது. காய்ச்சல், கை, கால்வலி வருகிறது. உடனே தக்க மருந்துகளை எடுத்துக்கொண்டால் சரியாகிவிடும்.

குளிர்ந்த பானங்கள் மற்றும் ஐஸ்கிரீம் போன்றவை சாப்பிட்டு முடித்த பிறகு இலேசான சுடுதண்ணீரை அருந்தினால் தொண்டை வலியிலிருந்து தப்பிக்கலாம். சில சமயங்களில் இந்த வியாதி குழந்தைகளுக்கு அடிக்கடி வருகிறது. இதற்கு நாட்பட்ட தொண்டை சதை அழற்சி என்று பெயர். இதனால், குழந்தைகளுக்கு உணவு உட்கொள்ள விருப்பம் இல்லாமை மற்றும் உணவு உட்கொள்ளும் பொழுது வலி ஆகியவை ஏற்படுகின்றன. இவ்வாறு அடிக்கடி தொந்தரவு செய்யும் பொழுதே நாம் இந்த சதையை அறுவை சிகிச்சை செய்து அகற்ற வேண்டும். அறுவை சிகிச்சை செய்துகொள்ளுதலின் முக்கியத்துவம் என்னவென்றால் பிற்காலத்தில் அக்குழந்தைக்கு வாதக் காய்ச்சல் மற்றும் சிறுநீரக பாதிப்புகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். தெற்காசியாவில் இருக்கும் குழந்தைகளுக்கு காணப்படும் இதயநோய்களில் மிக முக்கியமானவை தொண்டையில் வாழும் கிருமிகளினால் வருபவையே, ஆதலால், தொண்டைநோயை உடனுக்குடன் சரி செய்துகொள்வது அவசியம். இதற்கு காது, மூக்கு, தொண்டை மருத்துவரின் உதவியை நாட வேண்டும். தொண்டையில் ஏற்படும் ஒவ்வாமையை மாத்திரைகளால் சரிவர தீர்வு காணமுடியாத பட்சத்தில் அறுவை சிகிச்சை செய்துகொள்வதே நல்லது. அறுவை சிகிச்சை செய்துகொண்டால் குழந்தையின் எதிர்ப்புசக்தி குறைந்து விடுகிறது என்ற கருத்து நிலவிவருகிறது. ஐந்து வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தொண்டையில் சதை வளர்ந்திருந்தால் அறுவைச் சிகிச்சை செய்து அகற்றலாம். சில குழந்தைகள் குறிப்பிட்ட வயதைத் தாண்டியும் மழலையாக பேசும். சில குழந்தைகளுக்கு டா, தா முதலிய வார்த்தைகள் உச்சரிப்பது கடினமாக இருக்கும். இதற்கு காரணம் நாக்கிற்கு அடியில் சுருக்கு இருப்பதால் தான். இதனை ஐந்து வயதிற்குள் சரி செய்து விடுவது நல்லது. இல்லாவிடில், அவர்களுக்கு பின்னாளில் உச்சரிப்புப் பிரச்சினை எழ வாய்ப்பு உண்டு. பெரியவர்களுக்கு ஏற்படும் தொண்டைப் பிரச்சினை சில பெரியவர்களுக்கு உணவு உட்கொள்வதில் தடங்கலை உண்டாகும். ஒரு சில நாட்கள் இருந்தால் அதனைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை. ஆனால், ஓரிரு வாரங்களுக்கு மேல் இந்த பிரச்சினை இருந்தால் உடனே காது, மூக்கு, தொண்டை மருத்து வரை அணுகி சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். சில நேரங்களில் தொண்டை வலியாக இருந்தாலும் புற்றுநோயின் ஆரம்பமாக இருக்கலாம். ஆரம்பத்திலேயே அதனை கண்டறிந்து அதற்கு தகுந்த மருத்துவம் செய்தால் விரைவில் தீர்வு காணப்படும். பெண்களுக்கு கர்ப்பப்பை புற்றுநோய் சாதாரணமாக காணப்படுவதைப்போல, ஆண்களுக்கு பெரும்பாலும் தொண்டையுடன் தொடர்புடைய புற்றுநோய் ஏற்படுகிறது. உணவு உட்கொள்ளவதில் தடங்கல், எடை குறைதல், வாந்தி, கழுத்தில் கட்டி வளருதல், குரல் மாற்றம், மூச்சுத்திணறல் முதலிய அறிகுறிகள் இருந்தாலும் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம். இவற்றில் ஓரிரு அறிகுறிகள் இருந்தாலே மருத்துவரை அணுகி உரிய சிகிச்சை பெற்றுக் கொள்வது சிறந்தது.

சில சமயங்களில் குரல் சரிவர பேசமுடியாமல் போகலாம். இதற்கு காரணம், குரலை சீராக வைக்காமல் இருப்பது தான். மிக அழுத்தமாக நாம் பேசும்பொழுது குரல்வளையில் தேய்தல் உண்டாகி பின்னர் சதை உண்டாகிறது. இரண்டு வாரங்கள் மௌனமாக இருந்தால் இந்த பாதிப்பு குணமாகி விடும். இல்லாவிடில் காது, மூக்கு, தொண்டை மருத்துவரை அணுக வேண்டும்.



## பலாக்காய் கறி

**தேவையான பொருட்கள்**

பிஞ்சுப் பலாக்காய்-250 கிராம், சின்ன வெங்காயம்-5 பல்லு, பச்சைமிளகாய்-3, கறிவேப்பிலை - தேவையான அளவு, கடுகு-1/4 தேக்கரண்டி, வெந்தயம்-1/4 தேக்கரண்டி, பெருஞ்சீரகம்-1/2 தேக்கரண்டி, வெள்ளைப்பூடு-3 பல்லு, மிளகு-1/4 தேக்கரண்டி, மிளகாய் தூள்-1/2 தேக்கரண்டி, மஞ்சள் தூள்-1/2தேக்கரண்டி, தேங்காய்ப் பால் - 1 1/2 தம்ளர், உப்பு - தேவையான அளவு, தேங்காயெண்ணெய் - 1/2 மேசைக்கரண்டி.

**செய்முறை**

பலாக்காயைச் சுத்தம்செய்து நடுத்தரத் துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும், வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலையைச் சுத்தம் செய்து குறுணலாக வெட்டிக் கொள்ளவும்.

மிளகு, வெள்ளைப்பூடை அம்மியில் அரைப்பதமாக அரைத்துக்கொள்ளவும், எண்ணெயைக் கொதிக்கவைத்து வெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கடுகு, வெந்தயம், பெருஞ்சீரகம் இவற்றைத் தாளித்துக் கொள்ளவும்.

தாளித்து பொன்னிறமாகியதும் பலாக்காய், மஞ்சள்தூள், மிளகாத்தூள், உப்பு இவற்றைச் சேர்த்துக் கிளறி பின் தேங்காய்ப் பாலையும் சேர்த்து வேகவிடவும்.

பலாக்காய் வெந்து கறி கூட்டுப்பதமாக வரும்போது மிளகு, வெள்ளைப்பூடு இவற்றைச் சேர்த்துக் கிளறி கறி இறுக்கமாக இருக்கும் பதம் ஆகியவுடன் இறக்கிக்கொள்ளவும்.



## தட்டை பலகாரம்

**தேவையான பொருட்கள்**

கோதுமை மா - 1 கிலோ, சீனி - 1/2 கிலோ, முட்டை - 3, தேங்காய் - 1, தேங்காயெண்ணெய் - 1/2 லீற்றர், ஏலம் - 2 பைகள்.

**செய்முறை**

கோதுமை மாவை நன்கு அவித்து எடுக்கவும். தேங்காயை உடைத்து பூவாக துருவி எடுக்கவும். முட்டை, சீனி, ஏலம் ஆகியவற்றை ஒன்றாக சேர்த்து குழைத்து ரொட்டிக்கு குழைப்பது போல உருட்டி எடுத்து சிறு சிறு உருண்டைகளாக்கி தட்டி எண்ணெயை நன்கு கொதிக்க வைத்து அதில் போட்டு பொன்னிறமாக பொரிந்ததும் எடுத்து பரிமாறலாம்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினி பிட்ஸ்



- பூபதி பாண்டியன் இயக்கும் படத்தில் ஆர்யா ஹீரோவாக நடிக்கிறார்.
- சமீரா ரெட்டிக்கு ருசியாக சமைக்கத் தெரியுமாம். இவர் சிக்கன் சமைப்பதில் கைதேர்ந்தவர்.
- அடிக்கடி தன் படங்களில் நடிக்க வாய்ப்புத் தரும் தனுஷ் தான் காமெடி நடிகை ஆர்த்திக்கு குருவாம்.
- வில்லி வேட வாய்ப்புக்களே வருகிறது. அதனால், குணச்சித்திர வேடங்களுக்காகக் காத்திருக்கிறாராம் முன்னாள் ஹீரோயின் நளினி.
- மணிரத்தினம் இயக்கும் படத்தில் விஜய், மகேஷ்பாபு, ஆர்யா ஆகியோர் நடிக்கின்றனர். ஹீரோயினாக நடிக்க அனுஷ்காவிடம் பேச்சு நடக்கிறது.
- பார்ட்டி என்றால் ஸ்ரேயா, ரீமா சென்னுக்கு ரொம்பவே பிடிக்குமாம். அழைப்பு வரும் எந்தப் பார்ட்டியையும் இவர்கள் மிஸ் பண்ண மாட்டார்களாம்.
- ''இதுவொரு பொன்மாலைப் பொழுது'' என வைரமுத்து தனது முதல் பாடல் எழுதிய மார்ச் 10ஆம் திகதி அவரது மகன் மதன் கார்க்கி பிறந்த தினம். இப்போது 'பொன்மாலைப் பொழுது' என்ற படத்திற்கு கார்க்கி பாடல் எழுதுகிறார் என பூரிப்படைகிறார் வைரமுத்து.
- பாக்கியராஜ் இயக்கத்தில் அவரது மகன் சாந்தனு நடித்த 'சித்து பிளஸ் 2 'தெலுங்கில் 'ஐ லவ் ஐதராபாத்' என்ற பெயரில் 'ரீ-மேக்' ஆகிறது. இதிலும் ஹீரோ சாந்தனு.
- 'உருமி' படத்தில் 400 ஆண்டுகளுக்கு முன்பு வழக்கத்தில் இருந்த மலையாள மொழியில் பேசியிருக்கிறார் பிரபுதேவா.
- 'வேலாயுதம்' படத்தில் ஹொலிவுட் ஸ்டன்ட் மாஸ்டர் டாம் டெல்மார் அமைக்கும் சண்டைக் காட்சியில் நடிக்கிறார் விஜய்.
- ஏற்கெனவே ரிலீஸ் ஆகி நிறுத்தப்பட்ட 'நில் கவனி செல்லாதே' படம் ரிலீஸ் ஆவதால் குஷியாக இருக்கிறார் ஹீரோயின் தன்ஷிகா.
- விளம்பரப் படங்களில் அதிக கவனம் செலுத்துகிறார் பியா.
- 'பயணம்' படத்தில் நடித்த பூனம் கபூர் தனது பெயரை நக்ஷத்ரா என மாற்றியுள்ளார்.
- மோகன்லாலுடன் ஸ்ரேயா நடித்துவந்த 'கேஸனோவா' மலையாள பட ஷூட்டிங் நின்றிருந்தது. அடுத்த ஷெட்யூல் ஏப்.10 தொடங்குகிறது.
- தெலுங்கில் 'சக்தி' என்ற பெயரில் வெளியாகி வெற்றிபெற்ற படம் தமிழில் 'ஓம் சக்தி' என்ற பெயரில் டப்பிங் செய்யப்படுகிறது. 'அருந்ததீ' படம் மூலம் அனுஷ்காவுக்குக் கிடைத்த வெற்றிபோலவே இந்த 'ஓம் சக்தி' படம் இலியானாவுக்கு அதிஷ்டத்தைத் தரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. படத்தில் இலியானா ஜோடியாக ஜூனியர் என்.டி.ஆர். நடித்திருக்கிறார். இவர்களுடன் பிரபு, எஸ்.பி. பாலசுப்பிரமணியம், நாசர், ஜாக்கி ஷராப் ஆகியோரும் நடித்துள்ளனர்.



வானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ர் கமலஹாசனின் மகள் ஸ்ருதிஹாசன் குச்சுப்புடி கற்றுக்
டிருக்கிறார். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும்
கள். அ கூற்று யாருக்கு பொருந்துதோ இல்லையோ... கமல
ன் மகளுக்கு ரொம்பவே பொருந்துகிறது. ஒரேயொரு மாற்றம்
ப் பதிலாக தந்தை என்று சொல்ல வேண்டும். ஆம். முன்பு
க ஒலி' என்ற படத்தில் நடிப்பதற்காக கமலஹாசன் பரதநாட்டி
ார். படத்தில் கமலின் சலங்கை ஒலிக்கு மயங்காத மங்கையரே
என்று சொல்லும் அளவுக்கு பட்டிதொட்டியெங்கும் பிரபலமா
மல்லஹாசனின் பரதநாட்டியம். அப்பாவைப் போலவே இப்
கள் ஸ்ருதிஹாசன் ஒரு படத்திற்காக குச்சுப்புடி கற்றுக் கொண்
றார். ஆந்திராவின் பாரம்பரிய நடனமாக குச்சிப்புடி ஆடுவது
ஸ்ருதின் புதிய படம் ஒன்றில் காட்சி இடம்பெறுகிறதாம். இதற்
ான் குச்சுப்புடி கற்கிறார் ஸ்ருதி.

# 1 கோடி சிம்பு



குள்ளநரிக் கூட்டம்

**தமிழிலில்** 'வானம்' படத்தில் இடம்பெற்றுள்ள "எவன்டி உன்ன பெத்தான்.." என்ற பாடல் இந்தியில் ஆல்பமாக எடுக்கப்பட இருக்கிறது. இந்த ஆல்பத்தை ஒரு கோடி ரூபாயில் பிரமாண்டமாக எடுக்கவிருக்கின்றனர்.

தெலுங்கில் சூப்பர் ஹிட்டான 'வேதம்' படம் தமிழில் 'வானம்' என்ற பெயரில் உருவாகிவருகிறது. இதில் சிம்பு ஹரோவோகவும் அனுஷ்கா ஹீரோயினாகவும் நடித்துவருகின்றனர். படத்தில் சிம்பு தானே ஒரு பாடல் ஒன்றை எழுதி பாடியுள்ளார். "எவன்டி உன்ன பெத்தான்.... கையில கிடைச்சா செத்தான்.... செத்தான்.." என்று ஆரம்பிக்கும் இப்பாடல் இளைஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இப்பாடல் பெண்களை இழிவுபடுத்துவதாகவும் 'ராக்கிங்' செய்பவர்களுக்கு ஏதுவாக இருப்பதாகவும், தொடர்ந்து சிம்பு இது போன்ற பெண்களை இழிவுபடுத்துவதாகவும் குற்றம் சாட்டி இருந்தனர்.

இதனிடையே இப்பாடலை கேட்ட பொலிவுட் நிறுவனம் ஒன்று இந்தியில் ஆல்பமாக தயாரிக்க சிம்புவிடம் கேட்டுள்ளது. பொலிவுட் என்றதும் ஓ.கே சொல்லிய சிம்பு இப்பாடலுக்கான வேலையில் இறங்கியுள்ளார். மிகப்பிரமாண்டமாக எடுக்கப்பட இருக்கும் இந்த ஆல்பத்தில் சிம்புவே பாடலை எழுதி, பாடி, ஆடவும் இருக்கிறார். இவருடன் லண்டனை சேர்ந்த 30 நடனக் கலைஞர்களும் ஆடல் கலைஞர்களும் ஆடவிருக்கின்றனர். ஒரு கோடி ரூபா செலவில் எடுக்கப்படும் இந்த ஆல்பத்தை பிரபல நடன இயக்குனர் அகமது கான் டைரக்ட் செய்கிறார்.



மாப்பிள்ளை

# விசால் படத்தில் கவர்ச்சிப் பாடல்

**பிரபுதேவா** இயக்கும் புதிய படத்தில் விஷால் ஹீரோவாக நடிக்கிறார். சமீரா ரெட்டி ஹீரோயின். இப்படத்துக்கு இன்னும் பெயரிடப்படவில்லை. கவர்ச்சி பொப் பாடகி சோஃபி சவுத்திரியை இப் படத்துக்காக ஒரு பாடலுக்கு நடனம் ஆடுவதற்கு ஒப்பந்தம் செய்திருக்கிறார் பிரபுதேவா.

இது பற்றி சோஃபி கூறும் போது, 'பிரபுதேவா இயக்கும் படத்துக்காக பொலிவுட்டிலிருந்து வந்திருக்கிறேன். எனது நண்பரும் டிசைனருமான மனிஷ் மல்ஹோத்ரா இப்படத்துக்காக எனக்கு காஸ்டியூம் வடிவமைத்திருக்கிறார். தமிழில் நடிக்கவேண்டும் என்பது எனது ஆசை. கொலிவுட்டில் நல்ல கதைகளுடன் படங்கள் வெளிவருகின்றன. மணிரத்தினம், ஷங்கர் படங்களில் நடிக்க ஆசை. நான் கமல் ரசிகை. ரஜனி, விஜய், அஜித் ஆகியோரையும் பிடிக்கும். அவர்களுடன் நடிக்க ஆசை. பிரபுதேவா படத்தில் நடிக்கும் பாடல் பற்றி விரிவாக இப்போது கூறமுடியாது. தமிழில் ஹீரோயினாக நடிக்க வேண்டும் என்பது எனது கனவு. அது முழுமையாக நிறை வேறும் என்று எதிர்பார்க்கிறேன். என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பணிகள் பல ஆற்றிவரும் கொக்குவில் புரவலர் மாணிக்கம் சுப்பிரமணியம்




பல்வேறு ஆற்றல்களைக் கொண்ட பூரண ஆளுமை கொண்ட நற்சமூகம் ஒன்றை உருவாக்கும் மகத்தான குறிக்கோள் கல்வியினால் நிறைவு பெறவேண்டும். அக் குறிக்கோள்களை நிறைவேற்றும் நிறுவனங்களில் ஒன்றாக பாடசாலைகள் செயற்படுகின்றன. ஒரு பாடசாலையைத் திறப்பது ஆயிரம் சிறைச்சாலைகளை மூடுவதற்கு சமனாகும். பாடசாலைகளின் பௌதீக வளங்கள் குறிக்கோள்களை எய்துவதற்கு முக்கியத்துவம் பெறுகின்றன. கல்வி கற்பதற்குரிய வகுப்பறைகள், இணைப்பாடவிதான செயற்பாடான விளையாட்டில் ஈடுபடுவதற்கான விளையாட்டு மைதானங்கள் இன்றியமையாதவையாகக் காணப்படுகின்றன.

பதி சிறந்த கொக்குவில் கிராமத்தின் கொண்மணி மகுடமாக எழில் கொஞ்சும் வானளாவிய கட்டடங்களுடன் யாழ்ப்பாண நகரிலிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் காங்கேசன்துறை சாலைக்கு கிழக்கே கொக்குவில் இந்துக் கல்லூரி அமைந்துள்ளது.

இக்கல்லூரி பல தடைகளைத் தாண்டி நூற்றாண்டைக் கண்டு வீறுநடை போட்டுக்கொண்டிருக்கிறது. கல்விச்செல்வத்தை வாரி வாரி அள்ளி வழங்கிக்கொண்டிருக்கிறது. எத்தனையோ வைத்தியர்களை, பொறியியலாளர்களை,கல்வியாளர்களை, சட்டத்தரணிகளை, அதிகாரிகளை, ஆசிரியர்களை இன்னும் பலவேறு துறை சார்ந்த நிபுணர்களை உருவாக்கிய பெருமை கொண்டது. தொடர்ந்தும் உருவாக்கும் பணியில் முன்னணியாகத் திகழ்கின்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் எப்பொழுதும் கல்லூரித் தாயை மறந்தது கிடையாது. அவர்கள் எங்கெல்லாம் சென்றுவாழ்ந்தாலும் அன்னையின் வளர்ச்சியில் அக்கறைகொண்டவராகவே உள்ளார்கள். அன்னையின் உயர்ச்சிக்கு அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கல்லூரிக்குத்தேவையான பௌதீக வளங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இக் கல்லூரிக்கு பௌதீக வளங்களை வாரி வழங்கும் வரிசையில் முதன்மையானவராக, ஒப்பற்றவராக கொடைவள்ளல் மாணிக்கம் சுப்பிரமணியம் காணப்படுகிறார். இவர் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த மாணிக்கம் - பாக்கியம் தம்பதிகளின் புதல்வன் ஆவார்.

மாணிக்கம் சுப்பிரமணியம் கல்வி கற்ற காலத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஓலைக் கூரையைக் கொண்ட கல்விக் கூடமாகவே இருந்தது. அக் கல்விக் கூடம் சில விசமிகளால் காலத்திற்கு காலம் எரியூட்டப்பட்டது. இவர் கல்வி கற்ற காலத்தில் கல்லூரி அனுபவித்த சிரமங்கள், பௌதீக வளப் பிரச்சினைகள் எல்லாம் இவரின் மனதில் குடிகொண்டது.

மாணவப் பராயத்திலே கல்லூரிக்கு கட்டடங்கள் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாகிவிட்டது. அதோடு ஓலைக் கூரைகள், பாடசாலைத் தளபாடங்கள் எரிந்து சாம்பலாகிய பின் முன்னாள் அதிபர்களான ஹன்டி பேரின்பநாயகம், சி.கே. கந்தசுவாமி போன்றோர்கள் மூன்று மாடிக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு பட்ட கஷடங்கள் அவர்கள் பணம் சேகரிப்பதில் ஏற்பட்ட சிரமங்கள் என்பவையெல்லாம் அவரின் மனதில் ஆழப்பதிந்து காணப்பட்டது. இதனால் தான் தேடிய செல்வங்களையெல்லாம் கல்விப் பணிகளுக்கும் சமய, சமூகப் பணிகளுக்கும் வாரிவாரி வழங்கி வருகின்றார்.

இவர் 2002 ஆம் ஆண்டு கல்லூரிக்கு அயலிலுள்ள 3 பரப்புக் காணியையும், வீட்டையும் கொள்வனவு செய்து கல்லூரியுடன் இணைத்து, அக்கட்டடத்தை புனரமைத்ததோடு தனது சகோதரியான இராஜபரமேஸ்வரியின் ஞாபகர்த்தமாக கணினி நிலையம் அமைத்தார். இந்நிலையம் தற்போது சிறந்த முறையில் இயங்கிக்கொண்டிருக்கிறது.

ஒரு ஸ்தாபனம் நூற்றாண்டு காலத்தினைப் பூர்த்திசெய்வதென்பது ஒரு சாதாரண விடயமல்ல. நூற்றாண்டைக் கல்லூரிச் சமூகம் கொண்டாடவும், மாணவர்கள் கல்வி கற்பதற்குரிய வகுப்பறைப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யவும் தன்னலம் கருதாது பிரதி உபகாரம் எதுவும் எதிர்பாராது தான் பிறந்த மண்ணில் வாழும் வருங்காலச் சந்ததியினர் கல்வியில் சிறக்கவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் மூன்று மாடிக் கட்டடத்தை 2004 ஆம் ஆண்டு கல்லூரிக்கு அமைத்துக் கொடுத்தார்.

கல்லூரியின் வரலாற்றிலே இவருக்கு ஒரு நிரந்தர இடமுண்டு. இவரின் வள்ளல் தன்மையாக விளங்கும் இந்த மூன்று மாடிக்கட்டடத்திற்கு நூற்றாண்டு மண்டபம் என்று பெயர் சூட்டப்பட்டது.

2010ஆம் ஆண்டு கல்லூரி நூற்றாண்டைக் கொண்டாட மாணிக்கம் சுப்பிரமணியத்தின் பணி ஓர் உன்னதமான ஆரம்பமாக, அடித்தளமாக அமைந்தது. இவரால் அமைத்துக்கொடுக்கப்பட்ட இம் மூன்று மாடிக் கட்டடத்தில் ஏறக்குறைய 800 மாணவர்களுக்கு மேல் கல்வி கற்பதற்குரிய வசதிகளைக் கொண்டுள்ளது. அதோடு அடித்தளத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்ட 'சுப்பிரமணியம் மண்டபம்' ஒரு கலைக்கூடமாக ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. அதில் ஒரு தடவையில் 400 பேர் அமர்ந்து கலை நிகழ்ச்சிகளைப் பார்க்கக் கூடிய முறையில் நவீன வசதிகளுடன் காணப்படுகிறது. அதில் இருப்பதற்குரிய இருக்கைகளையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் சிறார்கள் கல்வி கற்பதற்கு 'சுப்பிரமணிம் மாலதி மண்டப்பத்தின்' இரண்டாம் மாடியினை அமைத்துக் கொடுத்துள்ளார். கொழும்பில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு மூன்று மாடிக் கட்டடம் ஒன்றையும், தமிழ்ச் சங்கத்திற்கு மூன்றாவது மாடிக் கட்டடத்தையும், விவேகானந்தா சபைக்கு பாலர் பாடசாலை கீழ் மாடிக் கட்டடத்தையும், உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தில் விளையாட்டு மைதானத்திற்கு 6 பரப்புக் காணியைக் கொள்வனவு செய்து கொடுத்தது மட்டுமல்லாமல் திறந்த வெளியரங்கு ஒன்றையும் அமைத்துக்கொடுத்துள்ளார். இன்னும் பல கல்விக்கூடங்கள் கல்விப் பணிக்கு என்று உதவிகளைக் கேட்கும் போதெல்லாம் இல்லையென்று சொல்லாமல் உதவிபுரிந்து வருகின்றார். கிளிநொச்சியில் ஒரு முன்பள்ளிக் கட்டடத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார்.

மேலும், நீர்கொழும்பு ஸ்ரீ கதிரேசன் வேலாயுத சுவாமி கோயில் தர்மகர்த்தா தலைவராக இருந்து பல திருப்பணிகளை காலத்திற்குக் காலம் ஆற்றிக்கொண்டு வருகின்றார். கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பகுதி முருகன் ஆலயத்தின் முகப்புத்தோற்றத்தை அலங்கரிக்கும் வகையில் ஒரு வளைவு உன்றை அமைத்துள்ளார். அத்தோடு, ஆலயத்தின் கல்யாண மண்டபம் இல்லாத குறையை நிவர்த்தி செய்ய ஆலயத்தின் தெற்கு வீதியில் காணி ஒன்றைக் கொள்வனவுசெய்து அதோடு பெரியதொரு சகல வசதிகளும் கொண்ட ஒரு கல்யாண மண்டபத்தையும் அமைத்துக் கொடுத்துள்ளார். இம்மண்டபம் மூலம் இன்று ஆலயத்திற்கு பெருமளவு வருமானம் கிடைக்கிறது.

தற்பொழுது கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு மைதானத்தில் ஒரு பார்வையாளர் அரங்கையும் ஒரு திறந்தவெளி அரங்கையும் பல மில்லியன் ரூபா செலவில் அமைத்துக்கொடுத்துள்ளார். அக்கட்டடங்கள் மைதானத்தில் எழில் கொண்டவையாக கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. மைதானத்தில் நடைபெறும் விளையாட்டுக்களைப் பார்ப்பதற்குரிய பார்வையாளர் அரங்கம் இல்லாத குறை காணப்பட்டது. இந்தக் குறையை கொடைவள்ளல் அவர்கள் நிவர்த்திசெய்துள்ளார். இன்று சுப்பிரமணியம் விளையாட்டு அரங்கும், மாலதி திறந்தவெளி அரங்கும் திறந்துவைக்கப்படவுள்ளது.

தற்காலத்தில் மனிதர்களில் சுயநலம் மேலோங்கிக் காணப்படுகின்ற நிலையில் திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் போன்ற ஒரு சிலரே பொது நலத்தை நோக்கிச்செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது. இவ்வரிசையில் இவரின் பணி முதன்மைப் படுத்தி போற்றப்பட வேண்டியது ஆகும். தமிழ் மண்ணில் நாவலர் பெருமான், சேர் பொன். இராமநாதன் போன்றவர்களுக்குப் பின்னர் கல்விப் பணியையும், சமூகப் பணியையும் ஆற்றுவதற்கு தோன்றிய பெரியார் மாணிக்கம் சுப்பிரமணியம் எனக் கூறினால் மிகையாகாது.

செல்வத்தை தேடிய சிலர் பல பணிகளை செய்கின்றார்கள். ஆனால், மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் கல்விப்பணியானது வருடம் முழுவதும் பயன்பெறக் கூடியதாகவுள்ள உன்னதமான பணியாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் எத்தனையோ மாணவர்கள் அக் கட்டடத்தில் சகல வசதிகளுடன் கல்வி கற்கும்போது மாணிக்கம் சுப்பிரமணியத்திற்கு நன்றி செலுத்துபவர்களாகவே காணப்படுகின்றார்கள். அவரின் வள்ளல் தன்மையில் பெரியதொரு உயர்ந்த தன்மை காணப்படுகின்றது. அதாவது, அதற்குச் சான்றாக கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திற்கு காணியைத் தான் கொள்வனவு செய்து, பல மில்லியன் ரூபா செலவில் கல்யாண மண்டபத்தை அமைத்து, அவைகள் முழுவதையும் ஆலய தேவஸ்தானத்திற்கு நன்கொடையாகப் பாரப்படுத்தியதும் தற்போது இராஜபரமேஸ்வரி



கணினிக் கூடமாக அமைந்திருக்கின்ற காணியையும் சட்டடத்தையும் கொள்வனவு செய்து கொக்குவில் இந்துக் கல்லூரிக்கே நன்கொடையளித்ததும் அவரின் வள்ளல் தன்மைக்கு இன்னும் ஒளியூட்டிக் கொண்டிருக்கிறது.

இவ்வளவு சிறப்புக்களைக் கொண்ட பேராளன் சுப்பிரமணியம் அவர்கள் அவதரித்த கொக்குவில் கிராமமும், அவர் கல்வி கற்ற கொக்குவில் இந்துக் கல்லூரியும் பெருமையடைகின்றன. மேலும், அவர்களின் உயர்வுக்கு காரணமாகவிருந்த அவரது துணைவியாரும் குடும்பத்தினரும் சமூகத்தால் போற்றப்படுகின்றார்கள். கல்விக்கு உயிர்கொடுத்தவன் ஒருபோதும் மரணிப்பதில்லை.

அதேபோல மாணிக்கம் அவர்கள் இம்மாநிலத்திலே தொடர்ந்து வாழ்ந்துகொண்டேயிருப்பார். கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகம் அக் கல்லூரிக்கு இவ் வள்ளலார் செய்த வள்ளலின் தொகைக்கு எதைப் பிரதியுபகாரம் செய்தாலும் அதை ஈடுசெய்ய முடியாது. அவரின் வள்ளல் தன்மைக்கு நிகரான பிரதி உபகாரம் எதுவுமே இல்லை!

***சி.செந்தில்குமரன்***
*ஆசிரியர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சட்டமும் சமூகமும் 18




## சட்டவலுப்பெறாது போன ஒப்பந்தங்கள் (பகுதி இரண்டு)

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

இத்தகைய துலங்கல் அற்ற அரசியல் சூழல் (Glimsy Political Environment)) இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அவர்களது சமுதாய மேம்பாட்டைத் தகர்த்தது. ஜனநாயகப் பிரதிநிதித்துவ அரசியல் வெளிப்பாட்டுக்குப் பெரும் குந்தகம் விளைவித்தது. இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் நம்பிக்கையற்றதொரு அரசியல் பாதைக்கான வழித்தடம் ஒன்றைத் திறந்தது. அதன் வழியிலேயே அவர்களது அரசியல் அபிலாஷைகளை அடையப் பெறலாம் என்ற ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கியது. இதுவே இலங்கைத் தமிழர் வரலாற்றில் அவர்களை அரசியல் அநாதைகளாக்குவதற்கு பிள்ளையார் சுழிபோட்டது அல்லது அதன் ஆரம்பப் புள்ளியாக அமைந்தது. இது இன்றும் தொடர்கதையாகவே தொடர்கின்றது.

உதாரணமாக, 1939 -1945 வரை இடம் பெற்ற இரண்டாம் உலகப் போர் முடிந்த கையோடு இலங்கைக்கு அரசியல் சீர்திருத்தம் செய்வதற்காக சோல்பரிக் கமிஷன் தலைமையில் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு இங்கிலாந்து அரசினால் இலங்கைக்கு அது அனுப்பப்பட்டது. அதற்கு சோல்பரிப் பிரபு என்பவர் தலைமை தாங்கினார். இந்த ஆணைக் குழு பல அரசியல் பிரமுகர்களை அழைத்து சாட்சியங்களைப் பதிவுசெய்தது. இக்குழு முன்னிலையில்அப்போதைய தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் ஏழு மணித்தியாலங்கள் சாட்சியம் அளித்தார்.

இந்த ஆணைக்குழுவின் போக்கில் எதுவித நம்பிக்கையும் கொள்ளமுடியாத ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள், இந்த ஆணைக்குழு பற்றிப் பின்வருமாறு கூறினார்:

“சோல்பரிப் பிரபு தமிழர்களின் ஆத்மாவை குழிதோண்டிப் புதைக்கவே வந்துள்ளார்” (Soulbury has come to bury the souls of the Tamils).

இவ்வாறு தெளிவோடு நின்ற தமிழர் தலைமை 1947ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில் (சட்ட சபை) வடக்கு-கிழக்கில் பெருவெற்றிபெற்றது. அது தமிழர்களின் தலைமைத்துவப் பிரதிநிதித்துவத்தையும் பெற்றுக்கொண்டது. ஆனால், வரலாற்றின் அடுத்த பாத அடி (Foot Steps) வேறு விதமாக அமைந்ததுஅந்தச் சோக வரலாறு திமழ் மக்களை மேலும் அவலத்திறகுள் தள்ளியது.

**சட்டவலுப் பெறாது போன ஒப் பந்தங்கள் (பகுதி மூன்று)**

1945இல் இலங்கைக்கு அனுப்பப் பட்ட சோல்பரிப் பிரபுவின் தலைமையிலான ஆணைக்குழுவினர் செய்த சிபாரிசுக்கமைவான பாராளுமன்ற ஜனநாயகத்திற்கான திறவுகோல் இலங்கைப் பிரசைகளுக்கு வழங்கப்பட்டது. பிரித்தானிய வெஸ்ட்மினிஸ்டர் முறைமை (West Minister System) இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.

பிரித்தானியாவில் உள்ளது போல் கமன்ஸ் சபை அமைக்கப்பட்டது. இலங்கையில் அது ஜனப்பிரதிநிதிகள் சபை (House of Representatives) என அழைக்கப்பட்டது. பிரித்தானியாவில் பிரபுகள் சபை போல (House of Lords) இலங்கையில் செனட் சபை அமைக்கப்பட்டது. பிரித்தானியாவில் மகாராணி போல் இலங்கையில் மகாதேசாதிபதி (Governer) நியமிக்கப்பட்டார். இம் மூன்று பகுதிகளையும் உள்ளடக்கியதே இலங்கைப் பாராளுமன்றம் எனப்பட்டது.

இந்தப் பாராளுமன்றத்திற்கான தேர்தல் 1947 ஆம் ஆண்டு இடம்பெற்றது. இந்தப் பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும், மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் பெரு வெற்றி பெற்றன. இலங்கை முழுவதற்குமான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றது. இடதுசாரிகள் பெருந்தொகையான ஆசனங்களைப் பெற்றார்கள். இடதுசாரிகளின் வெற்றிக்கு மலையகத் தோட்டத்தொழிலாளர்களின் வாக்குகள் கணிசமான அளவில் பங்களிப்புச் செய்தன என்பதைக் கண்டுகொண்ட ஐ.தே.கட்சித் தலைவர் டி.எஸ். சேனநாயக்க இதை இல்லாதொழிக்க திடசங்கற்பம் எடுத்துக்கொண்டார்.

இந்த நிலையில், 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, 1948 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 15 ஆம் திகதி பிரதமர் டி.எஸ். சேனநாயக்க மூன்று சட்டங்களைக் கொண்டுவந்தார். இந்த மூன்று சட்டங்களும் மலையக மக்களின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்தன. 1948ஆம் ஆண்டு 18ஆம் இலக்க பிரஜாவுரிமைச் சட்டம், 1949 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க இந்திய - பாகிஸ்தானியர் சட்டம், 1950 ஆம் ஆண்டு வாக்குரிமை பறிப்புச் சட்டம் என்பனவே இந்த மூன்று சட்டங்களுமாகும்.

*(தொடரும்...)*

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## பணத்திற்கும் சொர்க்கத்திற்கும் சம்பந்தம் கிடையாது என்பதற்கு ஓஷோ ஒரு கதை சொல்லுகிறார்.

**யா**ருக்கும் உதவாத ஒரு பணக்கார கஞ்சன் இறந்து சித்திரகுப்தர் முன் நிற்கிறான். அந்த பணக்காரன் கையில் இருக்கும் பணத்தை கொடுத்து சொர்க்கத்தின் கதவுகளை திறந்து விடும்படி கூறினான்.


சித்திரகுப்தர் சிரித்தபடி, ‘பூலோக முறைகள் இங்கு பயன் தராது. சொர்க்கத்தில் நுழையும் தகுதி பெறும் அளவிற்கு நீ யாருக்கு என்ன நன்மைகள் செய்தாய்?’ என்று கேட்டார்.

பணக்காரன் நன்கு யோசித்துவிட்டு, ‘ஒரு கிழவிக்கு பத்து பைசா தானம் கொடுத்தேன்’ என்றான். சித்திரகுப்தர், ‘இது தவிர, வேறு ஏதாவது நன்மை செய்து இருக்கிறாயா?’ என்று கேட்டார்.

பணக்காரன் மேலும் யோசித்து, ‘ஒரு அனாதை சிறுவனுக்கு ஐந்து பைசா கொடுத்தேன்’ என்றான். சித்திரகுப்தர் ‘இன்னும் வேறு உண்டா?’ என்று கேட்டதற்கு இல்லை என்று பதிலளித்தான்.


அப்போது சித்திரகுபதரின் உதவியாளர் சித்திரகுப்தரிடம், ‘இந்த பணக்காரனிடம் பதினைந்து பைசாவை திருப்பிக் கொடுத்துவிட்டு அவனை நரத்திற்கு அனுப்பிவிட வேண்டும்’ என்றான்.

வெறும் பதினைந்து பைசாவில் சொர்க்கத்தை வாங்க முடியாது என்பதற்காக ஓஷோ இக் கதையைக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 19




**இடமிருந்து வலம்**

1. பௌத்தர்களின் வழிபாட்டுத் தலம்
4. முஸ்லிம்களின் தொழுகை இடம்
7. எண் சாண் உடம்பிற்கு இது பிரதானம்
9. இனிப்பான உருண்டை
11. இரும்புப் பொருட்களில் படிந்திருப்பது
14. தேவலோக கொடியவர்கள்
19. வெளிப்படையாக (குழம்பியுள்ளது)
26. ஒரு ராசி (குழம்பியுள்ளது)
31. வாழ்
33. விரத காலங்களில் வீட்டிற்கு அழைக் கப்படும் விருந்தாளி (இறுதி எழுத்தில் லை)
35. பலபேர் சேர்ந்து விளையாடும் விளை யாட்டுக்களில் ஒன்று (இறுதிவரை)
38. பரிசுத்தம்

**மேலிருந்து கீழ்**

1. கணவனை இழந்தவள்
2. முதல் உணவு உண்ணும் வேளை
5. துரியோதனன் இதில் கைதேர்ந்தவன்
6. களவெடுத்த பெண்
9. இறைவன் மீது பாடப்பட்ட பாடல்
10. மனிதனோடு தொடர்புடைய விலங்கு
14. புறத்தின் எதிர்
17. மற்றவர்களுக்கு பிரித்துக்கொடு (த லைகீழ்)
25. இழப்பால்/துன்பத்தால் வருவது (தலைகீழ்)
30. தராதரம்/தகுதி
33. இதனால் பத்தும் பறந்துபோகும்(தலை கீழ்)
33. கனியாதது

**குறுக்கெழுத்துப் போட்டி 17க்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ■ | அ | ந் | த | ப் | பு | ர | ம் |
| பா | தி | ■ | ந் | ■ | லி | த | க |
| த | ச | ர | த | ன் | ■ | ம் | நா |
| ச | ய | ■ | ம் | ச | வி | ■ | ■ |
| ர | ம் | ம | ■ | கு | ற | ள் | ■ |
| ம் | ■ | து | ணி | ■ | கு | ■ | தா |
| ■ | பு | ர | த | ம் | ■ | கு | ம |
| ர | த | ம் | பா | ■ | க | தி | ரை |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. **நேசராஜ்குமார் வித்தியாசாகர்**
   கிளிநொச்சி ம.வி,
   கிளிநொச்சி.
2. **உ. துளசிகா**
   இல 40, கோணாவளை லேன்,
   கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
3. **க. இராஜகோபால்**
   அடைக்கலந்தோட்டம்,
   கந்தசுவாமி கோவிலடி,
   வட்டுக்கோட்டை.

**குறுக்கெழுத்துப் போட்டி 19க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**

குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் பிரசுரிக்கப்படும்.




" சின்ன வயசில் எங்கப்பா என்னை கன்னுக்குட்டி என்று கூப்பிடுவார்!"

"இப்போது?"

" எருமை மாடே என்று கூப்பிடு கிறார்!"




" விகாரத்துகளுக்கான காரணத்தை நீண்ட காலமாக ஆராய்ச்சி செய்தீர்களே காரணத்தைக் கண்டு பிடித்து விட்டீர்களா?"

" ஆமாம்!"

" என்ன காரணம்?"

" விவாகம் செய்து கொள்வதுதான் காரணம்!"




" அவருக்கு மறுபிறவியில் அபார நம்பிக்கை என்று எப்படிச் சொல் கிறாய்?"

" தான் இறந்த பிறகும் தனது சொத்துக்கள் தனக்கே சேர வேண்டும் என்று உயில் எழுதி வைத்திருக்கிறாரே!"




மனேஜர் ஆபீஸ் பையனிடம்

"டேய் ஏன்டா மேசையில் உள்ள தூசியை எல்லாம் துடைச்சே?"

ஆபீஸ் பையன்:- "என்ன சொல்றீங்க சேர்?"

மனேஜர்:- "இரண்டு மூன்று டெலிபோன் நம்பரை மேசையில் எழுதி வச்சேன்டா?"




"அவள் ஒரு முட்டாள்! "

"எப்படிச் சொல்கிறாய்?"

"ஒவ்வொரு முறையும் மின்னலடிக் கும் போதும் தன்னை யோரோ போட்டோ எடுக்கிறார்கள் என்று நினைத்து பல்லைக் காட்டிச் சிரிக் கிறாள்!"




" நான் அவமானப்படுவதற்காக உங்க கம்பெனிக்கு வேலைக்கு வரலே..."

"அப்படியான அவமானப்பட வழமையா எங்கே போவீங்க?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

உடுவில் பிரதேசத்தில் ஒதுக்குப்புறமான சூழலில் அமைந்திருக்கிறது அந்த சனசமூக நிலையம். இயற்கை எழில் தவழும் வயல்வெளிக் காற்றுக்கு சலசலவென ஒலியெழுப்பும் பனைகள் மிடுக்குடன் அடுக்கடுக்காக அமைந்திருக்கின்றன.

'சில்' என்ற இளந்தென்றல் இங்கிதமாய் வீசும் சூழல். இத்தனை இயற்கை அன்னையின் கொடைக்கு மத்தியில் அமைதியான சூழலில் அமைந்திருக்கிறது அந்த சனசமூக நிலையம்.

இந்த சனசமூக நிலையத்தைப் பத்திரிகைகளால் நிரப்பியிருப்பார்கள். மிஞ்சிப் போனால் பாடசாலை மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறும். அல்லது கிராம அபிவிருத்தி சம்பந்தமான கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் முதலிய பல ஆக்கபூர்வமான செயற்பாடுகள் இடம்பெறும் என்று தான் நீங்கள் நினைப்பீர்கள். அவ்வாறான செயற்பாடுகள் அங்கு நடைபெறுவதில்லை என்பது தான் உண்மை. அங்கு நடைபெறும் நிகழ்வுகள் பற்றி அக்கிராமத்தில் வசிக்கும் சமூக ஆர்வலர் ஒருவர் வேதனையுடன் விபரித்தார்.

மாலைவேளை என்றால் அச் சனசமூக நிலையம் களைகட்டியிருக்கும். பாடசாலை முடித்துவரும் பதின்ம வயது மாணவ, மாணவிகள் காதல் என்ற பெயரில் அரங்கேற்றும் அலங்கோலக் காட்சிகளை அங்கு தரிசிக்கக் கூடியதாக இருக்கும். இப்பத்தியின் ஆரம்பத்தில் இச் சனசமூக நிலையத்தின் அமைவிடம் பற்றி விலாவாரியாக விபரித்தேன் அல்லவா? அத்தகைய சூழலமைவு இவர்களின் அநாகரிகச் செயற்பாடுகளுக்கு வழிசமைத்துக் கொடுக்கின்றன. அச்சூழலில் நெருக்கமாக வீடுகள் அமைந்திருக்காமையும் இவர்களுக்குச் சாதகமாக அமைகின்றது.

பாடசாலை முடித்துவிட்டு வரும் மாணவ, மாணவிகள் நேராக தமது வீடுகளுக்குச் சென்று பாடசாலைகளில் கல்வி கற்றதனால் ஏற்படும் களைப்பை போக்கி பசியாறியதன் பின்பே அடுத்த கட்ட நகர்வுகளுக்குத் தயாராவார்கள். ஆனால், இங்கு வரும் குறித்த சில மாணவ, மாணவிகள் தமது பசிகளையும் கல்விக்களைப்பையும் மறந்து காதல் வளர்க்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவது குறித்து அப்பகுதியில் வசித்து வரும் சமூக ஆர்வலர்கள் விசனமும் கவலையும் அடைந்துள்ளனர்.

சனசமூக நிலையம் என்பது அறிவை வளர்க்கும், பொது மக்களின் பொழுதுகளை பயனுள்ள வகையில் கழிப்பதற்காகவும் அறிவுத்தேடல்களுக்கு வழிசமைக்கும் அறிவூற்றகமாகத் திகழவேண்டுமே தவிர இப்படியான காதல் களியாட்டங்களுக்கு இடந்தரலாகாது.

அந்த சனசமூக நிலையத்தில் பத்திரிகைகளோ அல்லது மக்களின் பொழுதுகளை பயனுள்ள முறையில் கழிப்பதற்கான ஏற்பாடுகளோ அல்லது ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எவையுமே இல்லை.

**அறிவுப் பசி - தேடல்களுக்கு வழிசமைத்துக் கொடுக்க வேண்டிய சனசமூக நிலையம் இன்று காதலர்களின் காம லீலைகளுக்கும் மதுப்பிரியர்களின் அட்டகாசத்துக்கும் பயன்படுத்தப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இன்றைய யாழ்ப்பாணக் கலாசாரம் அதற்கு வித்திட்டுள்ளது. இது வேதனையளிக்கும் செயற்பாடு. இதனை கட்டுப்படுத்த சம்மந்தப்பட்டவர்கள் தங்களைத் தாங்கள திருத்திக் கொள்ள வேண்டும்.**

இதனால், அப்பகுதி மக்கள் தமது அறிவுத்தேடலை விருத்திசெய்யவும், நாட்டுநடப்புக்களை அறியவும் பல மைல் தூரம் சென்று தமது தேவைகளைப் பூர்த்திசெய்து வருகின்றனர்.

ஆனால், இங்கு நடப்பதோ வேறு காரியங்கள். மாலை 6.00 மணி என்றால் இளைஞர்களின் மது அருந்தும் செயற்பாடுகள் எல்லை மீறுமாம். காதல் ஜோடிகள் தமது திருவிழாக்களை நிகழ்த்தி முடித்துவிட்டுச் சென்றவுடன் மதுப்பிரியர்களின் திருவிளையாடல்கள் அரங்கேறும். இதனால், அச் சனசமூக நிலையம் காதலர்களுக்கும் மதுப்பிரியர்களுக்கும் சொர்க்கபுரியாகத் திகழ்வதாக அப்பகுதி வாசிகள் தெரிவிக்கின்றனர். மது அருந்தும் இளைஞர்கள் மது அருந்துதலுடன் தமது செயற்பாடுகளை மட்டுப்படுத்தாமல் குடிமனைகளில் வசிக்கும் மக்களின் நிம்மதிக்கும் உலைவைக்கின்றனர். மதுவை வயிற்றினுள் ஊற்றிவிட்டு அது தந்த போதையின் விளைவால் உரத்த தொனியில் துர்வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்கின்றனர். இதனால், அப்பகுதியை அண்டி வசிக்கும் மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இது குறித்த அப்பகுதி மக்கள், குறித்த இளைஞர்களுக்கு அறிவுரை கூறியும் அவ் இளைஞர்கள் மக்களின் அறிவுரைகளைப் புறந்தள்ளிவிட்டு, காதில் போட்டுக்கொள்ளாமல் மக்களுடன் முரண்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் அதிகமாகப் பேசப்பட்டு வரும் விடயங்களில் கலாசாரச் சீரழிவுகள் பற்றிய தான செய்திகள் காத்திரமான இடத்தை வகிக்கின்றன.கல்வி வழங்கும் கல்விக் கூடங்களிலும் சரி, தொழில்புரியும் அலுவலகங்களிலும் சரி, பட்டி தொட்டி எங்கும் கலாசாரச் சீரழிவுகள் இடம் பெற்றுவருகின்றமை வெளிப்படை. இவை பற்றி இப் பத்தியில் விபரிக்க விரும்பவில்லை.

இளம்பருவ வயதினர் தமது பருவக் கோளாறுகளால் இப்படியான செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள் என்றால், இளம் பருவ வயதைக் கடந்தவர்களும் கலாசார சீரழிவு நடத்தைகளில் ஈடுபட்டுவருகின்றனர். இன்றைய இளம் சமூகத்தை - மாணவ சமூகத்தை வழிநடத்த வேண்டியவர்களே நெறிபிறழ்ந்து வழிதவறி நடக்கும்போது இன்றைய இளைஞர்கள் - மாணவர்களை ஒழுக்கமிக்கவர்களாக மாற்ற முற்படுவது அபத்தமானது. பயிர்களுக்கு காவலாக வேலியைப் போடுவார்கள் ஆனால், வேலியே பயிரை மேய்ந்தால்...?

இன்றை இளம் சமூகத்தை வழிநடத்த வேண்டியவர்களே தவறாக நடந்தால் அவர்களின் கருத்துக்களை - அறிவுரைகளை இளம் சமூகம் கேட்கமாட்டாது என்பதே யதார்த்தம். எனவே தான் முதலில், 'உன்னைத் திருத்து சமூகம் தானகாவே திருந்திவிடும்'' என்ற நம்மூர்ப் பழமொழிக்கமைவாக சமூகத்தை வழிநடத்தும் பெரியோர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் முதலில் தமக்குள் இருக்கும் அழுக்குகளை, மாசுக்களை, குறைகுற்றங்களை களைவதற்கு முன்வர வேண்டும். இதன் ஊடாக சமூகத்தை நல்வழிப்படுத்த முடியும்.இன்றைய நிலையில் யாழ். குடாநாட்டில் உள்ள அலுவலகங்களிலோ அல்லது கல்விக்கூடங்களிலோ சென்றுபார்த்தால் சில அதிகாரிகளின் புட்டுக்கேடுகள் தெரியும். எது எப்படியோ, இன்றைய சமூகம் கலசாரச் சீரழிவு என்ற மாயைக்குள் அமுங்கிக் கிடக்கின்றது. இவற்றிலிருந்து விடுபட்டு சமூகத்தில் மதிப்புமிக்கவர்களாகவும் மரியாதைக்குரியவர்களாகவும் வாழ்வதே சமூகத்துக்குப் பெருமை.

எமக்கு முன் விரிந்துகிடக்கும் வரலாற்றுக் கடமையிலிருந்து வழுவாமல் எமது பாதையை நேரியதாக மாற்றி வாழ்வியல் பயணத்தை செப்பனிட்டுக் கொள்ள வேண்டும். இதனால், எம்மினத்தின் அடையாளம் காப்பாற்றப்படும். இல்லையேல் எதிர்காலத்தில் எம்மினத்துக்கான தனித்துவமான கலசாரம் உருத்தெரியாமல் அழிவடைந்து விடும் என்பதே யதார்த்தம்.

உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி & உயர்பாதுகாப்பு



உயர் பாதுகாப்பு வலயம், மீள்குடியமர்வு பற்றி கதைத்துக் கதைத்தே பெரும்பாலானவர்கள் களைத்துப்போனார்கள். நம்மூர் அரசியல்வாதிகளும் பெரும்பாலும் அப்படித்தான். அதனால் பலரும் அதுபற்றி மறந்தும் போனார்கள். ஆனால், அரச அதிபரோ மீள்குடியமர்வினை இனிமேல் அரசியலாக்கக் கூடாதென்கின்றார். எப்போது ஞானம் கிடைத்தது என்பது பற்றி அவருக்கே தெரியுமாவென்பதும் தெரியவில்லை.

வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு பற்றி எல்லோருமே இரகசியம் காக்க விரும்புகிறார்கள். ஏதோ சொந்த இடம் பறிபோவது போல தெற்கிலுள்ளவர்களுக்கு இவை பற்றித் தெரியாதிருப்பதையே அனைவரும் விரும்புகின்றனர். இந்த அனைவருள்ளும் படை அதிகாரிகள் முதல் ஆட்சியாளர் வரை உள்ளடங்கியேயுள்ளனர். ஆனால், இந்த பரகசியம் பேணுதல்கள் மத்தியில் மீள்குடியமர்வு சுமுகமாக இடம்பெறுகின்றதாவென்றால் அது சந்தேகமே.

அரச அதிபரோ, மீள்குடியமர்வுக்கு பத்து வருடகால எல்லையை கூறுகின்றார். கண்ணிவெடிகள் அகற்றப்பட கால அவகாசம் தேவையென அரச உயர்மட்டம் கூறிவருவதாகவும் அவர் சொல்கின்றார். ஆனால், வடக்கில் கண்ணிவெடியகற்றல் பணிகள் முடிவுறும் கட்டத்தை எட்டிவிட்டதாக மனிதநேய கண்ணிவெடியகற்றல் அமைப்புக்கள் கொழும்பில் ஊடகங்களுக்கு அறிவிக்கின்றன. அவ்வாறானால் யார் சொல்லும் கால எல்லை சரியென்பது எவருக்குமே புரியவில்லையென்பதே உண்மையாகும்.

உண்மையில் வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வு எந்த இலக்கை எய்தியிருக்கின்றதென்றால் அது ஆரம்பப் புள்ளியை விட்டு நகரவேயில்லை. இளவாலையின் இரு கிராம சேவையாளர் பிரிவுகள் மற்றும் சுதந்திரபுரம் உள்ளிட்ட மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளே முதல்கட்ட மீள்குடியமர்விற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இம் மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளிலும் மீள்குடியமர்வுக்கான அறிவிப்பு வெளியாகி நான்கு மாதங்களின் பின்னர் மேலும் நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியமர்வு பற்றி அரச அதிபர் அறிவித்துள்ளார். அதிலும் கண்ணிவெடியகற்றப்பட்டுள்ளதாக கிடைத்த அறிவிப்பையே அவர் வெளியிட்டபோதும் அங்கு மீள்குடியமர்வுக்கான கால எல்லை பற்றி அவர் எதுவுமே கூறியிருக்கவில்லை.

உண்மையில் வலிகாமம் வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்கப்படும் கிராமங்களாக உயர்பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்கப் பகுதிகளையே படைத்தரப்பு இப்போது அனுமதிக்கத் தொடங்கியிருக்கின்றது. பலாலி விமானப்படை தளத்திற்கோ காங்கேசன்துறை கடற்படை தளத்திற்கோ அச்சுறுத்தல்கள் ஏதுமற்றதாகவே மீள்குடியமர்விற்கான அனுமதியை வழங்க படைத்தரப்பு இப்போது தயாராக உள்ளது. முன்னதாக முன்னரங்க மண் பாதுகாப்பு அணைகளுக்கு வெளியே இருந்த சூனியப் பிரதேசத்தை மீளக்குடியமர அனுமதிப்பதாக படைத்தரப்பு அறிவித்திருந்தது. தற்போது அதே முன்னரங்கப் பாதுகாப்பணைக்கு உட்புறமாகவுள்ள சில கிராமங்களை விடுவிக்க முன்வந்துள்ளது என்பதே உண்மையாகும்.

விடுவிக்கப்பட்ட பகுதிகளை தனது இராணுவ நலன்களின் அடிப்படையிலேயே படைத்தலைமை தெரிவுசெய்துவருகின்றது. அதிலும் இராணுவ விநியோக மார்க்கங்களுக்கான பிரதான வீதிகளைத் திறந்துவிட படைத்தரப்பு தயாராகவில்லை. அவ்வகையில் திறக்கப்பட்டு இரு வாரங்களுக்குள் மீண்டும் இழுத்து மூடப்பட்ட கீரிமலை - நகுலேஸ்வரம் வீதி இதற்கு நல்லதோர் உதாரணமாகும்.

கடற்படை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ள சேத்தாங்குளம் முதல் மாதகல் வரையான கரையோரக் கிராமங்களினை மீள்குடியமர்வுக்கென அனுமதிப்பதாக அண்மையில் அறிவித்திருந்தது. இதையடுத்து அங்கிருந்து வெளியேற்றப்பட் மக்கள் தமது காணிகளையும், வீடுகளையும் பார்க்க ஆர்வத்துடன் வந்திருந்தனர். எனினும், நீண்ட இழுபறிகளின் பின்னர் ஓரிரு பகுதிகளில் காணிகளை பார்வையிட அனுமதித்த கடற்படை எஞ்சிய கரையோர கிராமங்களுக்குச் செல்ல அனுமதி மறுத்துவிட்டது.

உண்மையில் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மீள்குடியமர்வு வேகமாக நடைபெறுகின்றதென்ற தோற்றத்தை உலகுக்கு காண்பிக்கவே அரசு தொடர்ந்தும் பாடுபடுகின்றது. அவ்வகையிலேயே உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளுள் சிக்குண்டுள்ள சில பாடசாலைகளை மீண்டும் திறந்து விட முற்படுகின்றது.

தற்போதும் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் சிக்குண்டுள்ள கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்தில் புதிய வகுப்பறைத் தொகுதிகளை கட்டி வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. யுத்தத்தால் எதுவுமே எஞ்சியில்லாத இப் பாடசாலை வெறும் பற்றைகளால் மூடப்பட்டு சிறு காடாகியுள்ளது. மக்கள் எவருமே மீளக்குடியமர இதுவரை அனுமதிக்கப்பட்டிராத நிலையில் வெறுமனே பாடசாலை மட்டும் அங்கு செயற்படுவதால் என்ன பயன் என்பதே அனைவரதும் கேள்வியாகவுள்ளது.

இதனிடையே தற்போது தற்காலிகமாக இயங்குமிடத்திலிருந்து பாடசாலை சொந்த இடமான கீரிமலைக்குச் சென்றுவிடுமென்ற அச்சத்தில் பல மாணவர்களை பெற்றோர் இப்பாடசாலையிலிருந்து வேறு பாடசாலைகளுக்கு அழைத்துச் சென்றுகொண்டிருக்கின்றனர். தமது பிள்ளைகளை இராணுவமுகாம் பிரதேசத்துக்குள் அமைந்திருக்கும் பாடசாலைகளுக்கு சென்றுவர அவர்கள் விரும்பியிருக்கவில்லை.

இதேபோன்றுதான் அண்மைக்காலத்தில் கொண்டாட்டங்களுடன் திறக்கப்பட்ட வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் நிலையுமுள்ளது. ஒரு பகுதி வகுப்புக்கள் ஏற்கெனவே தற்காலிகமாக இயங்கிய உரும்பிராயிலேயே செயற்பட்டு வருகின்றன. எஞ்சிய மற்றுமொரு பகுதியே சொந்த இடத்திற்குத் திரும்பியுள்ளது. மாணவர்கள் பாடசாலை நேரத்தில் மட்டுமே அப்பகுதியில் நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய நேரங்களில் அவர்கள் அகதிகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள கிராமங்களிலேயே வாழவேண்டியுள்ளது. இதே நிலையே தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் நடந்துகொண்டிருக்கின்றது.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை திறந்துவைக்க ஜனாதிபதி வருவதாக விளம்பரப்படுத்தப்பட்டது. ஆனால் முன்னாள் தளபதி சரத்பொன்சேகாவின் தளமாக அதுவே இருந்திருந்ததென்ற தகவல்களிடையே ஜனாதிபதியின்றி ஆளுநரே அதனை பின்னர் திறந்துவைத்திருந்தார். அதேபோன்றே தற்போது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மாடி வகுப்பறைகளை கட்டி வழங்க ஒன்றரைக் கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார். எனினும் விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளரான கே.பியும் இப்பாடசாலையின் பழைய மாணவர் என்று கூறப்படுகின்றது. உண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் போதிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படாமையும் மீள்குடியமர்வு தொடர்பில் மக்களிடையே ஆர்வமற்றிருக்கக் காரணமாகவுள்ளது. குறிப்பாக, போதிய போக்குவரத்து பாதைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. வீதிக்குக் குறுக்காக அமைக்கப்பட்டுள்ள பெரும்பாலான மண் அணைகள் அகற்றப்பட்டிருக்கவில்லை. குறிப்பாக, குடியிருப்புக்களை ஊடறுத்து பெருமளவில் மண் அணைகளே இப்போதும் செல்கின்றன.

பெரும்பாலும் விடுவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களது குடியிருப்புக்கள் சூறையாடப்பட்டேயுள்ளன. பெரும்பாலானவற்றில் எதுவுமே எஞ்சியிருக்கவில்லை. கூரைகள், கதவுகளென எதுவுமற்ற வீடுகளில் அவர்கள் குடியிருக்க திருத்தி வேண்டியுள்ளது. பற்றைகளால் சூழப்பட்ட காணிகளை துப்புரவு செய்யவேண்டியுமுள்ளது. அதற்கு அவர்களுக்கு கால அவகாசமொன்று தேவைப்படுகிறது. அதுவரை தாங்கள் தற்காலிகமாக தங்கியுள்ள இடங்களிலிருந்தே அவர்கள் தயார்படுத்தலில் ஈடுபட வேண்டியுள்ளது.

அவற்றிற்கு முன்னதாக மீள்குடியமர்விற்கான திட்டமிடல் இடம்பெயர்ந்த மக்களது நிலைக்கேற்பவே முன்னெடுக்கப்பட வேண்டும். வெறும் இராணுவ நலன் சார்ந்ததாக அது இருக்கக் கூடாது.

• பாவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைப்போமா?



*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

**"எங்கடை** காலத்தில் இப்பிடியில்லை'' என்று புலம்புவது காலமாகிப் போய்விட்ட ஒரு சந்ததி இடைவெளியையே குறிக்கும். இன்னும் ஒரு படி மேலேபோய் பாடசாலைகள் பாலியல் கல்வியைப் போதிப்பதும், பாதுகாப்பான பாலுறவுக்கு இளவயதினரைத் தயார்படுத்துவதும் தேவையாகும். பாடசாலை நிர்வாகமும், அதிலே செல்வாக்குச் செலுத்துகின்ற உள்ளூர், புலம்பெயர் சக்திகளும் இவற்றைக் கரிசனையோடு ஆராய வேண்டும்.

பாதிக்கப்பட்ட ஒரு பிள்ளையின் படிப்பிற்கான வாய்ப்பை மறுப்பதுவோ அந்தப் பிள்ளையை 'ஒழுக்கம் கெட்டவள்' என்று முத்திரை குத்துவதோ இரக்கமின்றி வேறு பாடசாலைக்கு மாற்றுவதோ எந்த வகையிலும் நியாயமில்லாத செயற்பாடுகளே. ஒரு பாடசாலையில் 'ஒழுக்கம் தவறிய' பிள்ளை இன்னுமொரு பாடசாலையில் 'ஒழுங்காக' இருக்கும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத சமன்பாடாகும். எந்தப் பாடசாலையில் இருக்கும் பொழுது பிரச்சினை ஏற்பட்டதோ, அதே பாடசாலைச் சூழலில் அந்தப் பிள்ளையை ஆதரவுடன் அணுகி, நேர்வழி காட்டுவதே தார்மிகம். அதனை நாங்கள் மறந்து விடலாகாது. ஒரு பிள்ளை சொல்வழி கேட்கவில்லையென்றோ, தவறு செய்துவிட்டது என்றோ வேறு தாய், தகப்பனிடம் சேர்ப்பதில்லை.

**பெற்றோர்:** பெற்றோர்கள் எப்பொழுதும் தமது பொறுப்புகளையும், கடமைகளையும் மறந்து விடலாகாது. அவர்கள் தமது பிள்ளைகளை, அவர்கள் வளர்கின்ற பொழுதும், தொடர்ந்தும் புரிந்து கொள்ள முயலவேண்டும். இவ்வாறான புரிந்து கொள்ளலுக்கு அந்தப் பிள்ளைகளுடன் தொடர்ந்து தொடர்பாடக் கூடிய ஒரு 'வெளியை' வைத்திருக்க வேண்டும். பிள்ளைகளின் உலகம், கற்பனைகள், விருப்பு வெறுப்புகளைப் பற்றித் தெரிந்துவைத்திருப்பதோடு, தேவையான இடங்களில் எல்லாம் பிள்ளைகள் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் சரியான, யதார்த்தத்திற்குப் பொருத்தமான கருத்துகளையும் கூறிவைக்க வேண்டும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் ஆசைகள், விருப்பங்களை மதித்து அவற்றைப் பூர்த்திசெய்ய விழையும் அதேவேளை, அவை உண்மையில் அவசியந்தானா என்பதனையும் பார்த்துக்கொள்ள வேண்டும். அதேபோல், தமது பிள்ளைகள் பயன்படுத்தும் நவீன தொழில்நுட்பங்களைப் பற்றி பெற்றோரும் அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்ளுதல் நல்லது. 'அவள் தன்ரை போனில ஏதோ செய்துகொண்டிருக்கிறாள். எனக்கெண்டால் என்னெண்டும் விளங்காது' என்கிற வெகுளித்தனமான பெற்றோர் மிக அதிகளவான ஆபத்துகளைத் தமது பிள்ளை மூலம் சந்திக்க நேரிடும்.

'கொம்பியூட்டர்' வேணுமெண்டு ஒற்றைக்காலிலை நிண்டான். ஒரு 'லெப்ரொப்' வாங்கிக் கொடுத்தம். இப்ப அவன் 'கொம்பியூட்டர் கேம்' ஓடதான் மினக்கெடுறான். அப்பிடியில்லையென்றால் 'சி.டி' பார்ப்பான்'. இது 9ஆம் வகுப்பில் கற்கின்ற ஒரு சிறு பையனுடைய பெற்றோரின் அங்கலாய்ப்பு. இந்த வகையான பிள்ளை வளர்ப்புகள் பற்றி மறு பார்வை செய்வது அவசியம்.

துரதிஷ்டவசமாக பிள்ளைகளை எவ்வாறு நல்ல விதமாக வளர்க்கலாம்? என்பது பற்றி யாரும், யாருக்குமே கற்பிப்பதில்லை. அவை பல சந்தர்ப்பங்களில் முயன்று தவறான முறையினூடாகவே செயற்படுத்தப்படுகின்றன. அதனால் 'தவறுகின்ற' சந்தர்ப்பங்களில் எல்லாம் தாக்கங்கள் அதிகமாகி விடுகின்றன. பெற்றோர்கள் தமது பிள்ளைகள் பற்றித் தங்களுக்குள் கதைப்பதுவும், கலந்துபேசித் தீர்மானங்களையெடுப்பதுவும் தேவையானது. இயலுமானவரை தந்தை, தாய் இருவரும் பிள்ளைகளுடன் கூட இருப்பது சிறந்தது. *(தொடரும்)*

**வைத்தியக் கலாநிதி சா. சிவயோகன்**
*(உள மருத்துவ நிபுணர்)*

# வீட்டு வைத்தியம்

- தூக்கமில்லாமல் தவிப்பவரா நீங்கள்? ஒரு டீஸ்பூன் சீரகப் பொடியை மசித்த வாழைப்பழத்தோடு சேர்த்துச் சாப்பிட்டால் இரவில் நல்ல தூக்கம் வரும்.
- விடாப்பிடியான பொடுகைப் போக்க பேபி வெங்காயத்தை துளசி இலைகளோடு சேர்த்துப் பிசையவும். அதன் சாறை உச்சந்தலையில் தடவி இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு கழுவவும்.
- தாடி இருக்கும் தாடைப் பகுதிகளில் ஆண்களுக்கு பரு, கொப்புளங்கள் ஏற்படும். ஒரு டேபிள் ஸ்பூன் தயிரை செப்புப் பாத்திரத்தில் சில மணிநேரங்கள் வைக்கவும். பிறகு அதைக் கலக்கினால் நீலநிறமாக மாறும். அதை முகத்தில் இரவில் தடவி காலையில் கழுவவும். நல்ல பயனைக் காணலாம்.
- 1/2 பீட்ரூட், 15 வேப்பிலை, 2 வெட்டிய நெல்லிக்காய்களை அரைத்துச் சாறு எடுத்து மூன்று நாட்களுக்கு ஒருமுறை தலையில் தேய்ப்பதால் பொடுகு நீங்கும்.
- மூலிகை கூந்தல் தைலத்தை வீட்டிலேயே தயாரிக்கலாம். செம்பருத்தி இதழ்கள், வெந்தயக் கீரை, மருதாணி இலைகள் இவற்றைத் தேங்காய் எண்ணெயில் கலந்து இளம் சூட்டில் 10, 15 நிமிடங்கள் அடுப்பில் வைத்து இறக்கவும். ஆறிய பிறகு வடிகட்டி தலையில் மசாஜ் செய்தவாறு எண்ணெயினைத் தடவவும்.
- கோடைக்காலத்தில் உடம்பு முழுவதும் தயிர் தடவி 1/2 மணிக்குப் பிறகு குளித்தால் வேர்க்குரு, வேனில் கட்டிகள், வெப்பத்தால் ஏற்படும் அரிப்பு போன்றவற்றிலிருந்து விடுதலை கிடைக்கும்.
- இரவு படுக்கப்போகும் முன்பு புதிய துளசி இலைகளை ஒரு டவலில் வைத்து அதைத் தலையில் கட்டிக்கொண்டு தூங்கினால் பேன் தொந்தரவிலிருந்து விடுதலை பெறலாம்.
- அதிக களைப்பால் களைப்படைந்த கண்களுக்கு குளிர்ந்த நீரில் புதிய எலுமிச்சைச் சாறை கலந்து அதில் பஞ்சை நனைத்து கண்கள் மீது வைக்கலாம்.



- வெந்தயக் கீரையை அரைத்து உச்சந் தலையில் தவறாமல் தடவிக் குளித்துவந்தால் பொடுகு தானாகவே மறைந்து விடும்.
- நீங்கள் பொடுகுத் தொல்லையால் அவஸ்தைப்படுபவரா? வேண்டாம் கவலை. 1/2 பீட்ரூட், 15 வேப்பிலை, 2 வெட்டிய நெல்லிக்காய்களை அரைத்துச் சாறு எடுத்து மூன்று நாட்களுக்கு ஒருமுறை தலையில் தேய்ப்பதால் பொடுகு நீங்கும்.
- வீங்கிய மூட்டுக்களில் சிறிது நெய் தடவி அதன் மீது வெற்றிலை வைத்துக்கட்டவும். இரவில் இப்படிக் கட்டி காலையில் எடுத்தால் வீக்கம் குறையும்.
- வெல்லத்தோடு 1/2 கப் தண்ணீரும் ஆறிய பிறகு உச்சந் தலையில் தேய்ப்பதால் பொடுகு நீங்கும். முடிகொட்டுவது நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் பெருமை



பெண்கள் நாட்டின் கண்கள் என்பது முதுமொழி. பொதுவாக பெண்களின் குணங்களின் வெளிப்பாடு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு விசேஷ குணங்கள் அடங்கியதாக உள்ளது. இந்த நான்கு குணங்களும் உள்ளடங்கிய பெண்களை முற்காலத்தில் தான் கண்டோம். உதாரணமாக கண்ணகி, சீதை காலத்திலிருந்து எமது முன்னோர் காலம் வரை இந்தக் கட்டுக்கோப்புடன் வாழ்ந்தார்கள்.

பெற்றோரின் கட்டுப்பாட்டில் எந்தவொரு ஆடவனையும் நிமிர்ந்து பார்க்க அஞ்சும். அதாவது பெற்றோரின் சொற்படி நடக்கும் குணமுள்ள ஒரு பெண்ணைத்தான் அந்தக் கால ஆண்களும் விரும்பி மணந்தார்கள். முன்பு ஒரு பெண் பூப்பெய்தி விட்டாள் என்றால் ஒரு அறையில் விட்டு கரியால் கோடு கீறி அதை தாண்டிவர முடியாதவாறு ஒரு வரைமுறை வைத்தார்கள் வீட்டில் உள்ள பெரியவர்கள்.

அந்த வீட்டுக்கு பிற ஆடவர் செல்வதும் தடைசெய்யப்பட்டிருந்தது. ஆனால் இன்று 'பூப்புனித நீராட்டுவிழா' என்ற போர்வையில் வீடியோவில் காண்பிப்பதற்காக தொட்டியில் தண்ணீர் நிரப்பி அதில்பிள்ளையை நீராட்டுகிறார்கள். இதுதானா 'பூப்புனிதம்.' புனிதத் தன்மை கெட்டு அந்த பிஞ்சு மனதில் தேவையற்ற ஆசைகளை வளர்க்கப் பார்க்கிறார்கள். குழந்தைத் தன்மை மாறி தான் பெரிய மனுஷி என்ற எண்ணம் வேரூன்றி விடுகிறது.

கல்வி கற்பதிலிருந்து உத்தியோகம் பார்ப்பதிலும் ஆணுக்குப் பெண் சரிசமம் என்றால் எல்லாவற்றிலும் அதை எதிர்பார்ப்பது உசிதமல்ல. பெற்றோர்களாகிய நாம் பிள்ளைகளை பதின்மூன்றிலிருந்து பத்தொன்பது வயதுவரை (அதாவது 'டீன் ஏஜ்') மிகவும் கண்ணும் கருத்துமாக வளர்ப்பது தலையாய கடமை. வேலைக்குச் செல்லும் பெற்றோர் பிள்ளைகள் படிக்கும் பாடசாலை, தனியார் கல்வி நிலையம் சென்று பொறுப்பான வர்களிடம் சென்று பிள்ளையின் நிலை பற்றி அறியலாம்.

தவறு யாரிடமோ இருக்க பாடசாலையையோ, தனியார் கல்வி நிலையங்களையோ குறைகூறுவது பயனற்ற செயல். வீட்டில் பெற்றோர் பிள்ளைகளுடன் கதைத்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அதற்குரிய தீர்வினை வழங்க வேண்டும்.

ஒரு கவிஞன் பாடினான்,''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவனாவதும் தீயவனானவதும் அன்னை வளர்ப்பினிலே'' என்று. கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமல்ல. அது ஆண்களுக்கும் பொருந்தும். பெண் காலம் காலமாக அடிமையாக வாழ்கிறாள் என்று நினைத்தது அந்தக் காலம். இன்று எந்த ஒரு ஸ்தாபனத்திலும் பெண்தான் முதன்மையாக இருக்கிறாள். எமது நாட்டில் உள்ள பெண்கள் தங்கள் உடைகளிலும் கவனம் செலுத்துவார்களேயானால் அவள் எல்லோராலும் போற்றுதற்குரியவாள்.

ஒரு பெண் தாயாக, சகோதரியாக, தாரமாக தன் நிலை உணர்ந்து செயற்பட்டால் 'பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின்' என்னும் வள்ளுவன் வாக்குக்கிணங்க பெண் பெருமை அடைகிறாள். பெண்களை மலருக்கு ஒப்பிடுகிறார்கள். பெண் என்பவள் மற்றவர்களை அடக்கி ஆள நினைக்காமல் தன்னைத் தான் அடக்கி ஆண்டாள் என்றாள் போற்றுதற்குரியவளாகிறாள். இவள் தான் நம் பாரதி சொன்ன புதுமைப் பெண்.

● நிற்றா இராசலிங்கம்.

# மூலிகை மருத்துவம்

## மொசு மொசுக்கை

**Bin Mukia Scavrilla**

மறுபெயர் - இருகுரங்கின்கை, முசுமுசுக்கை, ஐலேயம், அயிலேயம்.

உபயோகம்-இலை, வேர்

சுவை-துவர்ப்பு, கார்ப்பு



செய்கை - கோழையகற்றி,துவர்ப்பி

குணம் - இலையினால் -இருமல், கோழை, இரைப்பு, கம்மல், மூக்கில் நீர்பாய்தல் தணியும்.

வேரினால் - ஆண்மையின்மை, மந்தம், வாந்தி, நாற்றத்துடன் இறுகிய கோழை, மார்பு நோய், குன்மம் என்பன தீரும்.

உபயோகம் - இலைச்சாற்றை பிழிந்து குழந்தையினுடைய வயதுக்கு ஏற்றபடி கோரோசணை சேர்த்துக் கொடுக்க கபம் சம்பந்தமான ரோகங்கள் குணமாகும்.

ஊறவைத்த புழுங்கல் அரிசியுடன் மொசுமொசுக்கை இலையையும் சேர்த்தரைத்து சிறிது உப்புச் சேர்த்து அடைபோல தட்டி அனலில் வைத்தெடுத்து உள்ளுக்குக்கொடுக்க கோழைக் கட்டு, இருமல் ஈளை தணியும்.

வேரை உலர்த்திப் பொடிசெய்து குடிநீர் செய்துகொடுக்க மார்பு நோய் நீங்கும்.

ரி. உமா *(2 ஆம் வருடம்)*
லங்கா சித்த, ஆயுள்வேதக் கல்லூரி - சுன்னாகம்.



**வீணை கூட**

நான் மீட்டுகின்ற
வீணை கூட
உன் பெயரைத் தான்
தினம் வாசிக்கிறது
விடாமல் துடிக்கும்
-என்
இதயத்துடிப்பினைப்
போல்.

**உயிர் ஞாபகங்கள்**

தொலைந்து போன உன்
ஞாபகங்கள் -நீ
எனை விட்டு
தொலைந்தபோதிலும்
அழியாமற் கிடக்கின்றன
என் இதயக்கிடங்கில்.

மைனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு தன்னம்பிக்கை ஒரு வழிகாட்டி

*(சென்றவாரத்தொடர்ச்சி...)*

தன்னம்பிக்கை ஊட்டவேண்டும்; பாராட்ட வேண்டும்; மன்னிக்கும் மனோபாவத்தை வளர்க்க வேண்டும். குழந்தைகள் பிற மனிதர்களையோ சம்பவங்களையோ கண்டு பயப்படாதிருக்க - கலங்காதிருக்க நாம் தைரிய மூட்டி வழி வகைகளைச் சொல்லிக் கொடுக்கவேண்டும்.

மனிதன் ஏன் தன்னம்பிக்கையற்றுப் போகிறான்? தனது திறமையில் அவனுக்கு சந்தேகம், தனது முடிவெடுக்கும் திறன் பற்றிய பயம், தன்னால் முடியும் என்பதில் நம்பிக்கை இல்லை. என்ன ஆகுமோ என்ற பயம்.

தன்னம்பிக்கையற்றவனுக்கு தன்னைப் பற்றிய கௌரவமான அபிப்பிராயம் இருக்காது. தான் எதற்கும் உதவாக்கரை என்று தன்னைப் பற்றியே மதிப்பிட்டுக் கொள்கிறான். ஏதாவதொரு குருட்டு அதிஷ்டம் கிடைக்காதா என வானத்தைப் பார்ப்பவனுக்கு தைரியம் குறைவு. எதையும் செய்யத் தயங்குவான். பிறருடன் கலகலப்பாக பழகமாட்டான். பிறருடன் பழகினால் அவர்கள் தன்னை அவமானப் படுத்தி விடுவார்களோ என்ற பயம். பிறரைச் சார்ந்துநிற்க ஆசைப்படுவான். தன் இயலாமைக்கு சமூகத்தைக் குற்றம் சாட்டுவான். தன்னம்பிக்கையில்லாதவன் செத்துக்கொண்டு இருக்கிறான். அவன் ஓர் நடைப்பிணம். பொறுப்பைக் கண்டு பயப்படுகிறான்.

தன்னம்பிக்கையில்லாதவன் பயம், கூச்சம் நிறைந்தவனாகக் காணப்படுகின்றான். பிறருடன் பழகக் கூச்சமடைகின்றான். தொழிலில், குடும்பத்தில், சமுதாயத்தில் தோல்வியைத் தழுவுகின்றான். இவர்கள் அதிகமான எழுச்சி அடைபவர்கள். மனவெழுச்சி காரணமாக செயல்புரிய இயலுவதில்லை. சமூகத்திலிருந்து ஒதுங்கிப் போக நினைப்பவர்கள். எப்போதும் சுய ஆராய்ச்சியில் ஈடுபடுவார்கள். தமக்குள்ளே ஆலோசனையில் ஆழ்ந்து விடுவார்கள். தயக்கம் இருக்கும், பேச்சு, நடை, உடை, பாவனையில் ஒரு தயக்கம், பயம். தாம் இருக்கும் சூழலைப் புரிந்துகொள்ள மாட்டார்கள்.

தம்மால் என்ன முடியும் என்ற எண்ணத்துடன் தவறான முடிவுகள் எடுக்கின்றார்கள். அவர்கள் நடைமுறையில் உலகில் வாழக் கஷ்டப்பட்டு கற்பனை உலகில் வாழத்துவங்குகிறார்கள். தன்னை நம்பமாட்டார்கள். பிறறைச் சார்ந்து வாழக் கவலைப்படுவார்கள். தங்கள் பொறுப்பை கவலைகளை யார் தலையிலாவது சுமத்திவிடுவார்கள். சிறு குழந்தைகள் போல் எதிலும் சந்தேகம் பிறக்கும்.

இவர்கள் பலவீனமானவர்கள். இவர்கள் சிறு விஷயத்தை பெரிதுபடுத்துவார்கள். அவர்கள் செய்யும் காரியம் தவறு என்று பிறர் எடுத்துக்காட்டி விட்டால் மனம் உடைந்துபோவார்கள். பேச்சில் சிரமப்படுவார்கள். அவசர உணர்ச்சி உடையவர்கள். மன உறுத்தல் உடையவர்கள் . சோர்வடையும் தன்மை , எரிச்சல் போன்ற குணங்களை உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

**தன்னம்பிக்கையில் வளர...**

பயத்தின் காரணத்தைப் புரிந்து கொள்ளல், சோகத்தின் - தாழ்வுமனப் பான்மையின் காரணத்தை கண்டு பிடித்தல்.

எம்மைப் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.

சில சமயங்களில் நம்பிக்கைக்கு அப்பாற்பட்ட விஷயங்களால் நாம் துன்பப்படுகின்றோம். இது முட்டாள் தனம். அந்த சமயத்தில் ஒரு பிரார்த்தனை செய்யுங்கள். அவன் கையில் பாரத்தைப் போடுங்கள். நேரம் இருக்குமானால் கோயிலுக்குச் செல்லுங்கள். மனமாறக் கண்ணை மூடிப் பிரார்த்தியுங்கள்.

உங்களைப் பற்றி பிறர் பாராட்டியதை எழுதி ஒரு தாளில் வைத்திருங்கள். உங்கள் வாழ்வில் பல சம்பவங்கள் நிகழ்ந்திருக்கக் கூடும். அதன் சாரத்தை எழுதிவைத்துக் கொள்ளுங்கள். நம்பிக்கை தளரும்போது படித்துப் பாருங்கள். அப்போது மனதில் மீண்டும் இலட்சியம் பிறக்கும். தன்னம்பிக்கையால் அது பூரிப்படையும். தைரியத்தால் வலுப்பெறும்.

நாம் ஏதும் காரியத்தில் ஈடுபட வேண்டும். எழுதுங்கள். பாடுங்கள். காலாற நடந்து செல்லுங்கள். கொத்துங்கள். பாத்தி கட்டுங்கள். செடி பயிரிடுங்கள். பல காரியங்களைச் செய்யும் போது மனம் ஒரு சாதனையில் திழைக்கும் தன்னம்பிக்கைக்கு மருந்து வேலைதான். காரியம்தான். எனக்கு எழுதவராது என்று சொல்லிக்கொண்டிருந்தால் எப்படி எழுத்தாளனாக முடியும்? என்னால் முடியும். நான் எந்தக் காரியத்தையும் சிறிது சிறிதாக செய்து விடுவேன் என்ற மனோபாவத்தில் எண்ணங்களை மனதிற்குள் போடும் போது நமக்குள்ளே இருக்கும் நம்பிக்கையை நாம் தட்டிக்கொடுக்கிறோம். அப்போதுதான் நாம் முழுமையாக தன்னம்பிக்கை உள்ள மனிதனாக வாழமுடியும். வ்ளர முடியும்.

தனித்து நின்று தான், துணிச்சலோடு நின்று தான் மகத்தான சாதனைகளும் மகத்தான புரட்சிகளும் உலகில் நிகழ்ந்திருக்கின்றன. சுயமாக சிந்தியுங்கள்; தனித்து நில்லுங்கள். முதலில் எண்ணங்களில் புரட்சி நிகழட்டும்.

ஜெ. தயானந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இன்பம்

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் சிறந்த தமிழ்ப் புலமையும் சைவப் புலமையும் மிக்கவர். பாடல் பெற்ற தலமான திருவாவடுதுறைத் தலம் அமைந்துள்ள திருவாவடுதுறை ஆதீனத்தின் குருமகா சந்நிதானமாகத் திகழ்ந்தவர்.

சமகாலத்தில் வாழ்ந்தவரான மயூரம் வேதநாயகம்பிள்ளை, சிறந்த நீதிவான். மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் மேல் அளவற்ற பக்தியும் மரியாதையும் கொண்டவர். ஒருமுறை மயூரம் வேதநாயகம் பிள்ளை மேலகரம் சுப்பிரமணிய தேசிகரை பார்க்கச் சென்றார். அவர் இருக்கும் இடமான திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சென்றார்.

மயூரம் வேதநாயகம்பிள்ளை பிறப்பால் ஒரு கிறிஸ்தவர். ஆனால், தேசிகரோ சைவமடாதிபதி. இருந்தும் தமிழ்ப்பற்றுள்ளவர்களுக்கு மதம் ஒரு பெரிய தடையாகத் தெரியவில்லை. செந்தமிழாகிய அருவி இருவரிடத்திலும் பாயும் போது சாதி, மதம், சமயம் ஆகியவற்றுக் கிடையிலான பேதங்கள் எம்மாத்திரம்?

நீதிபதியும், ஞானநிதியான தேசிகரும் ஒன்று கூடி உணர்வும் உள்ளமும் கலந்து நீண்ட நேரம் அளவளாவிக் கொண்டிருந்தனர்.

தேசிகரிடம் நீதிபதி, பிரியாவிடை பெற்று வண்டியில் ஏறி மயூரத்தை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். செல்லும் வழியிலெல்லாம் அவரின் உள்ளம் எல்லாம் தேசிகரைப் பற்றியே இருந்தது.

மறுநாள் காலை ஒரு முக்கியமாக பொருள் தேசிகரின் திருவாவடுதுறை மடத்திலேயே நின்றுவிட்டதாக உணர்ந்தார். அப்பொருள் இல்லாமல் தனது நாளாந்த வாழ்க்கை சிறிதும் நகராது என்றுணர்ந்தவராக அல்லற்பட்டு தேசிகருக்கு ஒரு மடல் எழுதினார்.

அக்காலத்தில் தமிழறிஞர்கள் தமக்கிடையில் கடிதங்கள் பரிமாறிக்கொள்ளும் பொது பாடல் வடிவிலேயே எழுதுவார்கள். சொற்சுருக்கம், பொருட்செறிவு நிறைந்த அப்பாடல்கள் பின்னர் சிறந்தவையாக இன்றும் நிலைத்திருக்கின்றன. அத்தகைய பாடல்கள் காலவெள்ளத்தால் அழிவடைந்து கொண்டிருக்கும் அல்லது புழக்கம் இழந்துகொண்டிருக்கையில் அவற்றை முன்நிலைப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

அவ்வகையில் தேசிகருக்கு நீதிபதி மயூரம் வேதநாயகம் பிள்ளை தனது பொருள் ஒன்றை சந்திப்பு முடிந்து வீடு திரும்பியவுடன் தேசிகரிடத்தே விட்டு வந்துவிட்டதாகக் கூறி மடல் ஒன்று எழுதினர். கடித வடிவில் அமைந்த அப்பாடல் இதோ,

*"சுருதியோர் உருக்கொண்டென்ன*
*சுப்பிரமணிய மேலோய்!*
*கருதி இன்னொருகால் உன்னைக்*
*காணலாம் எனும் அவாவாய்*
*பொருதி என்மனம் பின் சுர்க்கப்*
*பொறையுறும் வண்டி பூட்டும்*
*எருதுகள் முன்னே சுர்க்க*
*என்பதி அடைந்துவிட்டேனே"*

என்று விருத்தாப்பாவில் தனது மனக்குறையை கடிதம் மூலம் சுப்பிரமணிய தேசிகருக்கு தெரிவிக்கிறார். இதன் கருத்து யாதெனில் வேதத்தையே வடிவாகக் கொண்ட சுப்பிரமணிய தேசிகன் என்னும் மேலானவனே! இன்னும் ஒரு தடவை உம்மை சந்திக்க வேண்டும் என எனது மனம் அவாவுகிறது. இதனால், நீர் இருக்கும் இடம் நாடி என்மனம் ஈர்க்கின்றது.

ஆனால், எனது வண்டியில் பூட்டிய எருதுகளோ எனது இருப்பிடம் நாடி விரைந்துசென்றதால் எனது இருப்பிடத்திற்கே வர வேண்டிய தாயிற்று. எனவே எனது மனம் உன் இருப்பிடத்தில் விட்டுவிட்டு வந்துவிட்டேன். இதனால், எனது அன்றாட வாழ்வியற் கடமைகளை ஆற்றமுடியாமற் துன்புறுகிறேன் என்பதே இப் பாடலின் அடிப்படைக் கருத்து. இப்பாடல் மூலம் தனது உள்ளக் கிடக்கையை மிக அழகாக எடுத்துரைக்கிறார்.

பின்னர் எனது மனம் உவ்விடத்தில் இருப்பதால் அதாவது உடல் இங்கேயும் மனம் அங்கேயும் இருந்தால் எப்படி வேலை செய்யமுடியும். அதனால் என் மனதை என்னிடத்தே அனுப்பி வைக்குமாறு சுப்பிரமணிய தேசிகரை பாடல் மூலம் வேண்டுகிறார்.

*"சூர்வந்து வணங்கும் மேன்மைச் சுப்பிரமணியதேவே!*
*நேர்வந்து நின்னைக் கண்டு*
*நேற்று ராத்திரியே மீண்டு*
*ஊர்வந்து சேர்ந்தேன் எந்தன்*
*உள்ளம் சேரக்காணனே!*
*ஆர்வந்து சொல்லினும்*
*கேளேன். அதனை இங்கனுப்புவாயே!"*

என்று விண்ணப்பம் செய்கிறார்.

இதன் கருத்து யாதெனில் பகைகள் எல்லாம் உன்னைக் கண்டு வணங்கும் தன்மை பொருந்திய சுப்பிரமணியனே நேற்று இரவு உன்னைக் கண்டு தி[illegible]பி எனது ஊர் வந்து சேர்ந்தேன். ஆனால், எனது மனம் மட்டும் வந்து சேரவில்லை. யார் யாரோ எல்லாம் வந்து தேறுதல் சொல்லவும் கேட்கவில்லை. எனவே எனது உள்ளத்தை என்னிடத்தே அனுப்புமாறு அன்புக்கட்டளையிடுகிறார்.

இருவருக்கிடையே இருந்த அன்பின் ஆழம், தமிழின் ஊற்று போன்றவற்றை மேற்சொன்ன பாடல்களின் மூலம் தெளிவடையலாம்.

**எஸ். நதிபரன் B.A. (Hons)**

# ஊர்ப் புதினம்



நிகழ்வுகளுக்கு விருந்தினர்களை அழைக்கும் முறையில் முன்மாதிரியான சிலவற்றை இங்கு பகிர்கின்றேன். நிகழ்வில் ஏகப்பட்ட விருந்தினர்களைப் பட்டியலிட்டு அமர்க்களப்படுத்தும் நிகழ்வுகள் பல இடங்களிலும் வெகுகாலமாகவே அரங்கேறுகிறது.

அண்மையில் சில நிகழ்வுகளைப் பார்த்தேன். அழைப்பிதழில் பிரதம விருந்தினர் என ஒருவரின் பெயர் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் மட்டும் முதன்மையான ஆசனத்தில் நிகழ்வின் தலைவருடன் அமர்ந்திருந்தார். ஏனைய மதிப்பிற்குரிய பிரமுகர்களும் ஆசனங்களில் அமர்ந்திருந்தார்கள்.

விழா அமைதியாகத் திறம்பட நடைபெற்றது. இந்திய தமிழகத்துடன் நீண்ட காலமாகவே பரீட்சயம் உடைய பெரியார் ஒருவர் கூறினார்; அங்கு 'சிறப்பு விருந்தினர்' என ஒருவரை மட்டும் அழைத்து அழைப்பிதழில் போட்டு நிகழ்வை நடத்தும் வழக்கம் உள்ளதாக என்று. அதுதான் சரியான முறையெனவும் அவர் கூறினார்.

எமது பிரதேசங்களிலோ முதன்மை விருந்தினர் அல்லது சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள் என பலரும் அழைப்பிதழில் இடம்பெறுகின்றனர்.

அவ்வளவு பேரும் தமது பேச்சாற்றலை வெளிப்படுத்த விழாவின் பார்வையாளர்கள் 'எப்போதடா இது முடியும்...' எனத் தவிப்பதை பல இடங்களில் காண்கின்றோம்.

விருந்தினர் பட்டியலில் தமது பதவி, கல்வித்தகைமை,சேவை மூப்பு கருதி சரியான இடத்தில் தாம் வைக்கப்படவில்லையென சிலர் கோபித்து நிகழ்வைப் புறக்கணித்த சம்பவங்களையும் காணமுடிகிறது.

சில நிகழ்வுகளில் மேடையில் இருக்கும் விருந்தினரை விட குறைந்த எண்ணிக்கையில் பார்வையாளர்கள் இருக்கும் விசித்திரத்தையும் காண்கின்றோம். முன்பு சொன்னது போல நிகழ்விற்கு ஒருவரை மட்டும் விருந்தினராக அழைக்கும் வழக்கத்தை கடைப்பிடித்தால் நிகழ்வு நன்றாக இருக்கும்.

● சிவகாமி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில்நுட்பம்

## வரலாற்றினூடாக ஒரு பயணம்




9


*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*


இதுவே முதலாவது இலத்திரனியல் கணினியாகும். இது John Mauchy மற்றும் J. Prosper Eckert என்பவர்களால் உருவாக்கப் பெற்றது. இதற்கு அமெரிக்க இராணுவம் தனது பண உதவிகளை வழங்கியது. ஆனால், இக்கணினியானது தகவல்களைச் சேமித்துவைக்கும் திறனைக் கொண்டிருக்கவில்லை. முதலாவது தகவல்களை சேமித்து வைக்கக் கூடிய கணினியாக 1940 இல் Mauchy மற்றும் Eckert ஆகியோர்

4


EDVAC (Electronic Discrete Variable Computer) ஐ வடிவமைக்கத் தொடங்கினார்கள். John Von Neumann's 1945 இல் இதனது செயற்பாடுகளைப் பற்றிய தகவல்களைத் தொகுத்தார். பிரித்தானிய விஞ்ஞானிகளால் அவரது கருத்துக்கள் 1948 இல் Man chester Mark ஐ என பாவனைக்கு விடப்பட்டது.

(தொடரும்...)





10



கணினி தொடர்பான உங்களது சந்தேகங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். பதில் கிடைக்கும்.
முகவரி
'வீரகேசரி' கிளைக் காரியாலயம்
117, புகையிரத வீதி, யாழ்ப்பாணம்.

**கேள்வி :** மடிக்கணினியில் (LapTop) Games விளையாடுவது மடிக்கணினிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று சிலர் கூறுகிறார்கள். அதற்கான காரணம் என்னவென்று நான் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். தயவு செய்து அது என்னவென்று விளங்கப்படுத்தவும்.

*எஸ். சிவா, யாழ்.*

**பதில் :** கணினியில் Games விளையாடும்போது அதிக அளவு VGA Memory பாவிக்கப்படுகிறது. மடிக்கணினியில் onboard VGA பாவிக்கப்படுவதால் அது பழுதடைவதற்கான சந்தர்ப்பம் அதிகளவில் உண்டு. அத்துடன், மடிக்கணினியில் உள்ள very sensitive Keyboard, Tuchpad Mouse control, Battery போன்றன பாதிப்படைய வாய்ப்பு அதிகம்.

**மேகலா பாலமுரளி**
*விரிவுரையாளர்,*
*கொழும்பு பல்கலைக்கழகம்*

## முக்கியதேவை புரிந்துணர்வு

சிங்கள, தமிழ், முஸ்லிம் சோதரர்களொன்றாய்
எங்களைப் பார்த்திட இங்கு வாறார்
இங்கிதமதாகவே நாம் நடந்து என்றும்
மங்கள மாகவே வழி வகுப்போம்.

கொடுக்கல் வாங்கல்கள் செய்கையிலே சில
இடக்கு முடக்குகள் வருங் கவனம்
அடுத்துக் கெடுத்ததைப் பெரிதாக்கி - இங்கே
பிழைக்கும் ஒரு கூட்டம் மிகக் கவனம்.

உறவுக்குள் சண்டை வருவதுண்டு-அதை
மறுகணம் மறந்துறவாடுதல் போல்
சிறு சிறு பிணக்குகள் வந்தாலும் அதைப்
பெரு நெருப்பாக்காது நாம் வாழ்வோம்.

கலைவிழா களியாட்ட நிகழ்வுகளும் இங்கே
இரவிரவாக நடக்கையிலே
கன்னியர் காளையர் கூடுகையில் என்றும்
கண்ணியங் காத்து கலை வளர்ப்போம்.

மூவின மக்களும் கூடுகையில் இப்போ
முக்கியந் தேவை புரிந்துணர்வு
மேவிடும் வன்முறை அனைத்தையும்
ஒழிந்திந்தப்
பூமியைப் புதுப் பொலிவாக்கிடுவோம்.

**கவிமணி அன்னைதாஸன்**
(வயவையூரான்)

## தாய்

உயிர் தந்த உறவே
என் உயிர் சுமந்தாய்
ஊன் இன்றி காத்தாய்
ஊர் போற்ற வளர்த்தாய்
உன் உயிர் பிரிவும் வேளை
யில்
எனை நீ மறந்தாய்

**நீற்றா இராசலிங்கம்**

எஸ்.எம்.எஸ். அனுப்பி
என் மனசை பறித்தவளே!
உள்ளயிருந்தால் சொல்லிடு
என் காதலை திருப்பி
தந்துவிடு

தீண்டாத மேகம்
கண்டு
நிலவுக்கு வெறுப்பு
உன்னைப்போல்
அவையும் எட்டவிலகி
செல்வதால்

**வே.வே. அகிலேஸ்வரன்**

# பயன் பல தந்திடும் பங்குனி உத்தரவிரதம்

சைவசமத்தவர் அனுஷ்டிக்கும் சிவ விரதங்களில் இந்தப் பங்குனி உத்தர விரதம் மிகவும் மகத்தானது. மிக்க மகிமையும் மாண்புடைய இந்த விரதம் பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தில் பௌர்ணமி வரும் நாளில் மிகவும் பயபக்தியுடன் அனுஷ்டிக்கப்படுகின்றது.

சந்திரன் உத்தர நட்சத்திரத்தில் சஞ்சரிப்பதால் இது மிகவும் புனிதம் மிக்கதாகக் கருதப்படுகின்றது. இந்த விரதத்தைக் கல்யாண விரதம் எனவும் அழைப்பதுண்டு. ஏனெனில், திருமணமாகாத காளையரும் கன்னியரும் இந்தப் பங்குனி உத்தர விரதத்தை நோற்றால் அவர்களுக்கு விரைவில் விவாகம் நடைபெறும் என்பதே கருத்தாகும்.

சிவபெருமானுக்கு உமாதேவியாருக்கும் உரிய இப்பங்குனி உத்தர விரதம் அனுஷ்டிக்க விரும்புவர்கள் காலை எழுந்து நீராடி, தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து, சந்தியாவந்தனம் முடித்து, சிவாலய தரிசனஞ் செய்யவேண்டும். விரத நாள் முழுவதும் சிவ சிந்தனையுடனே தேவார, திருவாசகங்களை ஓதிய வண்ணமோ அல்லது சிவ கதைகளைப் படித்தோ, கேட்டோ புராண படனங்களில் ஈடுபட்டோ இருக்கவேண்டும். எக் காரணம் கொண்டும் வேறு கேளிக்கைகளில் ஈடுபடக்கூடாது. ஸ்திரீ சங்கமம் முற்றாக நீக்கப்படவேண்டும்.

மதியவேளை ஒரு பொழுது மட்டும் உணவுட்கொண்டு ஒரு சிவனடியாருக்கு மகேஸ்வர பூசை செய்யவேண்டும். இரவு எதுவுமே உட்கொள்ளாது சிவபிரான் சிந்தனையுடன் சிவபுராணம் படிக்க வேண்டும். இதுவே உத்தமம். அது முடியாதவர்கள் இரவு பால், பழம் எடுக்கலாம். ஆனால், சிவ சிந்தனையுடனேயே பொழுதைக் கழிக்கவேண்டும். இதினின்றும் வழுவுதல் பாப காரியமாகும்.

வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் இறைவன் தந்தது எதற்காக? தன்னை வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்.

ஆகவே, இந்தப் பங்குனி உத்தர விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் சிவதொண்டுகளில் ஈடுபட வேண்டும். திருநாவுக்கரசர் பெருமான் உழவாரத் தொண்டு செய்தது போல இறை தொண்டாற்றினால் மிகுந்த பயன்கிடைக்கும்.

இப் பங்குனி உத்தரவிரதம் பற்றிய சிறப்பு என்னவென்றால் முருகப்பெருமானுக்கும் தெய்வானையம்மைக்கும், ஸ்ரீராமபிரானுக்கும் சீதாதேவிக்கும், சிவபெருமானுக்கும் மீனாட்சியம்மைக்கும், மகாவிஷ்ணுவுக்கும் ஆண்டாளுக்கும் இப்பங்குனி உத்தரத்தன்றே விவாகம் நடந்ததாக வரலாறு பகர்கின்றது.

மேலும், ரதிக்காக மன்மதனை சிவபெருமான் மீண்டும் உயிர்கொடுத்து அநங்கனாக எழுப்பித்தந்த நாளும்,அர்ச்சுனன் பிறந்த நாளும், சபரிமலை ஐயப்பன் பிறந்த நாளும் இதுவேன்றே கூறப்படுகின்றது.




இப்பங்குனி உத்தர நன்னாளின் சிறப்புப் பலன்களை ஆராயுமிடத்து 48 வருடம் இவ்விரதமிருந்தால் அடுத்த பிறவி தெய்வீகமாக அமையுமென்றும் பாவங்கள் அகன்று, பகைவிலகும் என்றும் தண்ணீர்ப் பந்தல் வைத்து தாக சாந்தி செய்தால் பிறவிப்பிணி தீருமென்றும், திருமகள் இவ்விரதம் பிடித்தே விஷ்ணுவின் மார்பில் வீற்றிருக்கும் பேறுபெற்றதாகவும், இந்திரன் இந்திராணியையும், பிரம்மன் சரஸ்வதியையும் கைப்பிடித்தாகவும் இப்பங் குனி உத்தர நாளன்று கடல், நதி, ஏரி, குளம், தடாகம் போன்றவற்றில் தீர்த்தமாடினால் மிகுந்த புண்ணியம் கிடைக்கும் என்றும் வரலாறு பகர்வதாக அறியக் கிடக்கின்றது.

எனவே பங்குனி உத்தர விரதத்தை அனுஷ்டித்து சகல சௌபாக்கியங்களுடனும் வாழ நம்மை நாமே தயார்படுத்தி நற்கதி பெற்றுய்வோமாக!

*'சிவநெறிக் கலாநிதி'*
**இராசையா ஸ்ரீதரன்**

# திருப்பாடுகளை நினைவுகூருவோம்

## உறவுகளை வலுப்படுத்துவோம்



"ஆகையால், நீங்கள் உங்கள் காணிக்கையை பலிபீடத்தில் செலுத்தவரும் போது உங்கள் சகோதரர், சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கள் உண்டென அங்கே நினைவுற்றால் அங்கேயே உங்கள் காணிக்கையை வைத்துவிட்டு போய் முதலில் அவரிடம் நல்லுறவினை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்".

மனமாற்றத்தின் காலமாகிய தவக்காலம் மனிதனுடைய வாழ்க்கையினை முற்றுமுழுதாக அலசி ஆராய்ந்து சீர்தூக்கி பார்க்கும் ஓர் உன்னத காலமாகும். அந்த வகையிலே தவக்காலத்தின் முதல் வாரம் எமக்கு விடுக்கும் செய்தி யாதெனில்,

மனித உறவுகள் வலுப்பட வேண்டும். அதிலும் மேலாக நல்லுறவை ஏற்படுத்த வேண்டும் என்பது இறைவனுடைய விருப்பமாகும். ஆனால், இறை விருப்புக்கு மாறான நிலையே மனிதனிடத்தில் காணப்படுகின்றது. மனத்தாங்கலும், பகைமையும் இன்று கணவன் - மனைவியிடமும் சகோதர - சகோதரிகளிடமும் உறவுகளிடையும் இன்று நாம் காணக் கூடியதாக உள்ளது. இத்தகைய நிலை இன்று உருவாகக் காரணமாக இருப்பது யாதெனில் சொத்து, பணம், பொருள், காணி, அந்தஸ்து, சுயநலம், வரட்டுக் கௌரம் ஆகியவையே ஆகும்.

இதனால், மனிதனிடத்தில் பகைமையும் போட்டியும், கொலையும் கொள்ளையும் பழிவாங்கும் நிலையும் இன்று வளர்ந்திருப்பதனை நாம் காண்கிறோம். இத்தகைய நிலை முற்றிலும் மாறுபட வேண்டும். உறவுகளுக்காக என்றும் உதவிடும் நிலை வேண்டும். அதற்கு நாம் என்ன என்ன செய்ய வேண்டும்.

*அன்பினை வளர்த்தல் வேண்டும்*
*அமைதியை உருவாக்கிட வேண்டும்*
*பொறுமையை வளர்த்திட வேண்டும்*
*பொய்மைகளை விலக்கிட வேண்டும்*
*உலக ஆசைகளை காத்திட வேண்டும்*
*நல் உறவினை வளர்த்திட வேண்டும்*

இதன்மூலம் குடும்பத்திலும் சமூகத்திலும் நாட்டிலும் ஒரு நல்லுறவு நிலைத்திருக்கும். இறைவன் தரும் அமைதியும் மண்ணகத்தில் நிறைவாக இருக்கும்.

**ஜெ. அனுஷ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதையலை காக்கும் ஏழு பூதங்கள்!

உலகம் விஞ்ஞானத்தால் மிஞ்சிவரும் காலத்தில் இன்றும் புதையலை காவல் காக்கும் பூதம் பற்றிய கிலி நம் மத்தியிலி தற்போதும் காணப்படுகிறது. குகைக்குள் தங்கமும் வைரமும் எப்படி வந்தன? அதிர்ச்சிகரமான பதில்களும், ஆச்சரிய தகவல்களும் பின்னிப்பிணைந்து கிடக்கின்றன.

சேலம் மாவட்டம், மேட்டூர் அருகே பி.என்.பட்டி பேரூராட்சி பகுதியில் உள்ளது கோட்டைக்கரடு. இந்த காட்டின் மீது திப்பு சுல் தான் கோட்டை சிதைந்த நிலையில் இன்றும் காணப்படுகிறது. எங்கும் அடர்ந்த புதர்கள். மொட்டையாக, வழுக்கையாக, கூர்ப்பான போன்ற பல வடிவில் பாறைகள் காணப்படுகின்றன. இங்குதான் குகைக்குள் 7 கொப்பரைகள் அதாவது 7 அண்டாக்கள் நிறைய புதையல் இருப்பதாக சொல்கின்றனர் மக்கள்.

புதையல் எடுக்கப் போனா, பூதம் விழுங்கிடும் என்ற பயமுறுத்தலையும் மீறி சிலர் நெஞ்சை நிமிர்த்தி குகைக்குள் சென்றிருக்கின்றனர். கும்மிருட்டாக இருக்கும் குகையில் பாதை தெரிவதற்காகவும், எதிரே ஏதும் அபாயம் இருக்கிறதா என்பதை உணரவும், விஷப் பூச்சிகளிடம் இருந்து தப்பிக்கவும் தீப்பந்தம் ஏந்திச் சென்றனராம். குகைக்குள் நுழைந்து சில அடி தூரம் சென்றதுமே தீப்பந்தம் படா ரென்று அணைந்திருக்கிறது. தைரியமாய் உள்ளே போன வீராப்பு ஆசாமிகள் குலைநடுங்கிப்போய் குகையை விட்டு தலைதெறிக்க ஓடி வந்த சம்பவம் அடிக்கடி நடந்திருக்கிறது.நடந்த சம்பவங்களை நினைவுகூர்ந்து அதற்கான காரணங்கள், பழங்கதைகளை விவரிக்கின்றனர் மக்கள்... "ஏழு பூதங்களின் வேலைதான் அது. அதனால் முடியாதது ஒண்ணுமே இல்ல. புதையல் தேடிப் போனவங்க உயிரோடு திரும்பினதா சரித்திரம் இல்லை. அது.. வெள்ளைக்கார ஆட்சி இந்தியாவுல காலூன்றி, வேரூன்றிய நேரம்.. அப்ப மேட்டூர் பகுதி திப்பு சுல்தான் ஆட்சியில் இருந்தது. தன்னை பாதுகாத்துக்க கோட்டைக்கரடு மீது திப்பு சுல்தான் கோட்டை கட்டினான்.

கோட்டைக்காட்டில் இருந்து கோட்டையூருக்கு ரகசிய சுரங்கம் இருக்கு. பிரிட்டிஷ் படையிடம் இருந்து தப்பிய திப்பு சுல்தான் படை வீரர்கள் இது வழியாத்தான் தப்பினார்கள்.

இங்குள்ள குகையில்தான் 7 கொப்பரை நிறைய தங்கம், வைரம், வைடூரிய நகைகள் இருக்கின்றன. அதை காலம் காலமா ஏழுபூதங்கங்கள் தான் காக்குது. யாரையும் பூதங்கள் உள்ள விடாது. மீறிப் போனவங்க உயிரோட திரும்பினதா சரித்திரம் இல்லை. 20 வருடங்களுக்கு முன்னார் வரை, குகைக்குள்ள 10 அடி தூரமாவது போய்ட்டு வருகின்ற அளவுக்கு இருக்கும். இப்ப நுழையக்கூட முடியாத அளவுக்கு புதர் மண்டியிருக்கு" என்கின்றனர் மக்கள்.

சிலர் தங்கள் அனுபவத்தை பீதி குறையாமல் விவரிக்கின்றனர்.. "நான் கூட குகைக்கு போயிருக்கேன். தீப்பந்தம் அணையிறமாதிரி இருந்தது. உடனே வெளியே வந்துவிட்டேன். அந்த கண நேர வெளிச்சத்தில உள்ளே பார்த்தேன்.

குகை முழுக்க மனித எலும்புக்கூடு குவிஞ்சு கிடந்தது. புதையல் தேடிப் போனவங்களை பூதம் தூக்கி விழுங்கி எலும்புக்கூட்டை அங்கயே வீசியிருக்கு. மனிதர்களின் வில்லத்தனம் பூதங்களிடம் பலிக்காது" என்றார்.ஒரு ஆள் மட்டும் நுழையும் அளவுக்கு இருக்கிறது குகைப் பாதை. மலை உச்சியில் இருந்து மேட்டூர் அணை சுவர் வரை கற்கள் அடுக்கப்பட்டதற்கான அடையாளம் சிதைந்த நிலையில் காணப்படுகிறன. தண்ணீர் வற்றும் நேரத்தில் மட்டும் இது வெளியே தெரிகிறது.

கோட்டையூர், கோட்டைக்கரடு, திப்புசுல்தான் கோட்டை, ரகசிய சுரங்கப்பாதை... இவை எல்லாமே மர்மம் நிறைந்த இடங்களாகவே இன்றும் இருக்கின்றன.

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்

## [18.03.11 முதல் 24.03.11 வரை]

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



### மேஷம்

மேடராசி அன்பர்களுக்கு எதிர்பார்ப்புகளில் ஏற்றங்கள் அமையும் நிலை உண்டு. தொழில் நிலைகளில் நல்ல முன்னேற்றம் அமையும் நிலையுண்டு. குடும்பத்தில் எதிர்பார்ப்புகள் நிறைவேறுகின்ற நிலைப்பாடு இருக்கும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமைகின்ற பலனுண்டு. மூத்த சகோதரர் வழியில் அனுகூலமான பலபலன்கள் ஏற்படும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சுமுகமான நிலைப்பாடுகள் ஏற்படுகின்ற பலனுக்கு பெண்களுக்கு மன மகிழ்ச்சியுண்டு. மாணவர்களுக்கு சிறப்பான வெற்றியுண்டு.



### இடபம்

இடபராசி அன்பர்களுக்கு சற்று அலைச்சல் நிலைகள் அதிகமாயிருக்கும். தொழில் நிலைகளில் வேலைப் பளு சிறு சிறு பிரச்சினை என்பனவிருக்கும். குடும்ப நிலையில் ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். பண வரவு சற்று சுமாரான மத்திமமான நிலையிலேயே இருக்கும். எதிர்பாராத வகை திடீர் பிரயாணங்கள் அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் இழுபறி நிலைகள் தொடரும் பலனுண்டு. பெண்களுக்கு சிறு சிறு மனச் சஞ்சலம் இருக்கும். மாணவர்கள் நிதானம் தேவை.



### மிதுனம்

மிதுனராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலன்கள் அமைகின்ற நிலையுண்டு. எடுக்கின்ற முயற்சிகள் நல்ல வெற்றிகள் கொடுக்கும். தந்தை வழியில் அனுகூலமான பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. குடும்பத்தில் எதிர்பார்ப்புகள் நிறைவேறுகின்ற நிலை இருக்கும். பண வரவு திருப்திகரமான நிலையில் அமையும் பலன் உண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பண பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு நல்ல வெற்றியுண்டு.



### கடகம்

கடகராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலாபலன்களே ஏற்படும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலைகள் அமைந்திருக்கும். உடல் நிலையில் சிறு சிறு சுகயீனம் மருத்துவ செலவு இருக்கும். குடும்பத்தில் சற்று மந்தமான பலாபலன்களே அமையும் பலனுண்டு. பண வரவு ஓரளவிற்கு தேவைகளை பூர்த்தி செய்யும் நிலையிருக்கும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும் பலனுண்டு. மாணவர்களுக்கு மத்திம பலன் ஏற்படும். பெண்களுக்கு மன சஞ்சலமுண்டு.



### சிம்மம்

சிம்மராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலன்கள் அமையும். குடும்பத்தில் அனுகூலம் நிறைந்த பலாபலன்களுக்கு இடமுண்டு. பண வரவு சற்று மத்திமமான நிலையிலேயே அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலைகள் தொடரும். தேவையற்ற வீண் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி வரும். கடன் நிலைகளில் சற்று இழுபறி தாமத நிலைகள் அமைந்திருக்கும். மாணவர்கள் முயற்சி தேவை. பெண்களுக்கு பொறுமை வேண்டும்.



### கன்னி

கன்னி ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் நிலைகளில் ஓரளவிற்கு இழுபறி நிலை இருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். பண வரவு மத்திமமான சுமாரான நிலையிலேயே ஏற்படும். கடன் நிலைகளில் சிறு சிறு மந்த நிலைகள் இருக்கும். பெண்களுக்கு மனச் சஞ்சலமிருக்கும். மாணவர்கள் முயற்சி வேண்டும்.



### துலாம்

துலாம் ராசி அன்பர்களுக்கு சிறப்பான அனுகூலமான பலன் அமையும். தொழில் நிலைகளில் நல்ல சிறப்புகள் அமையும். குடும்பத்தில் குதூகலமும் நன்மையும் அமையும் நிலையுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றியும் சிறப்பும் ஏற்படும். பண வரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு மேன்மை உண்டு.



### விருச்சிகம்

விருட்சிகராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் இழுபறி தாமத நிலை இருக்கும். குடும்பத்தில் அனுகூல பலன்கள் இருக்கும். தாயார் வழியில் சுகயீனம், மருத்துவ செலவு ஏற்படும். பண பரவு ஓரளவிற்கு அனுகூலமான நிலையில் அமையும். கடன் நிலைகளில் சற்று அலைச்சல் நிலைகள் இருக்கும். பெண்களுக்கு சஞ்சல நிலை இருக்கும். மாணவர்களுக்கு மேன்மையுண்டு.



### தனுசு

தனுராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே அமையும். தொழில் நிலைகளில் வேலைப்பளு அமைந்திருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு நற்பலா பலன்கள் ஏற்படும். சகோதரர் வழியில் சிறு சிறு பிரச்சினைகள் அமையும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமைகின்ற பலனுண்டு. கடன் நிலைகளில் மத்திம பலன்களே அமைந்திருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### மகரம்

மகரராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் சிறப்பான முன்னேற்றமுண்டு. குடும்பத்தில் அனுகூலமான நற்பலா பலன்கள் ஏற்படும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றிகள் அமையும். தொழில் நிலையில் பண வரவு திருப்திகரமானதாக ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். எடுக்கின்ற காரியங்களில் தேவையற்ற பிரச்சினை அமையும். பண வரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலை அமையும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்கள் நிதானம் தேவை.



### மீனம்

மீனராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். தொழில் நிலைகளில் நிதானம் வேண்டும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். பண வரவு ஓரளவிற்கு தேவைகளுக்கு ஏற்ப அமையும். எதிர்பாராத வகையில் திடீர் பணவிரயங்கள் ஏற்படும். கடன் நிலைகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். பெண்களுக்கு சுமாரான பலன் அமையும். மாணவர்கள் முயற்சி தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆரம்பத்தில் ஆங்கிலப் பாடசாலை
# தற்போது ஆரம்பப் பாடசாலை
# யா/புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தின் நிலை

யாழ். மாவட்டம், வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட உடுவில் கல்வி கோட்டப் பிரிவில் புன்னாலைக்கட்டுவன் வடக்கில் அமைந்துள்ளது புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயம்.

இப் பாடசாலையானது 1920 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போது வெஸ்லியன் மிஷன் ஆங்கிலப் பாடசாலை எனப் பெயரிடப்பட்டிருந்தது. இது ஆங்கிலேய வெஸ்லியன் மிஷனறிகளால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. ஆரம்பத்தில் ஒரு கிராமப் புறப் பாடசாலையில் ஆங்கில மொழியில் கற்பிப்பதில் இந்தப் பாடசாலை முன்னோடியாக விளங்கியது. ஆங்கிலமொழிக்கு அதிக முக்கியத்துவம் இருந்தமையினால் அந்த மொழியை தமது பிள்ளைகள் கற்கவேண்டும் என விரும்பிய பெற்றோர்கள் இப்பாடசாலைக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பினார்கள். இதனால், இந்தப் பாடசாலை இயல்பாக வளர்ச்சியடைந்தது எனலாம்.

இந்தப் பாடசாலைக்கு அயல் கிராமங்களான குப்பிளான், ஏழாலை, குரும்பசிட்டி, வயாவிளான்,புன்னாலைக்கட்டுவன் தெற்கு, நவக்கிரி, சிறுப்பிட்டி, ஈவினை மற்றும் அச்செழு ஆகியவற்றில் இருந்து மாணவர்கள் வந்து கல்வி கற்றுள்ளார்கள்.

இவ்வித்தியாலயத்தின் ஸ்தாபகராகவும் முதல் அதிபராகவும் தம்பிப்பிள்ளை என்பவர் கடமையாற்றியுள்ளார். தொடர்ந்து பல அதிபர்கள் இப்பாடசாலையில் கடமையாற்றியுள்ள போதும் சில அதிபர்களின் பெயர் விபரங்களை மட்டுமே தற்போது அறியமுடிகிறது. அவர்களில் எஸ். திருராஜசிங்கம், குமாரசுந்தரம், சின்னையா, சு. விநாயகாஸ்வரன் (1990 - 1996) மற்றும் என். குணரத்தினம் ஆகியோரைக் குறிப்பிட முடியும்.

புன்னாலைக்கட்டுவன் ஆங்கில கலவன் பாடசாலையாக இயங்கிவந்த இப் பாடசாலை, இலவசக் கல்விக் கொள்கையை அடுத்து அரசினால் சுவீகரிக்கப்பட்டது. பின்னர் அது புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயமாக பெயர் பெற்றது. 1960ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி க.பொ.த சாதாரண தரம் வரை வகுப்புக்கள் நடாத்த அனுமதி வழங்கப்பட்டன.அத்துடன், வர்த்தகமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டது.

ஆரம்பத்தில் 31'X128' என்ற அளவிலான கட்டடத்தொகுதியில் இயங்கிவந்த போதும் கடந்த கால யுத்த அனர்த்தம் காரணமாக குறிப்பிட்ட கட்டடத் தொகுதி தரைமட்டமாகியது. தற்போது இக்கட்டடம் இருந்தற்கான ஆதாரமாக கட்டட இடிபாடுகள் உள்ளன. தொடர்ந்து ஈவினை அ.த.க. பாடசாலையுடன் 1993 ஆம் ஆண்டுகளில் சேர்ந்து இயங்கின.

பின்னர் 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வை அடுத்து இப்பாடசாலை சாவகச்சேரியில் உடுவில் கோட்டப் பாடசாலைகளுடன் இணைந்து இயங்கியது.

1999 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளரால் தரம்-5 வரையான ஆரம்பப் பாடசாலையாக அறிவிக்கப்பட்டது. இக் காலத்தில் அதிபராக என். குணரத்தினம் கடமையாற்றியுள்ளார். இவரது காலத்தில் பாடசாலையின் வளாகத்தைச் சூழ முட்கம்பி வேலி அடைக்கப்பட்டதுடன் பாடசாலை வாயில் பெயர் வளைவு என்பன பாடசாலை நலன் விரும்பிகளின் உதவியுடன் அமைக்கப்பட்டது.

1999 ஆம் ஆண்டு நவம்பர் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் உதவியுடன் 60' x20' என்ற அளவில் வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்பட்டமையினையும் குறிப்பிட முடியும்.

தற்போது அதிபராக இரா. ஜெயக்குமார் கடமையாற்றி வருகின்றார். இவர் பாடசாலை மாணவர்களின் கல்விச்செயற்பாட்டுக்கும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் பெரும் உந்துசத்தியாக இருந்து வருகின்றார். இப்பாடசாலை 32 மாணவர்களுடன் மற்றும் 4 ஆசிரியர்களுடனும் இயங்கி வருகின்றது.

2010 ஆம் ஆண்டு உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் சமையல் அறை அமைக்கப்பட்டுள்ளது. புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீதுர்க்கா சனசமூக நிலைய செயலாளர் கு. கெங்காதரன் என்பவரால் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருவதுடன், பாடசாலையின் இலச்சினை, நோக்கு என்பவற்றை கட்டட சுவரில் வரைவதற்கு உதவி செய்வதுடன் கொடிக்கம்பங்களினையும் வழங்கியுள்ளார்.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த பரமநாதன் என்பவரிடம் உதவியுடன் கிராம அலுவலர் எஸ். பரமநாதனினால் மாணவர்கள் அனைவருக்கும் காலணிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், வருடம் முழுவதற்குமான மாணவர்களுக்கான பாடப்பயிற்சி வினாத்தாள்களும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலீஸ் பாடசாலை என அனைவராலும் தற்போதும் அழைக்கப்பட்டுவரும் இப் பாடசாலையின் நிலைமை குறித்து பழைய மாணவர்கள் மற்றும் இப்பகுதி மக்கள் அனைவரையும் யோசிக்க வைத்துள்ளது.



இவ் வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்களில் பெரும்பாலானோர் விவசாயம், கூலிவேலை செய்து நாளாந்த வருமானத்தில் வாழ்ந்துவருபவர்கள். இவர்கள் தங்களின் பிள்ளைகளை தூர இடத்திற்கு அனுப்பி கல்வி கற்பிக்க வசதியற்றவர்கள். இருந்தும் பிள்ளைகளை இப்பாடசாலையைத் தொடர்ந்து தரம்-6க்கு வேறு பாடசாலைக்கு அனுப்பவேண்டிய நிலை காணப்படுகின்றது.

"நாளைய சவால்களை வெற்றிகொள்ளக்கூடிய தலைவர்களை " என்ற நோக்குடனும் மகிழ்ச்சிகரமான கற்றல் அனுபவங்களினூடாகவும் இணைப்பாடவிதான செயற்பாடுகளினூடாகவும் மாணவர்களின் ஆற்றல்களை மேம்படுத்தல் என்ற பணிக்கூற்றுடனும் இப்பாடசாலை இயங்கிவருகின்றது.

தற்போது இப்பாடசாலையில் பல்வேறு தேவைகள் காணப்படுகின்றமையினை அறியக் கூடியதாக உள்ளது. இவ்வித்தியாலயத்தில் தரம்- 05 வரை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றபோதிலும் அதிபர் உட்பட நான்கு ஆசிரியர்கள் கடமையாற்றிவருகின்றார். அத்துடன், ஒரு தற்காலிக தொண்டர் ஒருவரும் கடமையாற்றி வருகின்றார்.5 வகுப்புக்கள் நடைபெறுகி[illegible] போதும் இவ் ஆசிரியர்களால் கற்ப்பிப்பது என்பது சவால் நிறைந்ததாக காணப்படுகின்றது. மாணவர் தொகைக்கு ஆசிரியர்களின் எண்ணிக்கை மேலதிகமாகக் காணப்படுகின்ற போதிலும் 5 வகுப்புக்களையும் ஒரே நேரத்தில் கற்பிப்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டியமை குறிப்பிடத்தக்கது.அத்துடன், பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் பல ஏற்படுத்தப்பட வேண்டும். அவற்றுள் குறிப்பாக சிறுவர் விளையாட்டு முற்றம் ஒன்று அமைக்கப்பட வேண்டியதுடன் குடிதண்ணீர் வசதிக்காக குழாய்க்கிணறு ஒன்றினை தற்போதைய கட்டடத் தொகுதிக்கு அண்மையில் அமைக்க வேண்டியுள்ளது.

பாடசாலை வளாகத்தில் குடிநீர்க் கிணறு காணப்படுகின்ற போதிலும் நீர் பெறுவதற்கு ஏதுவாக உரியவாறு குழாய்களை பொருத்ததா நிலைமை காணப்படுகின்றது. மேலும், பாண்ட் வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் ஆசிரியர்கள் மேசை என்பன தேவையாகவுள்ளமை காணக்கூடியதாக உள்ளது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் மற்றும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிசெய்ய வேண்டியதுடன், வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உந்துசக்தி ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

● ஞானத்தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு நிகழ்வுகள்



வலி. மேற்கு - சுழிபுரம் பிரதேச சபைக்கு உள்ளூராட்சி உட்கட்டுமான மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் இருமாடிக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் உள்ளூராட்சி உட்கட்டுமான மேம்படுத்தல் பொறியியலாளர் ஜி. சுரேன் பூசைப் பொருட்களை பெறுவதை படத்தில் காணலாம்.
(படம்:- யாழ். மத்தி நிருபர்)



நெடுந்தீவு புனித பத்திமா தேவாலயத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அடிக்கல் நாட்டுவதைப் படத்தில் காணலாம்.
(படம்:- நெடுந்தீவு நிருபர்)



ஈவினை அ.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் கடந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இரு மாணவிகளுடன் ஏனைய மாணவிகளையும் படத்தில் காணலாம்.
(படம்:- ஏழாலை நிருபர்)



கிளிநொச்சி புன்னை நீராவி அ.த.க பாடசாலையில் அரச சார்பற்ற நிறுவனத்தினால் மைதானம் புனரமைக்கப்பட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவி ஒருவர் கிண்ணம் பெறுவதை படத்தில் காணலாம்.



சுன்னாகம் கோட்டைக்காடு அ.த.க. பாடசாலையின் தரம்-1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவில் லண்டன் சாளம்பை விழுதுகள் சமூக அபிவிருத்திக் கழகத்தின் உப-தலைவர் ஏ. தினேஸ் மாணவி ஒருவருக்கு கற்றல் உபகரணங்கள், காலணிகள் வழங்குவதை படத்தில் காணலாம். (படம்:- ஏழாலை நிருபர்)



காரைநகர் சிவகௌரி கடற்றொழிலாளர் சங்கம் கசூரினா கடற்கரைக்கு அண்மையில் மீன் விற்பனைக் கட்டடம் ஒன்றை சிரமதான முறையில் அமைத்துவருவதைப் படத்தில் காணலாம்.
(படம்:- வட்டுக்கோட்டை நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதத்துக்கான சச்சினின் பயணம்



உலகப் புகழ்பெற்ற நபரும் கிரிக்கெட் உலகில் பல சாதனைகளை படைத்து வருபவருமான இந்திய அணியின் நட்சத்திர வீரர், கிரிக்கெட்டின் உலக நாயகன் சச்சின் ரமேஷ் டெண்டுல்கர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி தனது 38 ஆவது அகவையில் காலடி வைக்கின்றார்.

கிரிக்கெட் உலகில் சுமார் 21 வருடங்களாக துடிப்புமிக்கவராக வலம் வருகின்ற சச்சின் அனைவராலும் மதிக்கப்படுகின்றவராகவும் காணப்படுகிறார். பணிவும் மரியாதையும் மிக்க நல்ல குணாம்சங்களைக் கொண்ட இவர் எவருமே எட்ட முடியாத சாதனைகளை தனதாக்கிக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் தனது 100 ஆவது சதத்தை எட்டுவதற்கு காத்திருக்கின்ற சச்சினுக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்ற மேற்கிந்தியத்தீவுகளுடனான போட்டி வாய்ப்பாக அமைந்துவிடும் என்பது இந்திய ரசிகர்கள் மட்டுமல்லாது, சச்சின் டெண்டுல்கரை நேசிக்கின்ற அனைவரது அவாவாகவும் காணப்படுகிறது.

1989 ஆம் ஆண்டு தனது 16 வயதில் சர்வதேச கிரிக்கட்டில் காலடி வைத்த சச்சின் பாகிஸ்தானுக்கு எதிராக தனது முதலாவது டெஸ்ட் போட்டியில்(15-20 நவம்பர் 1989) களமிறங்கிய அதேவேளை கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் போட்டிவரையில் 177 போட்டிகளில் விளையாடி, 51 சதங்களை பெற்றுசர்வதேச டெஸ்ட் அரங்கில் 14692 ஓட்டங்களை குவித்துள்ளார்.

இதேவேளை (18.12.1989)பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் களமிறங்கி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 10 உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டி வரையிலான 449 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 48 சதங்களையும் பெற்று மொத்தமாக 17953 ஓட்டங்களைப் பெற்று முன்னிலையில் காணப்படுகின்ற சச்சின் சர்வதேச கிரிக்கட் போட்டிகளில் 99 சதங்களை அடைந்து மொத்தமாக 32 ஆயிரத்து 645 ஓட்டங்களை பெற்ற முதலாவது வீரர் என்ற சாதனை நாயகனாகவும் திகழ்கின்றார்.

இதேவேளை 44 இருபதுக்கு 20 ஓவர் போட்டிகளில் விளையாடியுள்ள சச்சின் டெண்டுல்கர் 11 அரைச் சதங்களுடன் மொத்தமாக 1516 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

சதங்களின் சாதனை நாயகனாகவும் கிரிக்கெட்டின் அகராதியாகவும் வர்ணிக்கப்படுகின்ற சச்சின் டெண்டுல்கர் தொடர்பில் பல விமர்சனங்கள் எழுந்து கொண்டிருப்பதையும் தவிர்க்க முடியாதிருக்கிறது. அரங்கு நிறைந்த ரசிகர்கள் சச்சினின் ஆட்டத்தில் சொக்கி நிற்கும் அதேவேளை அவரது ஆட்டம் சற்று சூடுபிடித்து விட்டால் அரங்கிலுள்ள மகிழ்ச்சிப் பேரொளி வானை கிழித்துக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகத்துக்கே இடமிருக்காது.

இவ்வாறு ரசிகர்களின் பேராபிமானத்தை வென்ற சச்சின் இதுவரையில் 20 ஒருநாள் போட்டிகளில் ஓட்டமெதனையும் பெறாது பூஜ்ஜியத்துக்கே ஆட்டமிழந்த வரலாறும் உண்டு.

அது மட்டுமல்லாது ஒரு ஓட்டத்தை பெற்ற நிலையில் 20 போட்டிகளிலும் 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 16 போட்டிகளிலும் 3 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 10 போட்டிகளிலும் 4 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 14 போட்டிகளில் 5 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 9 போட்டிகளிலும் 6 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 9 போட்டிகளிலும் 7 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 9 போட்டிகளிலும் 8 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 11 போட்டிகளிலும் 9 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 4 போட்டிகளிலும் 10 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 6 போட்டிகளிலும் ஆட்டமிழந்து ரசிகர்களை ஏமாற்றி சென்றுள்ளார்.

இதேவேளை 3 தடவை 99 ஓட்டங்களைப் பெற்று ஒரு ஓட்டத்தால் சதத்தை நழுவவிட்ட கசப்பான சந்தர்ப்பங்களும் அவருக்கு அமைந்திருந்தன. அது மட்டுமல்லாது 98 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஒரு ஆட்டத்திலும் 97ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 2 ஆட்டங்களிலும் ஆட்டமிழந்து சென்றமை அவருக்கு பெருத்த ஏமாற்றமாகவே அமைந்தது.

இது இவ்வாறிருக்க, சச்சின் டெண்டுல்கர் ஒருநாள் போட்டிகளில் சதம் கடக்கின்ற அநேக போட்டிகள் தோல்விகளை சந்திப்பதாகவே ஐதீகம் ஒன்று இருந்து வருகின்றது. இதில் எந்தளவு உண்மைத்தன்மை காணப்படுகிறது என்பது அறியப்படாததாகும். ஏனெனில் போட்டி தோல்வியடைவதற்கு சச்சின் டெண்டுல்கரின் சதம் காரணமாக அமைகின்றது என்பது ஏற்றுக் கொள்ள முடியாததாகும். வெற்றியை முழு அணியும் அனுபவிக்கின்ற அதேவேளை தோல்வியை மாத்திரம் ஒருவர் மீது சுமத்திவிடுவது நியாயமானதல்ல.

தற்போது நடைபெற்று வருகின்ற உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் சச்சின் சதமடித்திருந்தார். ஆயினும் அந்தப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இது இந்திய அணிக்கு பலத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருந்த அதேவேளை இறுதியாக நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான போட்டியில் சதமடித்தும் அந்த போட்டி தோல்வியிலேயே முடிவடைந்தது.

இதனால் இந்திய அணி பாரிய நெருக்கடியையும் சந்தித்திருக்கின்றது. எவ்வாறிருப்பினும் மேற்படி 2 போட்டிகளினது முடிவுகளுக்கு தோல்வியடைந்தமைக்கு சச்சின் டெண்டுல்கரின் சதத்தை விட அன்றைய

**ஜே.ஜி. ஸ்டீபன்**

தினத்தின் பந்துவீச்சு, துடுப்பாட்டம் மற்றும் களத்தடுப்பு ஆகியவற்றினையே காரணமாக கூற முடியும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இங்கிலாந்துடனான போட்டியில் இந்திய அணியின் பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு மோசமாக அமைந்திருந்தது.

அதேபோல் தென்னாபிரிக்காவுடனான போட்டியில் சச்சின் டெண்டுல்கர், ஷெவாக் மற்றும் கௌதம் காம்பீர் ஆட்டமிழந்து சென்றதன் பின்னர் ஏனைய வீரர்கள் 29 ஓட்டங்களை பெறுவதற்கு ஆட்டமிழந்து ஏமாற்றத்தை அளித்தனர். இதுவே தென்னாபிரிக்காவுடான போட்டி தோல்வியடைவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. மாறாக சச்சினின் சதம் இந்த தோல்விக்கு எந்த விதத்திலும் காரணியாக அமைந்து விடவில்லை.

இது இவ்வாறிருக்க எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்ற மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியில் சச்சின் சதம் பெற்று கிரிக்கட் உலகில் 100ஆவது சதத்தை பெற்ற சாதனை நாயகன் என்ற பெயரை நிலை நிறுத்தி அன்றைய போட்டியில் இந்திய அணி வெற்றி பெற வழிவகுக்க வேண்டுமென்பதே இந்திய ரசிகர்களின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பாக அமைந்திருக்கின்றது.

**10 ஆவது உலகக் கிண்ணத் தொடரை பங்களாதேஷுடன் ஆரம்பித்து வைத்த இந்திய அணி வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்ற எதிர்பார்ப்புகளுக்கு மத்தியிலான மேற்கிந்திய தீவுகளுடனான மோதலுடன் முதலாவது சுற்றினை முடிவுக்கு கொண்டு வருகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday March 18, 2011